2017 மார்ச் 15
புதன்
விலை: 20/-

ஹிஜ்ரி 1438 ஜ.ஆகிர் பிறை 15 | பக்கங்கள் 12 | மணி 03 | ஒளி 043

QD / 154 / NEWS / 2017

NAVAMANI DAILY
නවමණී දිනපතා
# நவமணி
தமிழ்பேசும் மக்களின் சுதந்திரமான குரல்



வரி விதித்தால் வணிகப்போர் வெடிக்கும்
10 »



மஹிந்தவின் நாமத்தில் அரசியல் வியாபாரம் நடக்கின்றதா?
04 »

## அர்ஜுன் மகேந்திரனிடம் 7 மணி நேரம் விசாரனை

மத்தியவங்கி பிணை முறிகள் தொடர்பில் முன்னாள் மத்தியவங்கி ஆளுநர் அர்ஜுன் மஹேந்திரன் மூன்றாவது நாளாகவும் நேற்று ஜனாதிபதி ஆணைக்குழுவில் ஆஜராகியிருந்தார்.

தனது சட்டத்தரணிகளுடன் ஆணைக்குழு முன் ஆஜரான முன்னாள்
11 »»»»»



# டெங்கு நோய் ஒழிப்புக்கு கிண்ணியாவில் துரித நடவடிக்கை

## ஜனாதிபதி அமைச்சர்களுக்கு பணிப்புரை
## றிஷாத் ராஜித பேச்சில் முக்கிய முடிவுகள்
## கொழும்பிலிருந்து டாக்டர் தாதியர் குழு
## அவசர தேவைக்கு 2 கோடி ரூபா ஒதுக்கீடு
## டெங்கு ஒழிப்பில் முப்படையினர்

■ சுஐப் எம். காசீம்,
■ ஏ.எச்.எம்.ஹுஸைன்,
■ ஆர். ஹஸன்

கிண்ணியாவில் தீவிரமாக பரவி வரும் டெங்கு காய்ச்சலைக் கட்டுப்படுத்துவதற்கு துரித நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று சுகாதார அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்னவுக்கும், அனர்த்த நிவாரண அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பாவுக்கும் பணிப்புரை வழங்கினார்.

லண்டன் விஜயத்தை முடித்துக்கொண்டு நேற்று தாயகம் திரும்பிய கைத்தொழில் வணிக
11 »»»»»



## கிண்ணியாவை அச்சுறுத்துவது புது வகையான வைரஸா?

### ஆய்வு நடத்தப்படுகிறது என்கிறார் டாக்டர் சமீம்

கிண்ணியாவில் நுளம்பு மூலம் ஏற்படும் வைரஸ் வித்தியாசமான கூடுதலான வீரியத்தை கொண்டிருப்பது குறித்து விசேட ஆய்வு மேற்கொள்ள நடவடிக்கை எடுத்திருப்பதாக கிண்ணியா வைத்தியசாலை அத்தியட்சகர் டாக்டர் ஏ.எச்.எம். சமீம் தெரிவித்தார்.

கிண்ணியாவில் டெங்கு நுளம்பு காரணமாக
11 »»»»»



## பஷில், நடாவுக்கு அழைப்பாணை

மல்வானை பகுதியில் காணியொன்று கொள்வனவு செய்தமை தொடர்பில் முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ மற்றும் திருக்குமார் நடேசன் ஆகியோருக்கு எதிர்வரும் மே மாதம் 03 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

கம்பஹா மேல் நீதிமன்ற நீதிபதி பிரியந்த பெர்னாண்டோ இந்த அழைப்பாணையை இன்று விடுத்துள்ளார்.
11 »»»»»

## ரீட்டா ஐசக்கின் அறிக்கை இன்று ஐ.நா.வில் விவாதம்



■ அ. அருண் பிரசாந்த்

சிறுபான்மை இனங்கள் மற்றும் மக்கள் தொடர்பில் ஆராயும் ஐ.நாவின் விசேட நிபுணர் ரீட்டா ஐசாக்கின் இலங்கை விஜயம் குறித்து ஐ.நாவில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை தொடர்பிலான விவாதம் இன்று இடம்பெறவுள்ளது.

ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவையின் 34 ஆவது கூட்டத்தொடர் கடந்த மாதம் 27 ஆம் திகதி ஆரம்பமாகி எதிர்வரும் 24 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது. இக்கால கட்டத்தில் இலங்கை தொடர்பில் விவாதிக்கப்படவிருந்த மூன்று அறிக்கைகளுள் முதலாவது அறிக்கையானது மார்ச் 2 ஆம் திகதி மனித
11 »»»»»

## டெங்கை கட்டுப்படுத்த மக்கள் ஒத்துழைக்க வேண்டும்

### அரச வைத்திய அதிகாரிகள் சங்கம்

■ ஆதில் அலி சப்ரி

கிண்ணியாவுக்கு விஷேட வைத்திய குழுவொன்றை அனுப்புவதற்கு
11 »»»»»



## இலங்கை கொடியுடன் பயணித்த கப்பல் சோமாலிய கொள்ளையர் வசம்?

சோமாலிய கடற்கொள்ளையர்களால் கடத்தப்பட்டதாக கூறப்படும் கப்பலில் இருந்த எட்டு ஊழியர்களும் இலங்கையர்கள் என நம்புவதாக இலங்கை கடற்படை தெரிவித்தது.
11 »»»»»

## கிழக்கின் வெற்றிடங்களுக்கு பட்டதாரிகள் நியமனம்

### திறைசேரி பேச்சில் தீர்மானம்

கிழக்குமாகாணத்தின் வேலையற்ற பட்டதாரிகளின் நியமனங்கள் தொடர்பான கலந்துரையாடல் நேற்று பிற்பகல் 2 மணிக்கு நிதியமைச்சின் ரன்தொர கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதில் கிழக்குமாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர்அஹமட், பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் ஆலோசகர்
11 »»»»»



## புதிய அரசமைப்பின் அவசியத்தை உணர்த்தும் வேலைத்திட்டம்

### இன்று முதல் ஆரம்பம்

■ அ. அருண் பிரசாந்த்

புதிய அரசமைப்பொன்று நாட்டுக்கு அவசியம் என்பதை வலியுறுத்தி நாடளாவிய
11 »»»»»

# இலங்கையின் சர்வதேச வர்த்தக முயற்சிக்கு பொதுநலவாய நாடுகள் சாதகமான சமிக்ஞை

## லண்டனில் அமைச்சர் றிஷாட் தெரிவிப்பு

பொதுநலவாய வர்த்தக அமைச்சர்களின் அங்குரார்ப்பண மாநாடு மார்ச் 9-10 ஆம் திகதிகளில் லண்டனில் உள்ள லன்காஸ்டர் சபையில் நடந்தது. இலங்கை சார்பில் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் றிஷாட் பதியுதீன் கலந்து கொண்டார். இவருடன் அபிவிருத்தி மூலோபாய மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர் மலிக் சமரவிக்கிரமவும் இணைந்து கொண்டார்.

2018 ஆம் ஆண்டு பிரிட்டனில் நடக்க
விருக்கும் பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டை முன்னிட்டே இந்த பொதுநலவாய வர்த்தக அமைச்சர்களின் மாநாடு நடத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

மார்ச் 9ஆம் திகதி அமைச்சர் றிஷாட் பதியுதீனுக்கும் பொதுநலவாய நாடுகளின் செயலாளர் நாயகம் பற்றீசியா ஸ்கொட்லாண்டுக்கும் இடையே சந்திப்பும் இடம்பெற்றது. இதில்



பொதுநலவாய நாடுகளுக்கிடையிலான திட்டங்களின் இலங்கை முன்னேற்றம் குறித்து கலந்தாலோசிக்கப்பட்டது. பொதுநலவாய அமைப்புக்கு இலங்கை வழங்கிவரும் பங்களிப்பிற்கு செயலாளர் நாயகம் நன்றி தெரிவித்ததுடன் இலங்கைக்கான வர்த்தக நிதி வசதிகள், தற்போது நடைமுறையில் உள்ள திட்டங்களுக்கு பொதுநலவாய செயலகம் வழங்குவதற்கு ஆயத்தமாக இருக்கும் தொழில்நுட்ப உதவிகள் குறித்தும் கலந்தாலோசிக்கப்பட்டன.

இந்த உதவிகளுடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை பேச்சுவார்த்தைகள், பன்முகத்தன்மையான மூலோபாயத்தினை வடிவமைத்தல் மற்றும் ஏற்றுமதி இறக்குமதி வங்கி அமைப்பதற்கான ஆதரவும் அடங்கும். மேலும் பொதுநலவாய நாடுகள் மத்தியில் வர்த்தக ரீதியாக காணப்படும் சவால்கள் மற்றும் பல்துறைசார் வர்த்தக பிரச்சினைகள் குறித்து கவனம் செலுத்தப்பட்டது. இலங்கையினுடைய ஆக்கபூர்வமான சர்வதேச வர்த்தக நடவடிக்கைகளின் விளைவாக பொதுநலவாய நாடுகளின் ஆதரவை தொடர்ந்து பெற்றுக்கொள்ள கூடியதற்கான சாதகமாக சமிக்ஞை எட்டப்பட்டுள்ளது. இந்த முன்னோடியான லண்டன் நிகழ்வு பொதுநலவாய நாடுகளுடனான வரலாற்று ரீதியான இலங்கையின் உறவுகளை மேலும் மேம்படுத்தும்.

குறிப்பாக வளர்ச்சி செயற்றிட்ட நிகழ்ச்சி நிரல் என்ற இந்த மாநாட்டின் எண்ணக்கரு யோசனை இலங்கை போன்ற உறுப்பு நாடுகள் மத்தியில் வர்த்தகம், முதலீடு மற்றும் தொழில் வாய்ப்பு உருவாக்கம் ஆகியவற்றை ஊக்குவிக்க எமது ஐக்கிய அரசாங்கத்தின் கைத்தொழில் மற்றும் வர்த்தக துறை சீர்திருத்த தொலை நோக்கிற்கு உதவியாக அமையும் என அமைச்சர் றிஷாட் இந்த சந்திப்பில் சுட்டிக்காட்டினார்.

### பட்டமளிப்பு விழா

ஸ்ரீலங்கா தவ்ஹீத் ஜமாஅத்தின் வழிகாட்டலில் கண்டி மாவட்டம் வட்டதெனியவில் இயங்கும் இரண்டாண்டு பாடத் திட்டத்தைக் கொண்ட தவ்ஹீத் இஸ்லாமிய கல்லூரியின் முதலாவது பட்டமளிப்பு விழா எதிர்வரும் (19) ஞாயிற்றுக்கிழமை கல்லூரி வளாகத்தில் இடம்பெறும்.

தவ்ஹீத் ஜமாஅத் தலைமை நிர்வாகம் தலைமை தாங்கி நடத்தும் இந்நிகழ்வில், ஜமாத்தின் பிரசாரகர்கள், மாவட்ட மற்றும் கிளை நிர்வாகிகள், தவ்ஹீத் ஜமாஅத்தின் உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்,

### நஃஷபந்தியா ராத்திபு மஜ்லிஸ்

களுத்துறை நஃஷபந்தியா தரீக்கா முன்னேற்றச்சங்கத்தின் ஆதரவில் ஒவ்வொரு மாதமும் இறுதி ஞாயிற்றுக்கிழமைகளில் நடந்தேறி வரும் முபாரக்கான நஃஷபந்தியா ராத்திபு மஜ்லிஸ்(26) ஞாயிறு அஸர் தொழுகைக்குப்பின் முஅல்லிம் ஏ.எம்.எம். பாயிஸ் முகத்தமுன் நஃஷபந்தி தலைமையில் எம்.ஏ.எம். பைரூஸ், இல 38, மபூர் கிரஸன்ம், களுத்துறை தெற்கு இல்லத்தில் நடாத்த ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

# ஒலுவில் மீன்பிடிதுறைமுக வளவில் மீனவர்கள் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம்





(ஒலுவில் அமீர்)

ஒலுவில் மீன்பிடித்துறைமுகத்தின் நுழைவாயில் கடந்த சில மாதங்களாக கடல் மண்ணால் மூடப்பட்டு ஆழ்கடல் மீன்பிடித் தொழில் முற்றாக ஸ்தம்பித நிலையை அடைந்துள்ளதை முன்னிட்டு நேற்று(14) அம்பாறை மாவட்ட மீனவர்களின் ஏற்பாட்டில் இவ்விடயம் தொடர்பாக நல்லாட்சி அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவருவதற்காக மாபெரும் கவன ஈர்ப்புப் போராட்டம் ஒலுவில் துறைமுக நுழைவாயிலின் கல்முனை அக்கரைப்பற்று பிரதான வீதியில் இடம் பெற்றது.

துறைமுகப் பகுதி கடல் மண்ணால் மூடப்பட்டுள்ளதால் மீனவ சமூகம் பாரிய பின்னடைவை எதிர் கொண்டுள்ளதுடன் இவர்களது கடற்றொழில் நடவடிக்கைகளும் முற்றாக பாதிப்படைந்துள்ளது.இவ்விடயம் சம்பந்தமாக கடந்த காலங்களில் இம்மாவட்டத்தின் அமைச்சர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் மாகாண அமைச்சர்கள் மாகாண சபை உறுப்பினர்களின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டு அதற்கு தீர்வாக மண் அகழ்வதற்கு கப்பல் ஒன்றும் துறைமுகத்திற்கு அனுப்பப்பட்டது.

ஆனால் இப்பணிகளில் ஏற்பட்ட கால தாமதம் தொடர்ச்சியான சேவை இல்லாமை போதிய நிதிவசதி இல்லாமை துறைமுக அமைச்சின் பூரண ஒத்துழைப்பு கிடைக்காமை போன்ற காரணங்களால் குறித்த மண் அகழ்வு தடைபட்டது. முழுமையாக மண் அகற்றப்படாமல் கப்பல் தனது பணிகளை இடைநிறுத்தி துறைமுகத்தை விட்டு வெளியேறி விட்டதனால் எமது மீனவர் சமூகம் ஏமாற்றம் அடைந்துள்ளதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர். ஆர்ப்பாட்டத்தில் அதிகாலை 7.30 மணியளவில் கலந்து கொண்ட மக்கள் அங்குள்ள மகஜரில் கையொப்பங்களை இட்டனர்.

இதன் போது கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஏ.எல்.எம்.நஸீர் அங்கு வருகை தந்து மீனவர்களின் குறைபாடுகளை கேட்டறிந்து கொண்டதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

இதன் போது அட்டாளைச்சேனை பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் தமீம் ஆப்தீனும் கலந்து கொண்டார்.இவ் ஆர்ப்பாட்டத்தினை கல்முனை கரையோர மாவட்ட மீனவ கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்,அம்பாறை மாவட்ட ஆழ்கடல் இயந்திரப் படகு உரிமையாளர்கள் சங்கம் மற்றும் கல்முனை மாவட்ட கடற்றொழில் அமைப்பு இணைந்து நடாத்தியமை குறிப்பிடத்தக்கதாகும்.

### வாய்க்கால் சுத்திகரிப்பின்மையால் மக்கள் அசௌகரியம்

(பேருளை பி.எம். முத்தார்)

பேருவளைப் மருதானை வத்திமிராஜபுர வீடமைப்புத் திட்டத்திற்கு அருகாமையில் உள்ள கழிவுநீர் வாய்க்கால் சுத்திகரிக்கப்படாமையினால் அசுத்தநிலையில் காணப்படுகிறது. இதனால் சுற்றாடலுக்கும் சுகதாரத்திற்கும் பெரும் பங்கம் ஏற்பட்டுள்ளது. இவ்வாய்க்காலினுள் குப்பை கூளங்கள், வெட்டப்படும் மரக்கிளைகள், வெற்றுப் போத்தல்கள், பொலித்தீன் உறைகள் வீசப்படுவதனால் வாய்க்காலில் அசுத்த நீர் வடிந்துசெல்ல முடியாது தடைப்பட்டுள்ளது.

இந்த வாய்க்கால் நகரசபை மூலம் பல தடவை சுத்திகரிக்கப்பட்ட போதிலும் இந்தவாய்க்காலில் குப்பை கூளங்களை கொட்டுவதனால் மீண்டும் மீண்டும் அசுத்தமடைந்து விடுகிறது. கழிவு நீர் முறையாக வடிந்து செல்ல முடியாது தடைபட்டுள்ளதனால் துர்வாடையும் வீசுகிறது. இதனால் மக்கள் பல அசௌகரியங்களுக்கு முகம்கொடுக்க வேண்டியேற்பட்டுள்ளது.

# ஹுனுப்பிட்டிய அஹதியாவில் வருடாந்த பரிசளிப்பு

(அஷ்ரப்.ஏ சமத்)

வத்தளை ஹூனுப்பிட்டிய திப்திகொடஅல் முகையதீன் அஹதியா பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா ஹுனுப்பிட்டிய சாந்தி மண்டபத்தில் அஹதியா பாடசாலையின் அதிபர் முஜிபுர் ரஹ்மான் தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் பொலிஸ் அதிகாரி பண்டார, பிரதம பேச்சாளராக எம். தஹ்லான் ஆகியோரும் கலந்து கொண்டனர். மாணவர்களது இஸ்லாமிய நிகழ்வுகள் மற்றும் பரிசளிப்புக்களும் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் உரையாற்றிய பொலிஸ் அதிகாரி,

இந்த நிகழ்வுக்கு வரும்முன் ஒரு முச்சக்கர வண்டியை நிறுத்தி பரிசோதித்தேன். உங்களது பிள்ளைகளான 18,17 வயது மாணவர்களது காற்சட்டைக்குள் இரண்டு சிறிய கஞ்சா பொதிகள் இருந்தது. பெற்றோர்களாகிய நீங்கள் உங்களது குழந்தைகளை கண்ணும் கருத்துமாக வைத்துக் கொள்ளுங்கள். அவர்களுக்கு மார்க்கக் கல்வியை புகட்டி போதைவஸ்து, குற்றங்களில் இருந்து பாதுகாத்துக் கொள்ளுங்கள். வீடுகளில் தாய் , தந்தை பிள்ளைகள் என்ற பிணைப்பு இல்லாமல் கையடக்க தொலைபேசியினால் தள்ளி இருக்கின்றனர்.



தமது பிள்ளையுடன் தகப்பன் நல்ல நண்பன் போல பழகவேண்டும். அவர் 24 மணித்தியாலயமும் சமூக வலைத்தளங்களிலே காலத்தை கழிக்கின்றனர். அவரின் முகநூலின் நண்பர்கள் ஒரு கெட்ட நண்பராக இருந்தால் அவர் இளைஞர் பருவத்தில் குற்றங்கள், போதைவஸ்து, பழக்கம் இளவயதிலே பாலியல் போன்றவற்றில் ஈடுபட சந்தர்ப்பம் உண்டு. இதனை மார்க்க ரீதியாகவும் ஆன்மீக ரீதியாகவும் தமது பிள்ளைகளை சீர்படுத்துங்கள் என பொலிஸ் அதிகாரி பண்டார தெரிவித்தார்.

# தோட்ட உத்தியோகத்தர்கள் கண்டியில் ஆர்ப்பாட்டம்

(வத்துகாமம் நிருபர்)

தோட்ட உத்தயோகஸ்தர்கள் (அலுவலகர்கள்) சங்கம் எதிர்வரும் 19ஆம் திகதி கண்டியில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை ஒழுங்கு செய்துள்ளர். குறிப்பிட்ட சில தொழிற் சங்கக் கோரிக்கைகளை முன்வைத்து விழிப் புணர்வுப் போராட்டம் ஒன்றை மேற் கொள்ளத் திட்டமிட்டுள்ளனர்.

25 சதவீத சம்பள உயர்வு, தொழிலாளர்களது கூட்டு ஒப்பந்த காலத்தை இரண்டு வருடமாகக் குறைத்தல் உட்பட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்துப் பேராடுகின்றனர். நாடு தழுவிய போராட்டத்தை அவர்கள் கட்டம் கட்டமாக நடத்தி வருகின்றனர். அதில் ஒரு கட்டமாக எதிர்வரும் 19ஆம் திகதி கண்டியில் நடத்தத் திட்டமிட்டுள்ளனர்.இலங்கை தோட்ட சேவையாளர் சங்கத்தில் அங்கம் வகிக்கும் தோட்ட உத்தியோகத்தர்களே இதனை மேற்கொள்ளவுள்ளனர்.

# வத்துபிட்டிவல வைத்தியசாலையில் வைரஸ்; அவசர சிகிச்சைப் பிரிவுக்கு பூட்டு

( மினுவாங்கொடை நிருபர் )

கம்பஹா மாவட்ட வத்துபிட்டிவல தள வைத்திய சாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில், ஒருவகையான வைரஸ் தொற்றுக் கிருமிகள் பரவியுள்ளதன் காரணமாக, அந்தப் பிரிவு தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாக, வைத்தியசாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இந்த வைத்தியசாலையின் இப் பிரிவில், கடந்த சில நாட்களுக்கு முன் இவ்வாறான இனந்தெரியாத வைரஸ் தொற்றுக் கிருமிகள், மிகவும் வேகமாகப் பரவியுள்ளதாகத் தெரியவந்ததையடுத்தே, இப் பிரிவைத் தற்காலிகமாக மூடிவிடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டதாக, வைத்தியசாலையின் பிரதான வைத்திய அதிகாரி சிசிர விஜேசூரிய தெரிவித்துள்ளார்.

இப் பிரிவில் தற்போது வெளி நோயாளர்கள் எவரும் அனுமதிக்கப்படுவதில்லை. துப்புரவாக்கும் பணிகளும் சுகாதாரப் பணிமனையினராலும், இங்குள்ள ஊழியர்களினாலும் மிகத் துரிதமாக இடம்பெற்று வருவகிறது. வெளி நோயாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, வைத்தியசாலையின் இப் பிரிவின் பணிகள் யாவும் தற்போது மட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றன. இனந் தெரியாத இந்த வைரஸ் தொற்றுக் கிருமிகளிலிருந்து மக்களையும் நோயாளர்களையும் பாதுகாக்கும் பொருட்டே, இவ்வாறான முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் டாக்டர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், இந்த வைரஸ் இப்பிரிவில் மேலும் பரவாமல் இருப்பதற்காக, பாதுகாப்புப் பெறும் நடவடிக்கைகள், மிகத் தீவிரமாக முடக்கிவிடப்பட்டுள்ளதுடன், துப்புரவுப் பணிகள் நிறைவடைந்ததும், ஒரு வார காலத்திற்குள் இப் பிரிவை மீண்டும் திறப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுமெனவும், இதனால் நோயாளர்கள் எவரும் அச்சம் கொள்ளத் தேவையில்லை எனவும் டாக்டர் விஜேசூரிய தெரிவித்தார்.







அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணியின் யாழ்.மாவட்ட சம்மேளனமும், யாழ்.நுழைவாயில் லயன்ஸ் கழகமும் இணைந்து நடாத்திய மூக்குக்கண்ணாடி வழங்கும் நிகழ்வு அண்மையில் யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியில் இடம்பெற்றபோது பிடிக்கப்பட்ட படங்கள். (எம்.எல். லாபிர்)

# உலக நுகர்வோர் உரிமைகள் தினம் - 2017

# தேசிய மாநாடு



"டிஜிட்டல் யுகத்தின் நுகர்வோர் உரிமைகள்" தொடர்பாகவே இம்முறை நுகர்வோர் உரிமைகள் தினத்திற்காக சர்வதேசம் தனது முதன்மையான அவதானத்தைச் செலுத்தியுள்ளது. இது அவதானம் செலுத்தப்பட வேண்டிய முக்கியமான பிரிவு என்பதே எனது நம்பிக்கையாகும்.

பெரும்பாலான அபிவிருத்தியடைந்த நாடுகளில் டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் ஊடாக பொருட்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கு விரிவான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இலங்கை போன்ற அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளிலும் டிஜிட்டல் தொழில்நுட்ப முறையினூடாக பொருட்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் முறை வெகுவாக அதிகரித்து வருகின்றது.


பல்வேறு துறைகளும் தற்போது விரைவான டிஜிட்டல் மயமாக்களுக்கு உள்ளாகி வருகின்றன. தகவல் தொழில்நுட்பம், வங்கி செயற்பாடுகள், விவசாயம், மருத்துவம் மற்றும் பொறியியல் துறை என்பன அவற்றுள் முதன்மையாகும். வர்த்தக நடவடிக்கைகள் இலகுவாகவும், சரியாகவும் நடைபெற வேண்டியதுடன் நுகர்வோரின் உரிமைகளுக்கு உட்பட்டு சிறந்த போட்டித்தன்மையுடன் பொருட்களையும் சேவைகளையும் தேர்ந்தெடுக்க நுகர்வோருக்கு வாய்ப்பு வழங்கவேண்டியுள்ளது. இந்த பொருத்தமான தேர்ந்தெடுத்தலுக்கு டிஜிட்டல் மயமாக்கம் பேருதவியாக அமைகிறது.

டிஜிட்டல் தெழினுட்பத்தின் ஊடாக இலகுவான முறையில் சேவைகள் வழங்கப்பட்டாலும் தற்போது அதனூடாகவும் வாடிக்கையாலர்களுக்கு சில சிக்கல்களையும், சவால்களையும் எதிர்கொள்ள நேரிட்டுள்ளது.

டிஜிட்டல் யுகத்தில் நுகர்வோரைப் பாதுகாப்பதற்கு தேவையான சட்டதிட்டங்களை உருவாக்குவதுடன் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு செயற்படாத சேவை வழங்குனர்களுக்கு எதிராக சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டிய தேவை ஏற்படுகின்றது.

தர்க்கரீதியான புரிந்துணர்வுடையவர்களாக நுக்வோர் செயற்படுவதனூடாக பாதுகாப்பான நுகர்வோரை உருவாக்க வேண்டும் என்பதே. இவ்வருட நுகர்வோர் தினத்திற்கான எமது நோக்கமாக அமைதல் வேண்டும். அதற்காக நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபையினால் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த முயற்சிக்கு எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

மைத்திரிபால சிரிசேன
இலங்கை ஜனநாயக குடியரசின்
ஜனாதிபதி



பல்வேறு நுகர்வோர் கட்டமைப்புகளுக்கமைய மக்கள் வாழும் பல்லின கலாச்சார நாடொன்றில், திறந்த பொருளாதார முறையின் கீழ், நாட்டின் ஒவ்வொரு சமூகத்திற்கும் அனுகூலங்களை வழங்குதல், மற்றும் சர்வதேச ரீதியாக பலம்வாய்ந்த போட்டி நிறைந்த சந்தை பொருளாதார கட்டமைப்பை ஏற்படுத்துவதும் எமது அரசாங்கத்தின் நோக்கமாகும். இந்த பொருளாதார முறைமையின் கீழ் நுகர்வோரின் உரிமைகளை பாதுகாப்பது தொடர்பாக நாம் அதிக கவனம் செலுத்துகின்றோம்.

உலகமே நவீன தொழில்நுட்பத்துடன் கைகோர்த்துள்ள தருணத்தில் சர்வதேச நுகர்வோர் உரிமைகள் தின தொனிப்பொருளாக டிஜிட்டல் யுகத்தில் நுகர்வோரின் உரிமை என பெயரிடப்பட்டிருப்பது காலத்தின் தேவை என்பதே எனது நிலைப்பாடாகும்.

டிஜிட்டல் யுகத்தை நோக்கி பயணிக்கும் எமது நாட்டுக்கு தேவையான அடிப்படை வசதிகளை செய்து கொடுத்தல், புதிய தொழில்நுட்ப வளர்ச்சிகளை கண்டு நாட்டுக்கு உகந்த விதத்தில் உரிய முகாமைத்துவத்துடன் செயற்படுத்துதல், அனைத்து பிரஜைகளுக்கும் ஏற்ற வகையில் பாதுகாப்பான இணையத்தள வசதிகளை வழங்குதல் உள்ளிட்ட டிஜிட்டல் பாவனை தொடர்பாக சமூகத்தை தெளிவுபடுத்தல் உட்பட எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் பல உள்ளன.

அந்த பாரிய செயற்றிட்டத்தின் நுகர்வோர் உரிமைகளை பாதுகாக்க நேரடியான பங்களிப்பை வழங்கும் நுகர்வோர் விவகார அதிகார சபையானது, கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சரின் வழிகாட்டலின் கீழ் ஏற்பாடு செய்துள்ள சர்வதேச நுகர்வோர் உரிமைகள் தினத்தை முன்னிட்டு எனது வாழ்த்துக்களை தெரிவிக்கின்றேன்.

ரணில் விக்ரமசிங்க
இலங்கை ஜனநாயக குடியரசின்
பிரதமர்



சர்வதேச நுகர்வோர் உரிமைகள் தினத்தின் தொனிப்பொருள் "டிஜிட்டல் யுகத்தில் நுகர்வோரின் உரிமை" ஆகும். நுகர்வோரின் உரிமைகளை பாதுகாப்பதற்காக கட்டமைப்பொன்றை நிறுவியுள்ள எமது நாடும், சர்வதேச சமூகத்துடன் இணைந்து நுகர்வோர் தினத்தை கொண்டாடும் இத்தருணத்தில், விடயத்திற்கு பொறுப்பான அமைச்சராக அதற்கான பங்களிப்பு வழங்க எனக்கு கிடைத்த சந்தர்ப்பத்தை பெரும் பாக்கியமாக கருதுகின்றேன்.

பொருட்கள் மற்றும் சேவைகளை பரிமாற்றுவதன் ஊடாக ஆரம்பமான வர்த்தகம், விஞ்ஞான வளர்ச்சி காரணமாக இன்று டிஜிட்டல் யுகம் வரை வளர்ந்துள்ளது.

டிஜிட்டல் தொழில்நுட்பம் காரணமாக அனைத்து வர்த்தக நடவடிக்கைகளும் இன்று அசாதாரணமாக திறந்துவிடப்பட்டுள்ளது. இதன் காரணமாக நுகர்வோர் உரிமைகளை பாதுகாப்பது பெரும் சவலாகக் காணப்படுகின்றது.

இத்தகைய நிலைமையின் கீழ் நாட்டின் வர்த்தக நடவடிக்கைகளை விஸ்தரித்து, நுகர்வோரின் உரிமைகளை பாதுகாப்பதற்காக எனது அமைச்சின் கீழுள்ள நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை மற்றும் அதன் உத்தியோகத்தர்கள் குழு எடுக்கும் முயற்சிகளை பாராட்டுகின்றேன். சர்வதேச நுகர்வோர் உரிமைகள் தினத்தை கொண்டாட டிஜிட்டல் வசதிகள் கட்டமைப்பு அமைச்சு வழங்கும் பங்களிப்பு எமக்கு பலம் சேர்க்கின்றது. அவர்களுக்கும் எனது நன்றிகள்.

நவீன தொழில்நுட்பத்தை பொறுப்புடன் பயன்படுத்துவதன் காரணமாக வர்த்தகத்துடன் இணைந்த செயற்பாடுகள் இலகுவாகும் என்பதுடன், நாட்டின் ஏனைய நிர்வாக மற்றும் நிதி நடவடிக்கைகளுக்கு பாரிய உந்துசக்தியாகவும் அது அமையும். நாட்டின் பொருளாதாரம் மற்றும் வர்த்தகம் அபிவிருத்தி அடைவதற்கும், நுகர்வோரின் உரிமைகளை பாதுகாப்பதற்கும் தேவையான தகவல்களை வழங்குவதும், வழிகாட்டல்களை மேற்கொள்வதும் எமது பிரதான நோக்கமாகும். அத்துடன் டிஜிட்டல் யுகத்தை நோக்கி நாட்டை கொண்டு செல்வதற்கு முன்னோடி சேவைகளை வழங்கும் எமது அமைச்சுக்கு, கௌரவ ஜனாதிபதி மற்றும் கௌரவ பிரதமர் ஆகியோரிடமிருந்து கிடைக்கும் ஒத்துழைப்பும், வழிகாட்டலும் இன்றியமையாததாகும்.

சர்வதேச நுகர்வோர் உரிமைகள் தினத்திற்கு அமைவாக நுகர்வோர் விவகார அதிகார சபை ஊடாக நடைமுறைப்படுத்தப்படும் அனைத்து நடவடிக்கைகள் ஊடாக சிறந்த வர்த்தக சூழலில் பாதுகாப்பான ஒரு நுகர்வோரை உருவாக்க நாம் எடுக்கும் பிரயத்தனம் வெற்றிபெறும் என்பதே எனது நம்பிக்கையாகும்.

றிஷாட் பதியுத்தீன்
வணிக மற்றும் கைத்தொழில்
அமைச்சர்



மார்ச் 15ம் திகதி கொண்டாடப்படுகின்ற நுகர்வோர் உரிமைகள் தினம் உலக வாழ் அனைத்து நுகர்வோருக்கும் மிக முக்கியமான நாளாகும். இம்முறை தொனிப்பொருள் காலத்திற்கு தேவையான முக்கியத்துவத்தை பெற்று அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ளது என்பதே எனது கருத்தாகும்.

டிஜிட்டல் யுகத்தில் நுகர்வோரின் உரிமைகளை பாதுகாக்க வேண்டியது அவசியமாகும். வர்த்தக சந்தையில் நுகர்வோர் மன்னனுக்கு சமம் என்ற போதிலும், புதிய வர்த்தக சந்தையில் வர்த்தகர்களால் பயன்படுத்தப்படும் வர்த்தக உபாயங்களான பிரச்சாரம் மற்றும் விற்பனை ஊக்குவிப்பு தந்துரோபாயங்கள் ஊடாக நுகர்வோர் வர்த்தக உலகின் வலையில் சிக்கப்படுகின்றார்கள் என்பதை காண முடிகின்றது.

அத்தகைய தந்திராபாயத்திலிருந்து நுகர்வோரை பாதுகாக்கும் செயற்பாட்டுக்கு தலைமை வகிப்பதே நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையின் முன்னணி செயற்பாடாக இருக்க வேண்டும். கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் ரிசாட் பதியுத்தீனின் வழிகாட்டலின் கீழ் வர்த்தக சந்தையை விரிவாக்கும் திட்டத்திற்கு எமது அமைச்சின் கீழுள்ள நுகர்வோர் விவகார அதிகார சபை வழங்கும் பங்களிப்பு இன்றியமையாதது.

நாட்டின் முதற் குடிமகனான கௌரவ ஜனாதிபதியின் தலைமையில் தேசிய வைபவம் நடைபெறவுள்ளது. வர்த்தகர்களின் பிடியிலிருந்து நுகர்வோரை பாதுகாக்கும் தேசிய பிரயத்தனத்திற்கு தோள் கொடுக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ள நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபைக்கு எனது வாழ்த்துக்கள்.

நாட்டின் முதற் குடிமகனான கௌரவ ஜனாதிபதியின் தலைமையில் தேசிய வைபவம் நடைபெறவுள்ளது. வர்த்தகர்களின் பிடியிலிருந்து நுகர்வோரை பாதுகாக்கும் தேசிய பிரயத்தனத்திற்கு தோள் கொடுக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ள நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபைக்கு எனது வாழ்த்துக்கள்.

சம்பிக்க பிரேமதாச
வணிக மற்றும் கைத்தொழில்
பிரதி அமைச்சர்



நுகர்வோர் பாதுகாப்பானது நிகழ்காலத்தில் அதிக அச்சுறுத்தல்களை எதிர்கொண்டுள்ள துறை என்பது கடந்த கால அனுபங்கள் மற்றும் சம்பவங்களை பார்க்கும்போது புலனாகின்றது. 70வது தசாப்த நடுப்பகுதியில் ஏற்பட்ட திறந்த பொருளாதார கொள்கையுடன் மக்களின் பாவனையில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டதால், நுகர்வோரின் தேவைகளும் பல்வேறு மாறுதல்களுக்கு உள்ளானது.


சமூகத்தின் அடிப்படை தேவையை பூர்த்தி செய்வதற்கு மக்களுக்குள்ள உரிமைகளை பெற்றுக்கொள்வதற்கான தேவையான அனைத்து பாதுகாப்பையும் வழங்க நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும். விசேடமாக உணவு, ஆடை, சுகாதாரம் போன்ற துறைகள் தொடர்பாக அதிக கவனத்துடனும் புரிந்துணர்வுடனும் இருக்க வேண்டும்.

நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையானது, ஒழுங்குபடுத்தும் நிறுவனம் என்ற வகையில் செயற்படும்போது மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தவும், சாதாரண போட்டியுடன் குணநலன் கொண்ட பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கும் சந்தையை நிர்மாணிப்பதற்கு தேவையான ஆரம்ப கட்ட பணிகளை முன்னெடுக்க வேண்டும்.

சர்வதேச நுகர்வோர் உரிமை தினத்தை மையப்படுத்தி, செயற்படுத்த எதிர்பார்க்கும் திட்டங்களை தொடர்ச்சியாகவும் செயற்திறன் மிக்க வகையிலும் செயற்படுத்தி செல்வதன் ஊடாக சந்தையில் நுகர்வோர் பாதுகாப்பாக இருக்கலாம். புதிய தொழில்நுட்பத்தை மனிதனுக்கேற்ற விதத்தில் பயன்படுத்தி டிஜிட்டல் யுகம் நோக்கி செல்வது மிக முக்கியமானதாகும் நாணயம் மற்றும் ரூபா நோட்டுக்களின் பாவனை தற்போது குறைவடைந்துவிட்ட அதேவேளை, இலக்ரோனிக் கொடுப்பனவு முறையை மேம்படுத்துவதன் ஊடாக நாட்டுக்கு கிடைக்கும் பிரயோசனங்கள் அதிகம் என நான் நினைக்கின்றேன். ஏனெனில் கொடுப்பனவுகள் உரிய வகையிலும் சட்ட திட்டங்களுக்கு அமையவும் இடம்பெறுவதால் அதன் ஊடாக அரச வரி வருமானம் அதிகரிக்க வாய்ப்பு உண்டு.

கௌரவ பிரதமரின் வழிகாட்டலின் கீழ் இம்முறை சர்வதேச நுகர்வோர் உரிமைகள் தினம் கௌரவ ஜனாதிபதியின் தலைமையின் கீழ் நடத்த நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையால் முடிந்தமையானது சிறந்த மைற்கல் என்றே நான் கருதுகின்றேன்.

சின்தக்க லெக்குஹெட்டிகே
செயலாளர்
வணிக மற்றும் கைத்தொழில் அமைச்சு



சர்வதேச நுகர்வோர் உரிமைகள் தினம் என்பது அனைத்து பாவனையாளர்களுக்கும் மிக முக்கியமான நாளாகும். எல்லா நாட்களும் நுகர்வோர் என்ற வகையில் செயற்பட்டு கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடும் நம் அனைவருக்கும் அந்த செயற்பாட்டிலுள்ள உரிமைகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான மேம்பாட்டை வழங்குவது நுகர்வோர் விவகார அதிகார சபை என்ற வகையில் எமது முதன்மை பொறுப்பாகும் என உணர்ந்துள்ளோம்.

ஒவ்வொரு வருடமும் மார்ச் 15ம் திகதி கொண்டாடப்படும் இந்த தினத்திற்கு அமைய நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை இலங்கையின் உத்தியோகபூர்வ பிரதிநிதி என்ற வகையில் பல்வேறு நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்கின்றது. விசேட பிரதம விருந்தினராக கலந்துகொள்ளவுள்ள அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட உள்நாட்டு, வெளிநாட்டு பிரமுகர்களின் பிரசனத்துடன் நெலும் பொக்குன அரங்கில் நடைபெறுகின்ற தேசிய வைபவத்திற்கு அமைவாக நுகர்வோரை தெளிவுபடுத்தும் அறிவுசார்ந்த நிகழ்ச்சிகள் மற்றும் போட்டிகள் நடாத்தப்பட உள்ளன. இம்முறை தொனிப்பொருளான "டிஜிட்டல் யுகத்தில் நுகர்வோரின் உரிமை" எம்மால் அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ள துறையாகும். இலக்ரோனிக் வர்த்தகம், கடனட்டை பயன்பாடு, இணையத்தள சந்தை தொடர்பான காலத்தின் தேவைகளை அறிந்து அவற்றையும் ஒழுங்குபடுத்துவதற்கான சட்ட வரைவுகளை அமைக்க நாம் எதிர்பார்க்கின்றோம்.

அத்துடன் சர்வதேச நுகர்வோர் உரிமைகள் தினத்தை சாதாரண ஒரு நாளன்றி, அதனை சமூக கலந்துரையாடல்களுக்கு வழிகளை ஏற்படுத்தும் மேடையாக பயன்படுத்தி, நுகர்வோர் உரிமைகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான தேசிய கொள்கையை அமைப்பதற்கு சர்வதேச நுகர்வோருடன் இணைந்து கைகோர்த்து செயற்பட முயற்சிக்கின்றோம். அதற்கான நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் இலத்திரனியல் வர்த்தக துறை ஊடாக அந்த துறைக்கு அதிக பங்களிப்பு வழங்கும் அனைவரையும் ஒன்றிணைத்து எதிர்கால டிஜிட்டல் யுகத்திற்கு, நுகர்வோரை பாதுகாத்து இலத்திரனியல்

வர்த்தகத்தை ஒழுங்குபடுத்த தேவையான வழிகாட்டியை அமைப்பதற்கான கலந்துரையாடலை 2017.04.06ம் திகதி நடாத்த திட்டமிட்டுள்ளோம்.

அனைத்து நுகர்வோரின் பாதுகாப்புக்காக அர்ப்பணிப்புடன் செயற்படும் எமது அதிகார சபைக்கு பொறுப்பான கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் ரிசாட் பதியுத்தீன் மற்றும் அமைச்சு செயலாளர் வழங்கும் ஒத்துழைப்பும், வழிகாட்டலும் இன்றியமையாததாகும்.

டிஜிட்டல் யுகத்திற்கு தேவையான அடிப்படை கட்டமைப்புக்களை வழங்கி, சிறந்த நாட்டை கட்டியெழுப்ப நேரடி பங்களிப்பு வழங்க நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையால் முடியும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்கள் எம்மீது வைத்துள்ள நம்பிக்கை எமக்கு பலமாகும்.

வரலாற்றில் முதற்தடவையாக இலங்கை ஜனாதிபதி ஒருவரின் தலைமையில் நடைபெறும் வைபவம் அனைத்து நுகர்வோருக்கும் கிடைக்கும் கௌரவம். நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை தலைவர் என்ற வகையில் எனக்கும் அது பாக்கியமான தருணமாகும். வைபவத்தை சிறப்பாக நடத்த தொலைத்தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் வசதிகள் கட்டமைப்பு அமைச்சு, உள்ளிட்ட ஏனைய நிறுவனங்கள் வழங்கும் ஒத்துழைப்பையும் நான் மனதார பாராட்டுகின்றேன்.

ஹசித்த திலக்கரத்ன
தலைவர்
பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை

1977

www.caa.gov.lk

- கைத்தொழில் மற்றும் வர்த்தக விவகார அமைச்சின் கீழ் செயற்படும் சிறந்த சந்தையில் பாதுகாப்பான நுகர்வோரை உருவாக்க தமது தலையாய கடமையாக கொண்டு செயற்படும் நிறுவனம்.
- சந்தை விசாரணைகள், சுற்றி வளைப்புக்கள், நுகர்வோருக்கு சலுகை வழங்கல், விலை முகாமைத்துவம், நுகர்வோர் ஊக்குவிப்பு, நுகர்வோர் மேம்பாடு ஆகியன அதிகார சபையின் பிரதான பணிகளாகும்.
- டிஜிட்டல் யுகத்தின் நுகர்வோர் உரிமைகள் என்பது காலத்திற்கு உகந்த தொனிப்பொருளின் கீழ் இம்முறை சர்வதேச நுகர்வோர் உரிமைகள் தினம் விசேடத்துவம் பெறுகின்றது
- பண்டமாற்று ஊடாக ஆரம்பமான சந்தையானது, பணத்தாள் பரிமாற்றத்திற்கு அப்பாற் சென்று இலக்ரோனிக் பண பாவனை வரை வளர்ச்சியடைந்துள்ளது.
- பூகோள தேவைக்கேற்ப பொருந்தும் வகையில் நுகர்வோர் கேள்வியும் மாறுபட்டுக் கொண்டிருக்கும் வேளையில், அதி நவீன கையடக்க தொலைபேசி பாவனை மற்றும் இணையத்தளம் ஊடாக இடம்பெறும் கொடுக்கல் வாங்கல்கள் துரித வளர்ச்சியை காட்டுகின்றது.
- நிகழ்காலத்தில் இலங்கை சனத்தொகையில் 6 மில்லியன் பேர் இணையத்தளத்தை பயன்படுத்துவதுடன் அது சனத்தொகையின் 29% வீதமாகும். 35-44 வயதிற்குட்பட்டவர்களே அதிகளவில் இணையத்தள பாவனை செய்கின்றனர். அதற்கு அடுத்தபடியாக 25-34 வயதுக்குட்பட்டவர்கள் உள்ளனர்.
- சமூகத்திற்கு அதிக அழுத்தம் கொடுக்கும் ஊடகமாக சமூகவலைத்தளம் முன்னணி வகிக்கின்றது. அது இலக்ரோனிக் வர்த்தக சந்தைக்கான மேடையை ஏற்படுத்தி உள்ளது.
- இந்த டிஜிட்டல் புரட்சி நாட்டின் பொருளாதார பயணத்திற்கு புதிய உந்துசக்தியை கொடுத்துள்ளது.அது உரிய முறையில் முகாமைத்துவம் செய்வதற்கு தேவையான சட்ட கட்டமைப்பை தயாரிக்க அதிக கவனம் செலுத்த வேண்டிய துறையாகும்.
- அனைத்து தரப்பினரையும் இணைத்துக்கொண்டும் மற்றும் வள பங்களிப்புடன் அந்த நடவடிக்கையை ஆரம்பிக்க இந்த வருடம் மார்ச் 15ம் திகதி கொண்டாடப்படவுள்ள சர்வதேச நுகர்வோர் உரிமை தினத்திதை சந்தர்ப்பமாக பயன்படுத்துவதே எமது நோக்கம்.

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை
வணிக மற்றும் கைத்தொழில் அமைச்சு

ICTA ideas actioned

CONSUMERS INTERNATIONAL

NAVAMANI DAILY
நவமணி
தமிழ்பேசும் மக்களின் சுதந்திரமான குரல்
FREELANKA MEDIA LTD.
156, Hospital Road, Kalubowila, Dehiwala.
Telephone: 011 7393880 - 1/2 Fax: 011 7393883
E-mail: editornavamani@gmail.com
freelankamedia@gmail.com
15TH MARCH 2017 - WEDNESDAY

# இயக்க முரண்பாடுகள் இருப்புக்கு அச்சுறுத்தலாக அமையும்

காத்தான்குடியில் கடந்த வெள்ளிக்கிழமை இரு குழுக்களுக்கிடையே இடம்பெற்ற மோதல் இப்போது நாட்டின் பல்வேறு மட்டத்திலும் பேசப்படும் ஒரு விடயமாக மாறியுள்ளது.

பகிரங்கத்திற்கு வராது தலைமறைவாக இயங்கி வரும் 'இலங்கை முன்னாள் முஸ்லிம்கள்' என்ற அமைப்பு இது தொடர்பாக விடுத்துள்ள அறிக்கை சிங்கள, ஆங்கில மற்றும் சமூக ஊடகங்களிலும் இணையத்தளங்களிலும் முக்கியத்துவமளித்து பிரசாரப்படுத்தப்பட்டுள்ளது.

காத்தான்குடியில் இரு குழுக்களுக்கிடையே இடம்பெற்ற மோதலானது முஸ்லிம்கள் மத்தியில் தீவிரவாதமும் பயங்கரவாதமும் வளர்ந்து வருவதாக கடந்த சில வருட காலமாக போலிக் குற்றச்சாட்டுக்களை எழுப்பி முஸ்லிம் சமூகத்தின் மீது பயங்கரவாத முத்திரை குத்த முற்பட்டுவரும் கடும்போக்கு அமைப்புக்களின் வாய்க்கு சீனி போட்டது போன்றே அமைந்துள்ளது.

முஸ்லிம்கள் மத்தியில் சமயத்தை பின்பற்றுவது தொடர்பாக கருத்து முரண்பாடுகள் இருந்து வருகின்றன. அண்மைக் காலம் வரை இக்கருத்து முரண்பாடுகள் மோதலாக வெடித்ததில்லை.

பல வருடங்களுக்கு முன் பேருவளையில் இடம்பெற்ற மோதலை அடுத்து சமூகத்தின் மத்தியில் சமய கருத்து முரண்பாடுகளை மையமாக வைத்து மோதல்கள் இடம்பெறவில்லை. ஒவ்வொரு குழுவினரும் தாம் விரும்பும் கொள்கைகளை மற்றவர்களுக்கு பாதிப்பில்லாத வகையில் முன்னெடுத்துச் சென்றனர்.

ஆனால் கடந்த வெள்ளிக்கிழமை காத்தான்குடியில் இடம்பெற்ற கைகலப்பு பலரை கவனத்திற்குள்ளாக்கியது. இதன் காரணமாக இதுவரை 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

'இலங்கை முன்னாள் முஸ்லிம்கள்' என்ற அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் இலங்கையில் இஸ்லாமிய பயங்கரவாதம், தீவிரவாதம், அடிப்படைவாதம் மற்றும் மத வெறுப்புணர்வு ஆகியவற்றை நேரடியாகவும், மறைமுகமாகவும் போதிக்கும் அமைப்புக்கள், தனி நபர்கள் குறித்தும் அவ்வாறான அமைப்புக்களுக்கு கிடைக்கும், வெளிநாட்டு, உள்நாட்டு பண உதவிகள் குறித்தும் அரசாங்கமும் பாதுகாப்பு தரப்பினரும் தீவிர கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுள்ளது.

இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஒரு சிறு குழுவின் செயற்பாட்டினால் முழு முஸ்லிம் சமூகத்தையும் நெருக்கடிக்குள் தள்ளவைத்துள்ளது. முழு முஸ்லிம் இயக்கங்கள் குறித்தும் கண்காணிப்புகள் அதிகரிக்கவும் வாய்ப்பு உள்ளது. 100 வீத முஸ்லிம்கள் வாழுகின்ற ஜம்மியத்துல் உலமா மற்றும் பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் நெறிப்படுத்தலில் இயங்கும் காத்தான்குடிக்கு இச்சம்பவங்கள் ஒரு பெரும் களங்கத்தையும் அவப்பெயரையும் ஏற்படுத்தியுள்ளது.

காத்தான்குடியின் சமய, அரசியல், சிவில் தலைமைத்துவங்கள் தலையிட்டு இந்த மோதல் தொடர இடமளிக்காது கருத்து முரண்பாடுகளை பேசித் தீர்த்து வைப்பதற்கு உடன் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

முஸ்லிம்கள் மீது வெறுப்புணர்வை ஏற்படுத்தி பிரச்சினைகளை உருவாக்குவதற்கு பார்த்துக்கொண்டிருக்கும் சக்திகளுக்கு இந்த நிகழ்வுகளின் மூலம் நாமே கதவை திறந்து கொடுத்தது போன்றே அமையும்.

நாட்டில் அமைதியாக வாழ்ந்து வரும் முஸ்லிம்கள் தொடர்பாக பல்வேறு சந்தேகங்களை உருவாக்குவதற்கு இடமளிக்காது முஸ்லிம் தஃவா அமைப்புக்கள் நிதானமாகவும், தூர நோக்குடனும் செயற்பட வேண்டியது காலத்தின் தேவை.

# மஹிந்தவின் நாமத்தில் அரசியல் வியாபாரம் நடக்கின்றதா?

ஏ.கே மிஸ்பாஹுல் ஹக்
சம்மாந்துறை



ஒருவர் மீது பழி போட வாய்ப்பு கிடைத்துவிட்டால் அவர் மீது இல்லாத பொல்லாத பழியை சுமத்துவது எமது சமூகத்தில் சாதாரணமாக காணக் கூடியதான ஒரு செயலாகும். இன்று இவ்வாட்சியின் மீது முன் வைக்கப்படும் அனைத்து குற்றச்சாட்டுக்களையும் மஹிந்த தலை மீது போட்டு இன்றைய ஆட்சியாளர்கள் தப்பித்துக்கொள்ள முனைவதை அவதானிக்க முடிகிறது. சில காலங்கள் முன்பு முஸ்லிம்களின் மீது இடம்பெற்ற இனவாத செயல்களுக்கு அன்று நாட்டை ஆண்ட மஹிந்தவை குறை கூறினார்கள். அதில் சில நியாயங்கள் இல்லாமலுமில்லை. தற்போது அவர் ஆட்சியில் இல்லாத நேரத்திலும் அவரையே குறைகூறுவதில் சிறிதேனும் நியாயம் இருப்பதாக தெரியவில்லை.

இன்று இலங்கை முஸ்லிம்களிடையே நிலவும் அரசியல் அதிகார போட்டியின் காரணமாக இலங்கை முஸ்லிம்களின் வாழ்வு கேள்விக்குறியாகிய நிலையில் உள்ளது. இலங்கை அரசின் சிறுபான்மையினருக்கான தீர்வுப் பொதியில் இக் கால கட்டம் மிக முக்கியமானதாக கருதப்படுகிறது. இந் நேரத்தில் முஸ்லிம்கள்தாங்கள் சம்பந்தப்படும் விடயங்களில் மிகவும் கவனம் செலுத்த வேண்டிய நிலையில் உள்ளார்கள். முஸ்லிம்களை பொறுத்தமட்டில் இலங்கை நாட்டில் சில காலங்கள் முன்பு கோரத் தாண்டவமாடிய இனவாத நிகழ்ச்சி நிரலின் தந்தையாக மஹிந்த கருதப்பட்டார். அவரை வீழ்த்தினால் அனைத்து பிரச்சினைகளும் முடிவுக்கு வந்துவிடும் என்ற நிலைப்பாட்டில் இருந்தனர். அந்நேரத்தில் ஜனாதிபதித் தேர்தலும் வந்தது. முஸ்லிம்கள் ஒருமித்து நின்று தங்களது வாக்குப் பலத்தை காட்டி மஹிந்தவை வீழ்த்த பிரதான காரணமானார்கள். இதனைத் தொடர்ந்து தாங்கள்ஏதோ சாதித்துவிட்டோமென பெருமூச்சு விட்டவாறு இலங்கை முஸ்லிம்களும், முஸ்லிம் அரசியல் அதிகாரமிக்கவர்களும் காணப்படுவதை அவதானிக்க முடிகிறது. இந் நல்லாட்சிக்கான கூட்டை நம்பி இலங்கை மக்கள் எதற்காக வாக்களித்தார்களோ அவர்களின் நம்பிக்கையை இவ்வரசு சிறிதளவேனும் பூர்த்தி செய்யவில்லை. இலங்கை மக்களும் இவ்வரசின் உண்மையான முகத்தை படிப்படியாக அறிய ஆரம்பித்துள்ளனர். இவ்வரசு தனது ஆதரவை பலவாறான திசைகளில் இழந்து வருகின்றமையை இதனூடாக அறிந்து கொள்ளலாம்.

முஸ்லிம்களை பொறுத்தமட்டில் மஹிந்த மீது பூரண வெறுப்புக்கொண்டவர்களாகவே இருந்தார்கள். அவ் வெறுப்பை அவ்வளவு இலகுவில் முஸ்லிம்களின் உள்ளத்தில் இருந்து கழற்றி எறிய முடியாது. அண்மைக் காலமாக இவ்வரசு பற்றி சிறு சிறு சல சலப்புக்களும் சலிப்பு வார்த்தைகளும் முஸ்லிம்களிடையே எழ ஆரம்பித்துள்ளதை அவதானிக்க முடிகிறது. இது இந் நல்லாட்சிக்கான பெரும் அபாய ஒலியாகும். இன்றும் முஸ்லிம்களுக்கெதிரான ஏதாவது நிகழ்ச்சி நிரல் அரங்கேறும்போது முஸ்லிம்களிடையே இது மஹிந்தவின் செயல்தான் என்ற சிந்தனை முதலில் எழுவதை அவதானிக்க முடிகிறது. அந்தளவு முஸ்லிம் மக்களின் உள்ளத்தில் மஹிந்தவின் நாமம் நஞ்சாக பதிந்துள்ளது. இதற்கு பிரதான காரணம் மஹிந்தவிற்கு எதிரான முஸ்லிம் அரசியல்வாதிகள் மஹிந்தவின் நாமத்தை விற்றே தங்களது அரசியல் பிழைப்பை நடாத்த வேண்டிய தேவை இருந்தது. அனைத்தையும் அரசியலாக மாற்றி அரசியல் ஆதாயம் தேடிக்கொண்டனர். அன்று நடந்த இனவாத நிகழ்ச்சிகளில் இன்று எது குறைந்துள்ளது? அன்று நாளுக்கு நாள் மஹிந்தவை விமர்சிப்பதையே பிரதான தொழிலாக கொண்டிருந்த அசாத்சாலி. முஜீபுர் ரஹ்மான் போன்றோர் இன்று எங்குள்ளனர். முஜீபுர் ரஹ்மான் இன்னும் மஹிந்தவையே பல இடங்களில் குற்றம் சாட்டிக்கொண்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. இலங்கை முஸ்லிம் மக்களை சிந்தனா அரசியலில் இருந்து புறந்தள்ளி உணர்ச்சி அரசியலுக்குள் நுழைவிக்கச் செய்ததில் இவர்களுக்கும் மிகப் பெரும் பங்குண்டு. இன்று மஹிந்த ராஜபக்ஷ எந்தவிதமான அதிகாரத்திலும் இல்லை. அதிகாரத்தில் இல்லாத போதும் அவரை குற்றம் சுமத்துவது எந்த விதத்தில் தகும்? அது மாத்திரமல்ல பொது பல சேனா இன்றைய ஆட்சியாளர்களின் செல்லப் பிள்ளை போன்று பாராளுமன்றம் சென்று பகலுணவுண்டு படுத்துறங்கி இன்றைய ஆட்சியாளர்களை பாராட்டியும் வருகிறது. இவ் அமைப்பை எப்படி மஹிந்தவின் கூலியாட்களாக கூறுவது?

இன்றும்இனவாத நிகழ்ச்சிகளின் பின்னால் மஹிந்த தான் உள்ளார் என முஸ்லிம்கள் நம்புவது முஸ்லிம்களுக்கு மிகவும் ஆபத்தானது. முஸ்லிம்களை பொறுத்தமட்டில் பேரின தேசியக் கட்சிகளுடன் இணைந்து தங்களது பயணத்தை மேற்கொள்ளும் போதே பேரம் பேசும் வல்லமை பெறும். முஸ்லிம்களின் வாக்குகளும் பயன்பெறும். உதாரணமாக கடந்த ஜனாதிபதித் தேர்தலில் முஸ்லிம்களே ஆட்சியை தீர்மானிக்கும் சக்தியாக திகழ்ந்தார்கள். இத் தேர்தலில் முஸ்லிம்கள் தனிக் கட்சியாக நின்று எதனையும் சாதித்திருக்க முடியாது. இவ்வாறான சந்தர்ப்பங்களின் போதே முஸ்லிம்கள் தங்களது விடயங்களை சாதிக்கலாம். கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது முஸ்லிம்கள் மிகப் பெரும் பேரம் பேசும் வல்லமை பெற்றிருந்தும் கிஞ்சித்தேனும் சாதிக்கவில்லை. இன்றைய அரசை சு.க மற்றும் ஐ.தே.க ஆகியன இணைந்து அமைத்துள்ளன. பலமிக்க மூன்றவாது அணியாக மஹிந்த ராஜபக்ஷவின் அணியை கூறலாம். இந்த ஆட்சி முஸ்லிம்களுக்கு பாதிப்பாக அமைந்துள்ளது. இருந்த போதிலும் இன்று நிகழும் அனைத்திற்கும் மஹிந்த ராஜபக்ஷ தான் காரணம் என முஸ்லிம்கள் நம்பும் போது இவ்வரசு முஸ்லிம்களின் தலையில் குட்டுவதை இன்னும் பலமாக்கும். அப்படித் தான் இவ்வரசு முஸ்லிம்களின் தலையில் குட்டிக்கொண்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. முஸ்லிம்கள் தங்களது பாதையை மஹிந்த பக்கம் திருப்பினால் அல்லது தங்களது எதிர்ப்புக்களை வழங்கினால் இவ்வாட்சி முஸ்லிம்களை பற்றி கவனத்திற் கொள்ளும். அதைவிடுத்து இவ்வாட்சியை புனித ஆட்சியாக கருதுவது ஆபத்தானது. இன்று இலங்கை அரசு கூட தங்களது இயலாமைகளை மஹிந்தவின் நாமத்தை கொண்டே மறைத்துக் கொள்கிறது. பிணை முறி மோசடி விடயத்தில் மஹிந்தவிடம் இவ்வரசு மாட்டிக்கொண்டு முழிக்கின்றமையை எமது கண் கூடாக அவதானிக்க முடிகிறது. அண்மையில் இடம்பெற்ற இலங்கை மற்றும் அவுஸ்திரேலிய ஆகிய அணிகளுக்குடையிலான கிரிக்கெட் விளையாட்டின் போது ஐ.தே.க பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார மஹிந்த பார்த்திருந்தால் நிச்சயம் தோல்விதான். டொஸ் இல் வென்று ரணில் பார்த்ததாலேயே வெற்றி கிட்டியதென சம்பந்தமில்லாமல் மஹிந்தவை தூசித்தும் மைத்திரியை புகழ்ந்துமிருந்தார். இன்று மஹிந்த மீது முன் வைக்கப்படுகின்றவை இது போன்ற சம்பந்தமில்லாத குற்றச் சாட்டுக்களேயாகும்.

இலங்கை முஸ்லிம்களுடைய நிலையை அவதானிக்கின்றபோது மஹிந்த ராஜபக்ஷவின் காலத்திலிருந்ததை விடவும் அதிகமான இனவாத செயல்களை அவதானிக்க முடிகிறது. இலங்கை முஸ்லிம்களை இவ்வாட்சியின் பக்கம் கொண்டு சென்ற நிகழ்வுதான் அளுத்கமை கலவரமாகும். அளுத்கமை கலவரத்தின் பின்னால் அமைச்சர் சம்பிக்க அணியினர் தான் இருந்தார்கள் என மஹிந்த தரப்பு பல இடங்களில் அடித்து கூறுகின்றபோதும் சம்பிக்க அணியினர் எதுவிதமான பதிலும் அளிக்காது மௌனத்தை பதிலாக்கியுள்ளனர். அவரது மௌனம்வைத்து குறித்த விடயத்தை தான் ஏற்றுக்கொண்டதாகவும் நோக்கலாம். அமைச்சர் றிஷாத் பொது பல சேனாவின் செயலாளர் ஞானசார தேரரை கைது செய்யுங்கள் அல்லாது போனால் நாங்கள் இவ்வாட்சியை விட்டும் விலகுவோமென அமைச்சரவையில் எச்சரித்த போது அமைச்சர்சம்பிக்க மஹிந்த ராஜபக்ஷவிடம், உங்களுக்கு அவர் வேண்டுமா? நாங்கள் வேண்டுமா? என தீர்மானித்து கொள்ளுங்கள் என கூறியதான கதைகளையும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த அள்ளி வீசுகிறார். இதன் பின்னணியில் சம்பிக்க தான் இருந்தார் என்றால் முதலில் சம்பிக்க போன்ற இனவாத முகங்களின் கூட்டுக்களைத் தான் முஸ்லிம்கள்எதிர்க்க வேண்டும். இன்று சம்பிக்க இவ்வாட்சியுடன் பின்னிப் பிணைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. மஹிந்த சார்பு அணியினர் சம்பிக்க மீது இவ்வாறான குற்றச்சாட்டுக்களை முன் வைத்த போது அமைச்சர் ராஜித சேனாரத்ன இதன் பின்னணியில் மஹிந்த உள்ளதன் ஆதாரங்கள் தன்னிடம் இருப்பதாக கூறியிருந்தார். குறித்த சம்பவத்துடன் சம்பந்தமுடைய சம்பிக்க மௌனத்தை கடைப்பிடித்த போது அமைச்சர் ராஜித ஏன் ஓடி வந்து பதில் வழங்க வேண்டும்? இது இவருக்கும் சம்பிக்கவிற்கும் இடையில் ஏதேனும் தொடர்புள்ளதா என்ற சந்தேகத்தையும் கிளறி விடுகிறது. இக் கலவரம் தொடர்பான போதிய ஆதாரங்கள் இல்லாமல் நடவடிக்கை எடுக்காமல் விட்டிருந்தால் அதனை ஏற்றுக்கொள்ளலாம். அமைச்சர் ராஜிதவிடம் ஆதாரம் இருந்தும் அளுத்கமை கலவரம் தொடர்பில் எந்தவிதமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாமை ஏன்? முஸ்லிம்களின் உயிர்களும் உடைமைகளும் அந்தளவும் விலை குறைந்ததா?

இது போன்று பொது பல சேனா அமைப்பினரும் அளுத்கமை கலவரத்தின் பின்னணியில் முன்னாள் ஆட்சியாளர்கள் தான் இருந்தார்கள் என்ற விடயத்தை கூறியுள்ளது. பொதுபலசேனா அமைப்பானது இக் கலவரம் தொடர்பில் கதைக்கப்படும் போதெல்லாம் இக் கலவரம் தொடர்பில் ஆராய்ந்து நடவடிக்கை எடுங்கள் என தைரியமாக கூறுகிறது. இவ்விடயமானது இது தொடர்பில் ஆராயும் போது பல முக்கியமானவர்கள் அகப்படுவார்கள் என்பதை மறைமுகமாக கூறுகிறது. இன்று மஹிந்த அணியினரை எவ்வாறு பொறியில் மாட்டி தங்களது விடயங்களை சாதிக்கலாமென இவ்வரசு சிந்தித்துக் கொண்டிருக்கின்றமையை பிரபல ரக்பி வீரர் தாஜுதீன் போன்றோர் கொலைச் சம்பவத்தை மிகுந்த கரிசனை கொண்டு விசாரிப்பதில் இருந்து அறிந்து கொள்ளலாம். தாஜுதீன் கொலைச் சம்பவத்தை விட அளுத்கமை கலவரமானது மிகவும் பாரதூரமானது. இவ்வரசு ஏன் இதனை விசாரிக்க தயங்குகிறது? இவ்வாறான பல கேள்விகளை தொடுத்தும் பல சம்பவங்களை தொடர்புபடுத்தியும் பார்க்கின்ற போது இக் கலவரத்தின் பின்னால் இவ்வரசின் முக்கியஸ்தர்கள் உள்ளமை தெளிவாகிறது. அளுத்கமை கலவரம் திட்டமிடப்படாமல் எதேச்சையாக நடந்த ஒன்றா? என்ற சந்தேகம் முஸ்லிம்களிடையே சிறிது உள்ளது. இது தொடர்பான அரசியல் முக்கியஸ்தர்களினதும் பொதுபல சேனாவினதும் கூற்றுக்களை அவதானிக்கின்ற போது இது ஏலவே நன்கு திட்டமிட்டு செய்யப்பட்ட ஒன்று தான் என்பதை துல்லியமாக்கின்றது. அளுத்கமை விடயத்தை வைத்து பேரின அரசியல் நன்கு இடம்பெறுவதும் இதில் பொதிந்துள்ள மற்றுமொரு செய்தியாகும். இதனை வைத்துப் பார்க்கும் போது அரசியல் இலாபம் கருதியும் இவ்விடயம் இடம்பெற்றிருக்கலாம் என்பதை ஊகிக்க முடிகிறது. இதுவே முஸ்லிம்களிடமிருந்து மஹிந்தவை பூரணமாக பிரித்தெடுத்த நிகழ்வாகும் என்பது குறிப்பிடத்தக்கது. இவைகள் பற்றி பேரின அரசியல் வாதிகள் அலசும் போதெல்லாம் அவர்கள் விடும் பிடியை வைத்து இது தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முஸ்லிம் அரசியல்வாதிகள் முன் வைக்க வேண்டும். தற்போது அளுத்கமை கலவரம் என்ற ஒன்று நடந்ததை பேரின அரசியல்வாதிகள் நினைவில் வைத்துள்ள போதும் முஸ்லிம் அரசியல்வாதிகள் மறந்துள்ளமை தான் மிகவும் கவலையான விடயமாகும்.

மஹிந்த ராஜபக்ஷவின் காலத்தில் இடம்பெற்ற உள்ளூராட்சி மன்ற எல்லைநிர்ணயம் அநீதியானது எனக் கருதியே இவ்வரசு அதனை சரி செய்ய முனைந்தது. இதனைஅமைச்சர் பைசர் முஸ்தபா அனைத்து கட்சிகளையும் ஒன்று கூட்டி கலந்துரையாடியே வர்த்தமானிப்படுத்துவோம் என ஆரம்பத்தில் கூறியிருந்தார். இருந்தாலும் அனைத்துக் கட்சிகளுடனும் கலந்துரையாடாமலேயே மேன்முறையீட்டு விசாரணைக் குழுவின் அறிக்கை வர்த்தமானிப்படுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பில் சிறு பான்மை கட்சிகள் தங்களது பலத்த கண்டனத்தை விடுத்துள்ளது. அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் நீதி மன்றம் செல்லவும் ஆலோசனை நடாத்தி வருகிறது. இதுவும் சிறு பான்மையினரை இவ்வரசு புறக்கணித்தமைக்கான சான்றுகளில் ஒன்றாகும். உள்ளூராட்சி மன்றங்கள் கலைக்கப்பட்டு அண்ணளவாக இரண்டு வருடங்கள் கழியப் போகின்ற போதும் இவ்வரசு உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடாத்த முன்வரவில்லை. இதனை புதிய முறையில் தான் நடாத்த வேண்டும் என்ற எண்ணத்தில் காலம் தாழ்த்துவதாக நோக்க முடியவில்லை. இந்த அரசின் ஆரம்ப கால வாக்குறுதிகளில் ஒன்று தான்தொகுதி வாரியில் பாராளுமன்றத் தேர்தலை நடாத்துவதாகும். கடந்த முறை அது பற்றி அவர்கள் சிறிதும் அலட்டிக் கொள்ளாது தேர்தலை நடாத்தி இருந்தார்கள். இவர்கள் உள்ளூராட்சி மன்றத் தேர்தலையும் பழைய முறையில் நடாத்தினால் தான் என்ன? உள்ளூராட்சி தேர்தல் முறைமை மாற்றம் ஏற்கனவே பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளதால் பழைய முறையில் நடாத்த இவ்வரசு அமைச்சரவை மற்றும் பாராளுமன்ற அனுமதி பெற வேண்டிய நிலை உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இது தற்போது பாராளுமன்றத்தில் மிகப் பெரும் பலத்தை கொண்டுள்ள இவ்வரசுக்கு பெரிய விடயமல்ல.

அரசு இத் தேர்தலை காலம் தாழ்த்துவதன் மூலம் மக்களின் வாக்குரிமையை தடுக்கின்றது. ஓர் உள்ளூராட்சி மன்றத்தின் ஆயுட் காலம் நான்கு வருடங்களாகும். இரு வருடங்கள் காலம் தாழ்த்துவதானது உள்ளூராட்சி மன்றத்தின் அரை ஆயுட் காலத்தை இவ்வரசு சப்பியுள்ளது. உள்ளூராட்சி மன்றங்களை மக்கள் பிரதிநிதிகள் ஆளும் போது அவர்கள் அதனை திறம்பட செய்து காட்ட வேண்டும் என்ற தேவை உள்ளது. உள்ளூராட்சி மன்றங்கள் அந்த வகையிலேயே வடிவமைக்கப் பட்டுள்ளன. அதனை அரச அதிகாரங்கள் ஆளும் போது ஊழல்கள் அதிகம் இடம்பெறுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமுள்ளன. ஊழலுக்கு எதிரான இவ்வாட்சி ஊழலுக்கு வாசல்களை திறந்து விட்டுள்ளது. தென், மேல் மாகாணங்களில் இடம்பெற்ற கூட்டுறவு நிறுவனங்கள் பலவற்றில் மஹிந்த தான் மிக அதிக பெரும்பான்மையுடன் வெற்றி பெற்றுள்ளார். இவ்விடயமானது உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மஹிந்த வெற்றி பெறுவார் என்றசெய்தியை கூறியுள்ளது. எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் மஹிந்த அணியினர் தனித்து போட்டியிடுவதற்கான வாய்ப்பே அதிகம். அவர்கள் அதிகமான சபைகளை கைப்பற்றினால் இவ்வரசின் தொடர்ச்சியான பயணம் கேள்விக்குட்படும். தற்போது சு.க உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு முன்பாக கிழக்கு மாகாண சபைத் தேர்தலை நடாத்த ஆலோசனை நடாத்துவதாகவும் அறிய முடிகிறது. கிழக்கு மாகாண சபை சிறு பான்மையினரின் ஆதிக்கத்தின் கீழ் இருப்பதன் காரணமாக அதனை மஹிந்த கைப்பற்றுவது கடினமானதொரு விடயமாகும். இதன் வெற்றியை காட்டி மக்களை உள்ளூராட்சி மன்றத்தின் பக்கம் திசை திருப்புவதே அவர்களின் சிந்தனையாக நினைக்க தோன்றுகிறது.

தம்புள்ளை பள்ளிவாசல் அமைந்துள்ள பிரதேசமானது புனித பூமி பிரதேசத்தினுள் அமைந்துள்ளதன் காரணமாக அதனை அகற்ற வேண்டுமென மஹிந்த காலம் தொடக்கம் இன்று வரை அங்கு அடிக்கடி பிரச்சினைகள் எழுந்து கொண்டே இருக்கின்றன. இது மஹிந்த காலத்தில் முஸ்லிம்கள் சந்தித்த பிரச்சினைகளில் மிக முக்கியமானதொரு பிரச்சினையாகும். இப் பிரச்சினை துளிர்விட்ட சந்தர்ப்பத்தில் மஹிந்த ராஜபக்ஷ அதனை தீர்த்துக் கொள்வதற்காக நாற்பது பேச்சர்ஸ் காணியை நகர புறத்தில் வழங்கி அங்கு மிகக் குறுகிய காலத்தில் அழகிய பள்ளிவாசல் ஒன்றை நிர்மாணித்து தருவதாகவும் உறுதியளித்திருந்தார். மஹிந்தகாணி வழங்கிய அமைவிடத்தை நோக்குகின்ற போது தற்போது பள்ளிவாசல் அமைந்துள்ள இடத்தை விடவும் சகல விதத்திலும் சிறந்த இடமாகும். இருப்பினும்எமது அரசியல்வாதிகளில் சிலர் அதற்கு உடன்படவில்லை. இதனை விட்டுக் கொடுக்கின்ற போது இனவாதிகள் இதனை முதல் வெற்றியாக கொண்டு தனது அடுத்த அடியை எடுத்து வைக்க முயற்சிப்பார்கள் என்ற நியாயமும் அவர்கள் விட்டுக்கொடுக்காமையில் உள்ளது.

தற்போது தம்புள்ளை பள்ளிவாசலின் நிலைமை மிகவும் இக்கட்டான நிலையில் உள்ளதை அவதானிக்க முடிகிறது. அதனை வேறு இடமொன்றிற்கு மாற்றுவதற்கு முஸ்லிம் கலாச்சார அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது. இன்று பாரிய நகரம் மற்றும் மேற்கு பிராந்திய அமைச்சர் சம்பிக்க ரணவக்க இருபது பேர்ச்சஸ் காணியையே பள்ளிவாசலுக்கு தர முடியும் என பகிரங்கமாக கூறியுள்ளார். இதனை எதிர்த்து எமது அரசியல் வாதிகள் யாருமே வாய் திறந்ததாக தெரியவில்லை. மஹிந்த காலத்தில் இடமாற்றுவது பிழை, மைத்திரி காலத்தில் இடமாற்றுவது சரி என்ற நிலைப்பாட்டில் எமது முஸ்லிம் அரசியல் வாதிகள் உள்ளனரா? மஹிந்த காலத்தில் குறித்த பள்ளிவாசலை இடமாற்றுவதற்கு முஸ்லிம்கள் ஏற்றுக்கொண்டிருந்தால் எமது பக்க நியாயத்தை ஏற்று முஸ்லிம்கள் விட்டுக் கொடுத்துவிட்டார்கள் என்ற நல்லெண்ணமாவது பேரின சமூகத்திடையே ஏற்பட்டிருக்கும். இதன் பிற்பாடு தம்புள்ளையில் இன முறுகல்கள் அடிக்கடி எழுவதை அவதானிக்க முடிகிறது. அங்கு மத நல்லிணக்கம் சீர்கெட்டுள்ளது. தற்போதைய அரசு வழங்க சிந்தித்துள்ள காணி மக்கள்வாழும் பிரதேசத்தில் இருந்து மிகவும் தொலைவில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. தம்புள்ளை பள்ளிவாசல் விடயத்தில் ஒப்பீட்டளவில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவின் ஆட்சிக் காலத்து அணுகுமுறைகள் மெச்சத்தக்கவையாக அமைந்துள்ளன.

# ஜப்பானிய போர்க்கப்பல் இலங்கைக்கு விஜயம்

ஜப்பானியக் கடற்படையின் மிகப்பெரிய உலங்குவானூர்தி தாங்கி போர்க்கப்பலான இசுமோ கப்பல் இலங்கைக்கான பயணத்தை மேற்கொள்ளவுள்ளது.

குறித்த போர்க்கப்பல் எதிர்வரும் மே மாதம் தென் சீனக் கடல் வழியாக மூன்று மாதப் பயணத்தை ஆரம்பிக்கவுள்ளது. இந்தியப் பெருங்கடலில் எதிர்வரும் ஜூலை மாதம் நடைபெறவுள்ள அமெரிக்கா, இந்தியா உள்ளிட்ட நாடுகள் பங்கேற்கும் மலபார் கூட்டுப் பயிற்சியில் இந்த ஜப்பானிய போர்க்கப்பலும் பங்கேற்கவுள்ளது.

இதன்போது, சிங்கப்பூர், இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ் மற்றும் இலங்கையிலும் இசுமோ கப்பல் தரித்து நிற்கும். இரண்டாவது உலகப்போர் முடிவுக்கு வந்த பின்னர் ஜப்பானின் கடற்படை பலத்தை வெளிப்படுத்தும் முதல் பயணமாக, இசுமோவின் இந்தப் பயணம் கருதப்படுகின்றது.




மஹரகம லயன்ஸ் கழக ஏற்பாட்டில் இடம்பெற்ற கர்ப்பிணித் தாய்மார்களுக்கான இலவச உபகரணம் வழங்கல் நிகழ்வில் கலந்துகொண்ட முதலமைச்சர் இசுர தேவப்பிரியவிடமிருந்து கர்ப்பிணித் தாயொருவர் உபகரணம் பெறுவதைப் படத்தில் காணலாம். சிகையலங்கார நிபுணர் பீ.ஹேவாவாசம் உள்ளிட்ட பிரமுகர்களும் படத்தில் காணப்படு கின்றனர். (படம்-எம்.எஸ்.எம்.முன்தஸிர்)

# இந்த ஆண்டில் உள்ளூராட்சி தேர்தல் நடைபெறமாட்டாது

## மார்ச் 12 அங்குரார்ப்பண நிகழ்வில் பெல்லன்வில விமலரத்ன தேரர்

இன்றாகும் போது பாராளுமன்றத்தின் கௌரவம் முற்றாக இல்லாமல் போய் ஒரு பைத்தியகார இல்லத்தின் நிலையைவிட மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் பெல்லன்வில விமலரத்ன தேரர் தெரிவித்தார்.

மார்ச் 12 இயக்கத்தின் ஆரம்ப வைபவத்தில் உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

சுதந்திர சதுக்கத்தில் திங்களன்று இந்த நிகழ்வு ஆரம்பமானது. இதில் மேலும் பேசிய தேரர் கூறியதாவது,

2015 இல் மார்ச் 12 இயக்கத்தை ஆரம்பித்தது இந்த நாட்டின் தேர்தல்களுக்கு ஒழுக்கமிகு, நற்குணம் மிகு புத்திசாதுர்யமானவர்களைத் தெரிவு செய்து அவர்களுக்கு நியமனப்பத்திரம் வழங்குவதற்கும் அரசியல் கட்சிகளை ஊக்குவிப்பதற்காகவுமாகும். இந்நாட்டு தேர்தல் முறைப்படி சுயேட்சை அபேட்சகர்களுக்கு தேர்தலில் போட்டியிட முடியாது. கடந்த தேர்தலில் நல்ல மனிதர்களைப் பாராளுமன்றத்துக்கு அனுப்புவதற்கே மார்ச் 12 இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் நல்ல மனிதர்கள் சென்றார்களா என்பது கேள்விக்குரிய விடயமாகும்.

இப்போதாகும் போது எமது கட்சியில் 60 அரசியல்கட்சிகள் பதிவு செய்துள்ளன. மேலும் 100 கட்சிகள் பதிவுக்காக விண்ணப்பித்துள்ளன. இது பெரும் வினோதமாகும். இந்த சிறிய நாட்டில் அவ்வளவு அரசியல் கட்சிகள் பதிவு செய்வதற்கு இடமளிப்பது கேள்விக்குரியது.

இலங்கை இதனால் கேளிக்கை வழங்கும் நாடாக மாறியுள்ளது. இவற்றை நிறுத்துவதற்கு சிவில் சமூகம் முன்வர வேண்டும்.



இன்று எமது பாராளுமன்றத்தை விட பைத்தியக்கார வைத்திய சாலை நல்லது. பாராளுமன்றத்தின் கௌரவம் முற்றாக இல்லாது போயுள்ளது. மக்கள் பிரிதிநிதிகள் அடித்துக்கொள்கிறார்கள். கெட்ட வார்த்தைகளால் பேசுகிறார்கள். அவர்கள் மிகவும் கீழ் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

இந்த ஆண்டில் உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப்படும் என நாம் எதிர்பார்த்தாலும் அது நடக்காது, மக்கள் இதனால் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியிருக்கிறார்கள். உள்ளூராட்சி மன்றங்களில் வேலைகள் சரியாக இடம்பெறுவதில்லை. அதிகாரிகளுக்கு தீர்மானங்களை எடுக்க முடியாது. எப்போதாவது இந்நாட்டில் இவ்வளவு பிரச்சினை ஏற்பட்டதும் இல்லை எனவும் அவர் தெரிவித்தார்.

## மனைவியை தாக்க முயன்ற கனவை தாக்கி கொன்ற அயலவர்கள்

இரத்தினபுரி - கிரியெல்ல, பஹலகம பகுதியில் மனைவியை தாக்க முயன்ற கணவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த கணவன், மனைவிக்கு இடையில் ஏற்பட்ட மோதல் காரணமாக கணவன் மனைவியை தாக்க முயன்றுள்ளார்.

இந்நிலையில் குறித்த இடத்திலிருந்த அயலவர்கள் குறித்த கணவனை தாக்கியதில் அவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் 23 வயதுடைய அதே பகுதியைச் சேர்ந்தவர் ஆவார். இந்நிலையில் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.




சம்மாந்துறை ஆதம்பாவா அஸீஸ் எழுதிய 'கடையில் பூத்த கவிதைகள்'; நூல் கொழும்பு பிறைட்டன் ரெஸ்ட் ஹோட்டலில் நடைபெற்ற நிகழ்வொன்றின்போது வெளியிட்டு வைக்கப்பட்டது. நூலின் முதற்பிரதியை நூலாசிரியர் ஆதம்பாவா அஸீஸ் இலக்கிய புரவலர் ஹாஷிம் உமரிடம் வழங்குவதையும் கலைஞர் கலைச்செல்வன், ஊடகவியலாளர் இர்ஷாத் ஏ காதர், திருமதி மர்லியா சித்தீக் மற்றும் தெமட்டகொடை வை.டபிள்யூ.எம்.ஏ. தலைவி பவாஸா தாஹா ஆகியோர் உடன் காணப்படுப்படுவதையும் படத்தில் காணலாம்.

# இலத்திரனியல் அடையாள அட்டை ஜூனில் வெளியீடு

இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை எதிர்வரும் ஜூன் மாதத்தில் வெளியிடவுள்ளதாக ஆட்பதிவு திணைக்களம் தெரிவித்தது.

கேள்விப் பத்திர நடைமுறையின் கீழ் குறைந்த விலையை சமர்ப்பித்த இலங்கை தனியார் நிறுவனம் ஒன்றுக்கு, இலத்திரனியல் அடையாள அட்டை வெளியிடும் ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய ஓர் அடையாள அட்டைக்கு 71.83 ரூபா வரையில் செலவிடப்படுகின்றது. இலங்கையில் தற்போது பயன்படுத்தப்படும் தேசிய அடையாள அட்டை வெளியிடுவதற்காக 65 ரூபா செலவிடப்படுகிறது. இந்நிலையில் இலத்திரனியல் அடையாள அட்டைக்கு பெரிய அளவிலான பணம் செலவிட நேரிடும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பாலிகார்பனேட் அட்டையினால் தயாரிக்கப்படும் இந்த இலத்திரனியல் அடையாள அட்டையை சுமார் 10 வருடங்களாவது பாதுகாப்பாக பயன்படுத்த முடியும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

# பாகிஸ்தான் கடற்படை கப்பல்களின் வரவேற்பு நிகழ்வு

இலங்கைக்கு நான்கு நாட்கள் நல்லெண்ண விஜயம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தானிய கடற்படை கப்பல்களின் இராஜதந்திர வரவேற்பு நிகழ்வானது நேற்றுமுன்தினம் மாலை கொழும்பு துறைமுகத்திலே இடம்பெற்றது.

இந்நிகழ்வானது இரு நாடுகளுக்கிடையில் காணப்படும் பன்முகத்தன்மைக்கொண்ட வலுவான உறவுகளை பிரதிபலிக்கின்றது. இலங்கையின் அமைச்சர்கள், இராஜதந்திரிகள், சிரேஸ்ட இராணுவ அதிகாரிகள், அரசாங்கத்தின் உயர் அதிகாரிகள், வணிகர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் மற்றும் பாகிஸ்தானிய பிரஜைகள் இவ் வரவேற்பு நிகழ்வில் கலந்துக்கொண்டனர்.

கப்பலின் தலைமை பணி தளபதியான தளபதி சகா ஹிர் ரெஹ்மான் கடற்படை கப்பலின் முழு குழு உறுப்பினர்கள் சார்பாக விருந்தினர்களை வரவேற்று உரை நிகழ்த்தினார். இதன்போது, பாகிஸ்தானிய கடற்படை கப்பல்களிற்கு வழங்கப்பட்ட வரவேற்பு மற்றும் உபசரிப்புகளிற்கு கடற்படை மற்றும் இலங்கை மக்களிற்கு தனது நன்றியினை தெரிவித்தார்.

இந்நிகழ்வில் உரையாற்றுகையிலே, இரு நாடுகளும், வலிமையான உறவுகளை கொண்டுள்ளதுடன், இருதரப்பு கடற்படைகளும் பன்முகத்தன்மைக்கொண்ட ஒத்துழைப்புக்களில் ஈடுபடுவதாகவும் குறிப்பிட்டார். இலங்கை மண்ணிலிருந்து தீவிரவாதத்தினை இல்லாதொழிப்பதற்கு இலங்கை அரசாங்கமும் அதன் ஆயுத படைகளும் மேற்கொண்ட உறுதி மற்றும் அர்பணிப்பினை இதன்பொழுது பாராட்டினார்.

பின்னர் பாகிஸ்தான் மற்றும் இலங்கைக்கு கிடையில் நிலவும் நட்புறவினை நினைவு கூருவதற்காக, விஷேடமாக வடிவமைக்கப்பட்ட கேக் பாகிஸ்தானிய உயர்ஸ்தானிகர்; (ஓ) மேஜர் ஜெனரல் ஷையத் ஷகில் ஹுசைன், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்தன, பிரதி வெளியுறவு அமைச்சர் கலாநிதி. ஹர்ஷ டி சில்வா, இலங்கை கடற்படை தளபதி மற்றும் கட்டளை தளபதி ஆகியோரால் இணைந்து வெட்டப்பட்டது.

## 8 இந்திய மீனவர்கள் விடுதலை

(அப்துல்சலாம் யாசீம்)

இலங்கை கடற்பரப்பில் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்டு வந்த 8 இந்திய மீனவர்களையும் விடுவிக்குமாறு நேற்றைய தினம் திருகோணமலை நீதிமன்ற பிரதம நீதவான் எம்.எச்.எம்.ஹம்ஸா உத்தரவிட்டார்.

இலங்கை கடற்படையினரால் கடந்த 3 ஆம் திகதி முல்லைதீவு கடற்பரப்பில் கைது செய்யப்பட்டு திருகோணமலை துறைமுகப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதையடுத்து நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டிருந்தது.

இதேவேளை, சட்டமா அதிபர் திணைக்களத்தினூடாக வழங்கப்பட்ட உத்தரவிற்கமைய இன்றைய தினம் இலங்கை கடற்படை திருகோணமலை தலைமையகத்தின் ஊடாக இந்திய கடற்படையினரிடம் ஒப்படைக்குமாறும் உத்தரவிட்டார்.

# இலண்டன் வாழ் இலங்கை முஸ்லிம்களுடன் றிஷாத் சந்திப்பு

யாழ்ப்பாண முஸ்லிம் பிரதேசங்களின் வீதிகள் சிலவற்றின் பெயர்கள் புதிய கூகுல் வரைபடத்தில் மாற்றப்பட்டுள்ளதாகவும் எனவே, உரியவர்களின் கவனத்திற்கு கொண்டு வந்து யாழ் முஸ்லிம் வீதிகளின் அசல் பெயர்களை மீண்டும் அந்த வீதிகளுக்கு மாற்றுவதற்கு உதவிபுரியுமாறும் அமைச்சர் றிஷாத் பதியுதீனிடம் இலண்டன் வாழ் யாழ் முஸ்லிம்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

லண்டன் ஹரோ பள்ளிவாசலில் இலண்டனிலுள்ள இலங்கை முஸ்லிம்களுடன் இடம்பெற்ற சந்திப்பின் போதே குறித்த கோரிக்கையை விடுத்ததாக சந்திப்பில் கலந்து கொண்ட யாழ்ப்பாண பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

இந்த விடயத்தை அமைச்சரிடம் சுட்டிக்காட்டியபோது,

அதிகாரிகள் கொடுத்த தகவல்களின் படி இவ்வாறான தவறு ஒன்று நிகழ்ந்திருக்கலாம்எனவும் இது சம்பந்தமாக தான் நடவடிக்கை எடுப்பதாகவும்



அமைச்சர் உறுதியளித்தார்.

மீளக் குடியேறியுள்ள யாழ் முஸ்லிம்களின் இன்னோரன்ன தேவைகள் குறித்து தாங்கள்அமைச்சரிடம் சுட்டிக்காட்டியதுடன் யாழ் ஒஸ்மானியாக் கல்லூரியின் வளர்ச்சியில் மேலும் பங்களிப்புக்களை நல்கவேண்டுமெனவும் தாங்கள் விடுத்த வேண்டுகோளைஅமைச்சர் ஏற்றுக்கொண்டதாகவும் தெரிவித்தார்.

மௌலவி சுபியான் உட்பட யாழ்ப்பாணத்தில் வாழும் முஸ்லிம் அமைப்புக்களின் பிரதிநிதிகள் அந்தப்பிரதேசத்தை அபிவிருத்தி செய்வதில் தான் எடுக்கும் முயற்சிகளுக்கும் நடவடிக்கைகளுக்கும் பூரண ஒத்துழைப்பை நல்கி வருவதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

இந்தசந்திப்பின் போது முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களைப் பிறப்பிடமாகக் கொண்ட இலண்டன் வாழ் முஸ்லிம்கள் தத்தமது பிரதேசங்களிலுள்ள பிரச்சினைகளைஅமைச்சரிடம் எடுத்துரைத்தனர்.

**பெயர் மாற்றம்**

திருகோணமலை, தோப்பூர், ஜின்னா நகர், 59 ஆம் கட்டை என்ற முகவரியில் வசித்து வரும் நாகூர் பாயுதா வீவீ ஆகிய நான் (பிறப்புச் சான்றிதழ் பத்திர இல.3568) எனது பெயரை நாகூர் தாஹிறா உம்மா என மாற்றிக் கொண்டேன் எனவும் இனி சகல ஆவணங்களிலும் அவ்வாறே ஒப்பமிடுவேன் எனவும் இலங்கை சனநாயக சோஷலிச குடியரசுக்கும் அதன் மக்களுக்கும் அறியத் தருகிறோம்.

நாகூர் தாஹிறா உம்மா

**பெயர் மாற்றம்**

பொதுத்துவில் - 27 அல்ஹுதா வீதி விக்டர் தோட்டம் 2 எனும் முகவரியில் வசிக்கும் ஐயூப்கான் பாத்திமா அப்னா எனும் பெயரை ஐயூப்கான் பாத்திமா அம்னா என மாற்றிக்கொண்டேன் என இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அனைத்துப் பொதுமக்களுக்கும் பகிரங்கமாகத் தெரியப்படுத்துகிறேன். இதன்பின்னர்இனிவரும்சகலஆவணங்களிலும் ஐ.பாத்திமா அம்னா எனக் கையொப்பமிடுவேன் என உறுதியளிக்கிறேன்.

ஐ.பாத்திமா அம்னா



மட்டக்குளிய தாருத்தக்வா கல்வி நிலையத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் கொழும்பு-02 பிஷப் கல்லூரி கேட்போர் கூடத்தில் கல்வி நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் அல்-ஹாபிஸ் மௌலவி எம்.இஸட்.எம். யுஸ்ரி தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக சர்வதேச இஸ்லாமிய நிவாரண அமைப்பின் (ஐ.ஐ.ஆர்) பிரதிநிதியும், கபூரியா அரபிக் கல்லூரியின் பணிப்பாளருமான அஷ்-ஷெய்க் ஜே.எம்.இம்றான் (கபூரி) யும் கௌரவ அதிதிகளாக தாருத் தக்வாவின் அதிபர் அல்-ஹாபிஸ் எம்.ஆர்.ராஸிக் (அல்-அஷ்கரி), தாருத்தக்வா கல்வி நிலையத்தின் நிருவாகப் பணிப்பாளர் நிஸ்னா யுஸ்ரி, ஹாரி ஏ.ரி.அப்துல் காதர் (இந்தியா), பெரிய பள்ளி பிரதம கதீப் மௌலவி தஸ்லீம் உள்ளிட்ட பல பிரமுகர்களும் கலந்து கொண்டிருந்தனர். இதன்போது போட்டி நிகழ்ச்சிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு சான்றிதழ்கள், நினைவுச் சின்னங்கள், பரிசுகளும் வழங்கப்பட்டதுடன் அதி திறமை காட்டிய மாணவர்களுக்கு விஷேட நினைவுச் சின்னங்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். (ஏ.எஸ்.எம்.ஜாவித்)

சமையல்...! சமையல்...!

## பேரீச்சம்பழ கஜு பிஸ்கட்



**தேவையான பொருட்கள்:**

* பேரீச்சைப்பழம் - 500 கிராம்
* கஜு - 200 கிராம்
* நெய் - 1 மேசைக்கரண்டி
* கசகசா - 1 மேசைக்கரண்டி
* ஏலக்காய்த்தூள் - 1 தேக்கரண்டி
* சாதிக்காய் தூள் - 1 தேக்கரண்டி

**செய்முறை**

பேரீச்சைப்பழத்திலுள்ள விதையை நீக்கி மிக்சியில் அரைக்கவும். கசகசாவை நன்றாக வறுத்துக் கொள்ளவும். ஒரு பாத்திரத்தில் நெய் விட்டு அரைத்த பேரீச்சைப்பழ விழுது, பொடியாக நறுக்கிய நட்ஸ் கலவை, வறுத்த கசகசாவை சேர்க்கவும். அனைத்தும் ஒன்றாக சேர்ந்து வரும்வரை நன்கு கிளறவும். கடைசியாக ஏலக்காய்த்தூள், சாதிக்காய்தூள் சேர்த்து கிளறி இறக்கவும். ஆறியதும் நீளவாக்கில் உருட்டி குளிர்சாதனப்பெட்டியில் வைத்து, சிறிது கெட்டியானதும் வெளியே எடுத்து துண்டுகள் போட்டு பரிமாறவும்.

## ஈ தொல்லையா?

ஷம்போ - 1 கப், வினாகிரி - 1 கப், மரக்கறி எண்ணெய் - 1 கப் இவை மூன்றையும் ஒன்றாக கலந்தகொள்ளவேண்டும்.

முதலில் ஸ்ப்ரே போத்தலில் அனைத்து பொருட்களையும் ஊற்றி நன்கு குலுக்கிக் கொள்ள வேண்டும். இப்போது ஈக்கள் மற்றும் கரப்பான் பூச்சிகளை அழிக்கும் இயற்கையான ஸ்ப்ரே தயார்.



இந்த ஸ்ப்ரேவை ஈக்கள் மற்றும் கரப்பான் பூச்சிகள் வரும் இடத்தில் தெளித்துவிட்டால், அப்பூச்சிகள் வருவது தடுக்கப்படும். மேலும் இந்த கலவையை கை, கால்களில் கூட தடவிக் கொள்ளலாம்.

பா.மலரம்பிகை

# உடல் எடை குறைய



நெல்லிக்காயை விதையை நீக்கி சுத்தம் செய்து, சாறு எடுத்து அதனுடன் சிறிது இஞ்சிச்சாறு கலந்து தினமும் காலையில் குடித்து வந்தால் கொழுப்பு குறையும்.

ஆமணக்கின் வேரை இடித்து தேன் கலந்து நீரில் இரவு ஊற வைத்து காலையில் கசக்கிப் பிழிந்து, நீரை வடிகட்டி குடித்தால் உடல் பருமன் குறையும்.

பாதாம் பவுடரை எடுத்து சிறிது தேன் கலந்து காலையில் சாப்பாட்டிற்கு பிறகு சாப்பிட்டு வந்தால் உடல் எடை குறையும்.

கரட்டுடன் தேன் சேர்த்து சாப்பிட்டு வந்தால் தேவையற்ற கொழுப்பு குறைந்து உடல் எடை குறையும்.

சோம்பை தண்ணீரில் போட்டு காய்ச்சி அடிக்கடி தினமும் குடித்து வந்தால் உடல் எடை குறையும்.

# முகக் கருமையை போக்கும் துளசி

சிறிது துளசி இலைகளை அரைத்து, அத்துடன் தயிர் சேர்த்து கலந்து, முகத்தில் தடவி காய்ந்த பின் கழுவ வேண்டும். இப்படி வாரத்திற்கு ஒருமுறை செய்து வந்தால், பருக்களால் வந்த தழும்புகள் காணாமல் போய்விடும்.

துளசி இலைகளை அரைத்து, அத்துடன் 1 முட்டையின் வெள்ளைக்கருவை சேர்த்து நன்கு கலந்து, முகத்தில் தடவி நன்கு காய்ந்த பின், ஈரமான துணியால் துடைத்து எடுக்க வேண்டும். இறுதியில் ரோஸ் வாட்டரில் நனைத்த பஞ்சுருண்டையால் முகத்தைத் துடைத்து எடுத்தால் முகக்கருமை நீங்கும்.

10-12 துளசி இலைகளை ஒரு பாத்திரத்தில் போட்டு, நீர் ஊற்றி, 3-4 நிமிடம் நன்கு கொதித்த பின் இறக்கி, குளிர வைத்து, பின் முகத்தைக் கழுவுங்கள். இப்படி செய்வதன் மூலம், சருமம் நீண்ட நாட்கள் இளமையுடன் இருக்கும்.



# குழந்தையுடன் பயணிக்கிறீர்களா?



குழந்தைகள் எப்போதுமே வீட்டிற்குள்ளேயே இருக்க வேண்டும் என்பதில்லை. அவர்களுடன் அவ்வப்போது கவனமாகவும், பாதுகாப்புடனும் வெளியே செல்ல வேண்டும். உதாரணமாக, குழந்தை பிறந்ததும், அவர்களுடன் வெளியே செல்ல நினைக்கும் போது, காரில் செல்வது நல்லது.

ஆனால் குழந்தை பிறந்த பின்னர் தாயும், சேயும் 40 நாட்கள் வீட்டில் ஓய்வு எடுக்க வேண்டும். ஏனெனில் இந்தக் காலங்களில் தான் பிரசவத்தின் போது ஏற்படும் உள்காயங்கள் அனைத்தும் குணமாகும்

குழந்தை குறைப்பிரசவத்தில் பிறந்தால் அல்லது பிறவியிலேயே ஏதாவது ஒரு நோயால் பாதிக்கப்பட்டிருந்தால், அதனை விமானத்தில் பயணம் செய்வதற்கு முன்பே, விமான நிறுவனங்களிடம் தெரிவிக்க வேண்டும்.

பிறந்த குழந்தையுடன் விமானத்தில் பயணம் செய்யும் போது, காதுகளில் காற்று புகாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும். இல்லையெனில் குழந்தையின் காதுகளில் அழுத்தம் அதிகரித்து, காதுகளில் வலியை உண்டாக்கிவிடும்.

முக்கியமாக எங்கு வெளியே சென்றாலும், குழந்தைக்கு வேண்டிய மருந்துகள், ஆடைகள், நெப்கின்கள் போன்றவற்றை எடுத்துச் செல்ல வேண்டும்.

காரில் பயணம் செய்வதாக இருந்தால் சூரியனின் கதிர்கள் நேரடியாக படும்படி வைத்துக் கொள்ள வேண்டாம். ஏனெனில் அது குழந்தையின் சருமம் மற்றும் கண்ணிற்கு பாதிப்பை ஏற்படுத்தும். குழந்தையை ஏசி இருக்கும் இடத்திற்கு நேராகவும் வைக்க கூடாது. அது குழந்தைக்கு இருமல் அல்லது சளி போன்றவற்றை ஏற்படுத்திவிடும். எல்லாவற்றிற்கும் மேலாக குழந்தைக்கு மூன்று வயதிற்கு மேல் இருந்தால், எந்த ஒரு பயமுமின்றி, கார், ரயில் அல்லது விமானம் போன்ற எதிலும் அச்சமின்றி பயணத்தை மேற்கொள்ளலாம்.

# தாய்ப்பால் நன்கு சுரக்க

எள்ளு - 1 தேக்கரண்டியும், பாதாம் பால் - 1 கப்பும் எடுத்துகொள்ள வேண்டும். முதலில் மிக்ஸியில் பாதாம் பால் மற்றும் எள் சேர்த்து நன்கு அரைத்துக் கொள்ள வேண்டும். பின் இந்த பானத்தை தினமும் காலை உணவு உண்ட பின் குடிக்க வேண்டும். இப்படி 2 மாதத்திற்கு குடித்து வர, தாய்ப்பால் நன்கு சுரக்கும்.



இந்த பானத்தைக் குடிப்பதுடன், புதிய தாய்மார்கள் நல்ல ஆரோக்கியமான உணவுகளை உட்கொள்ள வேண்டியது அவசியம். மேலும் தினமும் போதுமான அளவில் நீரைக் குடிக்க வேண்டும். அதுமட்டுமல்லாமல், தினமும் தவறாமல் பால் குடிக்க வேண்டும். பெண்களின் உடலில் கல்சியம் அதிகம் இருந்தால் தான், தாய்ப்பால் அதிகம் சுரக்கும். இத்தகைய கல்சியம் எள்ளில் வளமாக உள்ளது. பாதாம் பாலில் கல்சியம் மட்டுமின்றி, புரோட்டீனும் ஏராளமான அளவில் உள்ளது.

---

# தலைமைத்துவம் வளைந்துகொடுத்து மற்றவர்களுக்கு ஏணியாக வேண்டும்

## மாகாண சபை உறுப்பினர் றஸாக்





(மருதமுனை நிருபர்)

தலைமைத்துவம் என்பது நல்ல ஒழுக்க விழுமியங்களோடும் சுய கட்டுப்பாட்டோடும் வளைந்து கொடுத்து மற்றவர்களுக்கு ஏணியாக இருப்பதாகும்.

அப்போதுதான் வீட்டையும் நாட்டையும் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியும் எனவே மாணவத் தலைவர்கள் ஒழுக்கம் உள்ளவர்களாக இருக்க வேண்டும் என கிழக்கு மாகாண சபை உறுப்பினர் கே.எம்.ஏ.றஸாக் தெரிவித்தார்.

மருதமுனை அல்-ஹம்றா வித்தியாலய மாணவத் தலைவர்களுக்கும்,வகுப்புத் தலைவர்களுக்கும் சின்னம் சூட்டிய நிகழ்வு நேற்றுமுன்தினம் அதிபர் ஏ.குணுக்கத்துல்லா தலைமையில் நடைபெற்றது.இதில் பிரதம அதிதியாக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:-

மாணவத்தலைவர்கள் சக மாணவர்களோடு மிகவும் அன்பாகவும் பண்பாகவும் பழக வேண்டும் எந்த மாணவரையும் தண்டனைக்குட்படுத்துவதும் குற்றம் சுமத்துவதும் தவிர்க்கப்பட வேண்டும். பாடசாலைக் காலம் பொன்னான காலமாகும். அக்காலம் ஒரு போதும் மீண்டும் வராது. தற்பொழுது மாணவர்கள் ஆசான்களை மதித்து நடக்கின்ற தன்மை குறைந்து கொண்டு போகின்றது.ஆசான்களை மதிக்காதவர்கள் ஒரு போதும் நல்ல மாணவர்களாக இருக்க முடியாது.

இந்த நிகழ்வில் சிறப்பு அதிதியாக கல்முனை முஸ்லிம் கோட்டக் கல்விப் பணிப்பாணர் ஏ.எல்.சக்காப்,சிறப்பு அதிதிகளாக கல்முனை மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் ஏ.எல்.எம்.முஸ்தபா,ஆசியா மன்றத்தின் நிகழ்ச்சித் திட்ட ஆலோசகர் எம்.ஐ.எம்.வலீத் ஆகியோர் கலந்து கொண்டனர். இங்கு 42 மாணவத் தலைவர்களுக்கு நியமனக்கடிதம் வழங்கி சின்னம் சூட்டப்பட்டது.





இரத்தினபுரி பர்கஸன் உயர் பாடசாலையின் நூற்றாண்டு நிறைவு விழாவினை முன்னிட்டு பாடசாலை பிரதான மண்டபத்தில் இஸ்லாமிய சமய நிகழ்ச்சிகள் நேற்று இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்ட மாகாண சபை உறுப்பினர் இப்லார் யஹ்யா உட்பட்ட பிரமுகர்களைப் படங்களில் காணலாம். (எம்.எல்.எஸ்.முஹம்மத் - இரத்தினபுரி நிருபர் )

# தைபா அரபுக் கல்லூரியில் ஆறு மாணவிகளுக்கு மௌலவியா பட்டம்

(அஸ்லம் எஸ்.மௌலானா)

சாய்ந்தமருது தைபா மகளிர் அரபுக் கல்லூரியில் இருந்து முதலாவது தொகுதி மாணவிகள் ஆறு பேர், மௌலவியா பட்டம் பெற்று வெளியேறியுள்ளனர் என்று கல்லூரி அதிபர் அஷ்ஷெய்க் எஸ்.எச். ஆதம்பாவா மதனி தெரிவித்தார்.



இக்கல்லூரியின் ஐந்து வருட அல்ஆலிம் கற்கை நெறியை சிறப்பாக பூர்த்தி செய்து, இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்த எம்.எஸ்.மெரீனா, எம்.எம்.அப்ரோஸ் சித்தாரா, ஏ.எம்.பாத்திமா றுமானா, ஏ.ஜீ.சுமையா தாலித், எஸ்.சஸ்னாஸ், ஏ.இம்னாஸ் ஆகியோருக்கே அத்தைபிய்யா மௌலவியா எனும் பட்டம் வழங்கப்பட்டிருப்பதாக அவர் குறிப்பிட்டார். தென்கிழக்கு பல்கலைக்கழக முன்னாள் பீடாதிபதி அஷ்ஷெய்க் ஏ.எம். அலியார் தலைமையிலான நிபுணத்துவ குழுவினரால் நடத்தப்பட்ட பரீட்சையில் இம்மாணவிகளுள் முதல் மூன்று பேர், முதல் தரத்திலும் அடுத்த இருவர் இரண்டாம் மேல் தரத்திலும் சிறப்பாக சித்தியடைந்துள்ளனர் எனவும் அதிபர் அஷ்ஷெய்க் எஸ்.எச்.ஆதம்பாவா சுட்டிக்காட்டினார்.

அதேவேளை இவர்களுள் நான்கு மாணவிகள் கடந்த 2015ஆம் ஆண்டு நடைபெற்ற ஜீ.சி.ஈ. உயர்தர பரீட்சையில் சித்தியடைந்து, பல்கலைக்கழக அனுமதி பெற்றிருந்ததுடன் அவர்கள், தற்போது மௌலவியா பட்டத்துடன் தென்கிழக்கு பலகைக்கழகத்தில் உயர்கல்விக் கற்கையை ஆரம்பித்துள்ளனர்.

# குடுவில் கிராம மாணவர்கள் கல்வியை கைவிடுவது ஏன்?

(இறக்காமம் நிருபர்)

இறக்காமம் கல்விக்கோட்டத்திற்குட்பட்ட குடுவில் கிராம மாணவர்கள் இடை நடுவில் தமது கற்றல் நடவடிக்கைகளை நிறுத்திவிட்டு இடைவிலகுவதாக கவலை தெரிவிக்கப்படுகிறது.

6 தொடக்கம் 19 வரையான வயதெல்லைக்குட்பட்ட மாணவர்களுக்கு கட்டாயக்கல்வி வழங்கப்படவேண்டும் எனக் கல்வி அமைச்சு வலியுறுத்திய நிலையில் இக்கிராமத்திலிருந்து இறக்காமம் மற்றும் வரிப்பத்தான்சேனை பாடசாலைகளில் அதிகமானோர் இடைவிலகி வருகின்றனர்.

இறக்காமம் கோட்டத்தில் இதனைக் கண்டறிவதற்கு உரிய அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருந்த போதிலும் இது விடயத்தில் கண்டு கொள்ளாமல் இருப்பது கவலைக்குரிய விடயமாகும். இவ்வாறு இடைவிலகும் மாணவர்கள் சிறு சிறு கூலித்தொழில்களில் ஈடுபட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# அறபாவில் வருடாந்த பொதுக்கூட்டம்

(வெலிகம நிருபர்)

வெலிகம அறபா மத்திய கல்லூரியின் (தேசிய பாடசாலை) பாடசாலை அபிவிருத்திச் சங்க வருடாந்த பொதுக் கூட்டம் எதிர்வரும் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 8.30 மணிக்கு கல்லூரி வபா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரியின் அதிபர் ஜே.எஸ். வாரிஸ் அலி மௌலானா தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில், மாணவர்களின் சிறப்பான கல்வி, எதிர்கால கல்வி நடவடிக்கைகள் பற்றியும் ஆராயப்படவுள்ளது. எனவே, மாணவர்களது நலன் கருதி சகல பெற்றோர்களும், பாதுகாவலர்களும் கலந்து சிறப்பிக்குமாறு பாடசாலை அபிவிருத்திச்சங்க செயலாளர் கேட்டுக்கொள்கிறார்.

ஆதில் அலி சப்ரி

# இராஜதந்திர காய்நகர்த்தல்களால் பந்தாடப்படும் நமது மீனவர்கள்




'கரை திரும்பும் படகுகளின் தூண்டில் வலைகளில் இருந்து மீன்களை பிரித்து தட்டிக் கொடுத்து, அதிலிருந்து கிடைப்பதே எமது வாழ்வாதாரம். அதற்காக காலையிலிருந்து காத்திருப்போம். தூண்டிகள் திருடப்பட்டு, வலைகள் அறுக்கப்பட்ட கவலையுடன் தள்ளாடியபடி கரையொதுங்கும் வெறும் படகுகளால் மீனவர்கள் மூலதனத்தை இழப்பது போன்றே, நிறை படகுகளில் மீன் தட்டக் காத்திருக்கும் நாமும் வாழ்வாதாரத்தையே இழக்கின்றோம்.'

மீனவர்களின் வாழ்க்கையென்றால் தாளத்துடன் கூடிய பாடல்களும், களைப்பைப் போக்கும் கடற் பயணமும், உற்சாகம் பொங்கும் கடற்கரையோரமும் தரும் ஒட்டுமொத்தக் குதூகலம் என நான் எண்ணினேன். ஆனால் பருத்தித்துறை நகர கடற் தொழிலாளர் கூட்டுறவு சமாச தலைவி ஆதவன் ராஜவேனி கூறிய கருத்துக்கள் சோகம் நிறைந்த யதார்த்தத்தை துலாம்பரமாக்கியது.

யாழ்ப்பாணம் பருத்தித்துறை கொட்டடி. அழகான மீனவக் கிராமம். வண்ண வர்ணம் தீட்டப்பட்ட படகுகளும்,வலைகளைச் சுற்றி ஓலமிடும் காக்கைகளும், கரையொதுங்கிய முத்துச் சிப்பிகளும், வலை திருத்தும் மீனவர்களும், இரவு கடலுக்குச் சென்றவர்களின் வருகைக்காக காத்திருக்கும் சின்னஞ்சிறிசுகளும் அற்புதம்


ஆதவன் ராஜவேனி

கொட்டடியில் 316 மீனவக் குடும்பங்கள் வசித்து வருகின்றன. அவர்களில் யுத்தத்தால் கணவனை இழந்த, கணவனால் கைவிடப்பட்ட 75 குடும்பங்கள் பெண்களை தலைமைகளாக கொண்டியங்கிவருகின்றன.

பெண்களைத் தலைமைகளாகக் கொண்ட 75 குடும்பங்களில் பெரும்பாலானோர் மீன்பிடித் தொழிலுடனே தொடர்புபட்டுள்ளனர். மீன் பிடித்துவரும் படகு, வலை, தூண்டில்களில் உள்ள மீன்களைவகை பிரித்து, தட்டிக்கொடுப்பதையே இவர்கள் தொழிலாகக் கொண்டுள்ளனர்.

தென்னிந்திய - இலங்கை மீனவர் பிரச்சினை என்பது வெறுமனே மீனவப் பிரச்சினை என்ற நிலையைத் தாண்டி, இரு நாடுகளுக்கிடையிலான பிரச்சினையாக மாறியுள்ளது. இரு நாட்டு அரசாங்கங்களும் இதனை இராஜ தந்திர ரீதியாகவே கையாண்டு வருகின்றன. இரு நாட்டு அரசியல் கட்சிகளும், அரசியல்வாதிகளும் அரசியல் இலாபமும் கண்டுவருகின்றதோடு, மீனவ மோதல்களும், கைதுகளும் இந்திய - இலங்கை இராஜதந்திர விரிசல்கள் வரை செல்கின்றன.

தென்னிந்திய - இலங்கை மீனவப் பிரச்சினைகள் குறித்து நாளாந்தம் பேச, எழுதப்படுகின்றன. தென்னிந்திய இழுவைப் படகுகள் பருத்தித்துறை கொட்டடியில் பெண்களைத் தலைமையாகக் கொண்ட மீனவக்குடும்பங்களின் வாழ்வாதாரம் கடும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளது.

பருத்தித்துறை முனையிலிருந்து 22 கடல் மைல்கள் தொலைவில் உள்ள தென்னிந்திய மீனவர்கள் இலங்கை எல்லை கடந்து 10 கடல் மைல்கள் வரை வந்து மீன்பிடியில் ஈடுபடுகின்றனர். தடைசெய்யப்பட்ட இழுவைப் படகுகளைக் கொண்டு மீன் பிடியில் ஈடுபடுகின்றனர்.

இழுவைப் படகுகளால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து மாதகல் மேற்கு கடற் தொழில் அமைப்பின் தலைவரும், வட மாகாண கடற் தொழில் இணைப்பின் செயலாளருமான என்.வீ. சுப்ரமணியம் கருத்து தெரிவிக்கும்போது,

'வட மாகாணம் யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய நான்கு மீன்பிடி மாவட்டங்களை உள்ளடக்கியதாகும். யாழ்ப்பாணத்தில் 24,000 மீனவ குடும்பங்களைச் சேர்ந்த 90,000 பேர் உள்ளதோடு, வட மாகாணத்தில் 50,000 மீனவ குடும்பங்களைச் சேர்ந்த 200,000 பேர் மீன்பிடியை வாழ்வாதாரமாக கொண்டுள்ளனர். 2002 வரை இழுவைப் படகுகளின் தாக்கத்தை நாம் உணர்ந்திருக்கவில்லை. ரணில்-பிரபா சமாதான ஒப்பந்தத்தின் பின்னர் நாம் அதிகளவில் மீன்பிடியில் ஈடுபட முனையும் போதே இழுவைப் படகுகள் கண்ணெதிரில் தெரிந்தன. வலைகளை அறுத்துச் செல்ல ஆரம்பித்தனர். கடன் பட்டு வலையெடுத்துச் சென்றவர்கள் கடனை ஈடுசெய்ய முடியாது மாயமாயினர். சிலர் கூலித் தொழிலை ஆரம்பித்துள்ளனர். இந்திய கடற்பரப்பில் உள்ள மீன் வளம் முற்றாக அழிந்த பின்னரே எமது எல்லையில் மீன்பிடிக்க வருகின்றனர். இழுவைப் படகுகள் மீன் குஞ்சுகளை பெருமளவில் கொன்றுவிடுகின்றன. இனப்பெருக்க காலம் என்று இருக்கும் 45 நாட்களும் மீன் பிடியை விட்டுவிட்டு 46ஆவது நாள் மீண்டும் வந்து இழுவை பயன்படுத்தும் போதும் பயனற்று போகின்றது.




மீனவர் கிருஷ்ணகுமார்

அவர்கள் 1கிலோ மீன் பிடிக்கும்போது 16 கிலோ வரையான குஞ்சு மீன்கள் அழிக்கப்படுகின்றன. இந்திய மீனவர்களின் வருகையால் இலங்கையின் கடல் வளம் குன்றிவருகின்றது. எமது மீனவர்களுக்கு மீன் இல்லாது சென்றுள்ளது. அதையே நம்பியிருக்கும் மீனவ குடும்பங்களுக்கு வாழ்வாதாரம் இல்லாது போயுள்ளது. இந்திய இழுவைப் படகுகள் தொடர்ந்தால் இலங்கையில் கடற்பரப்பும் உழுதுவிடப்பட்ட மைதானமாக மாறும் அபாயம் உள்ளது.' என்றார்.

கடற் தொழிலாளர் கூட்டுறவு சமாச தலைவி என்றவகையில் ஆதவன் ராஜவேனி தனது அனுபவங்களை கூறுகையில்,


என்.வீ. சுப்ரமணியம்

'கணவனால் கைவிடப்பட்ட பின்னர் குடும்பப் பொறுப்பு என் தலையில் விழுந்தது. இரண்டு பெண் பிள்ளைகள் இருக்கின்றனர். அவர்கள் தரம் 9 மற்றும் 6இல் கல்வி பயில்கின்றனர். மீன்களுடன் கரைக்கு வரும் படகுகளில் இருந்து மீன்களை வகை பிரித்தல், வலை, தூண்டில்களில் இருந்து மீன்களை தட்டல் போன்ற வேலைகளைச் செய்தே வாழ்வாதாரத்தை தேடிக்கொள்கிறோம். இதனையே பெண் தலைமைகள்பலரும் செய்துவருகின்றனர். அதிகமான மீன்கள் கிடைக்கும் போது எமக்கு 1000 வரையில் கிடைக்கின்றது. படகுகள் வெறுமையாக திரும்பும் போது எமது வாழ்வாதாரமும் பாதிக்கின்றது. மீன்கள் குறைவாக பிடிபடும்போது 200 தொடக்கம் 400 வரையிலேயே கிடைக்கின்றது. இவற்றை வைத்துக்கொண்டு அன்றாட சமையலை பார்ப்பதா? குழந்தைகளின் கல்வியைப் பார்ப்பதா? என்ற போராட்டம். இரண்டு மாதங்கள் அளவில் மீன்பிடி முழுமையாக தடைப்படும். அதன்போது கூலி வேலைகளைச் செய்து வாழ்க்கை நடத்துகின்றோம். அரச, அரச சார்பற்ற உதவிகளும் மழை, புயல் போன்ற அத்தியாவசிய காலங்களில் அன்றி ஏதோவொரு காலத்தில் கிடைக்கின்றதால் பயனற்று போகின்றது. தென்னிந்திய இழுவைப் படகுகளால் படகு உரிமையாளர்கள், மீனவர்கள் பாதிப்படைவது போன்றே நாமும் அதிகமாக பாதிக்கப்படுகின்றோம்.' என்றார்.

மீனவர் கிருஷ்ணகுமார் கடற் தொழில் பற்றி கூறும்போது, 'முன்னர் ஒரு வாரத்துக்கு 40,000 வரையில் உழைப்போம். இப்போது 10,000 வரையில் குறைவடைந்துள்ளது. 2500 எரிபொருளும், மீன்பிடிக்கச் செல்பவர்களுக்கு 3000 அளவிலும் கொடுக்கவேண்டியுள்ளது. இதனால் மீன் தட்டும் வேலைகளில் ஈடுபடுபவர்களுக்கு 700 தொடக்கம் 400 வரையில் குறைந்த ஊதியமே வழங்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம்.' என்றார்.

தென்னிந்திய மீனவர்கள், இழுவைப் படகுகளால் இலங்கையின் கடல் வளமும் மீனவத் தொழிலும் அழிவுக்குள்ளாகி வருகின்றது என்பதே நிதர்சனம். வடக்கில் உள்ள சுமார் 200,000 மீனவர்களும் ஏதோவொருவகையில் இதனால் பாதிக்கப்படுகின்றனர். இலங்கைக்கு ஜீ. எஸ்.பீ வரிச் சலுகை கிடைக்கும்போது ஏற்றுமதி செய்ய மீன்கள் அற்ற, உழுதுவிடப்பட்ட கடற்பரப்பே எஞ்சும் அபாயமும் உள்ளது என அஞ்சும் மீனவர்களும் நம்மத்தியில் உள்ளனர். இந்திய இழுவைப் படகுகளை இலங்கை தன்னகத்தே வைத்துக்கொள்ளும் இராஜ தந்திரத்தைக் கையாண்டு வருகின்றது. 10 இழுவைகளை கடற்படையினர் கைப்பற்றும்போது 10 படகுகளை விடுதலை செய்கின்றனர். அனைத்து பிரச்சினைகளின் பாரதூரத்தையும் அறிந்த வெளிவிவகார மற்றும் மீன்பிடி அமைச்சர்கள் இந்தியாவுடனான இலகு இராஜ தந்திரத்தைக் கையாழ்வது தவிர நிரந்தர தீர்வு குறித்து நகர்வதாகத் தெரியவில்லை. நாடுகளுக்கிடையிலான இராஜதந்திர காய்நகர்த்தலில் அப்பாவி மீனவர்களின் வாழ்க்கை பந்தாடப்படுவது பரிதாபத்திற்குரியதாகும். இவர்களின் வாழ்க்கையில் விமோசனம் கிடைக்க சம்பந்தப்பட்டோர் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டியது அவசியமாகும்.



கொடும் போர் முடிவிற்கு வந்தபோதும் யாழ் கொட்டடிவாழ் மீனவர்களின் வாழ்க்கையில் இன்னமும் ஆறுதல் கிடைக்கவில்லை. இலங்கைக் கடற்பகுதிக்குள் இழுவைப் படகுகளில் அத்துமீறி நுழைந்து அட்டகாசம் புரிந்து செல்லும் இந்திய மீனவர்கள் வருகையை அரசாங்கம் தலையிட்டு உடன் நிறுத்தவேண்டும் என்பதே பாதிக்கப்பட்டவர்களின் எதிர்பார்ப்பாகும்.

# பொருளாதார நிபந்தனைகள்

## மற்றும் அரசியலமைப்பு அரசாங்கம்

சூரி ரத்னபால

(நேற்றைய தொடர்ச்சி...)

2000ஆம் ஆண்டின் Ben Chifley ஞாபகார்த்த விரிவுரையில், அவுஸ்திரேலிய எதிர்காலத் திட்டமிடலில் இடதுசாரிக் கட்சிப் புலமையாளரின் மிக முக்கிய மேற்கோளை, Pearson என்பவர் அனேக இடதுசாரி வருணனையாளர்களின் (விமர்சகர்களின்) விரக்திநிலை எனப் பிரகடனப்படுத்தினர்.

உண்மையாதெனில், எனக்குத் தெரிந்த Cape Yoke குடாநாட்டில் உள்ள சனசமூகங்களின் ஆகக்குறைந்த யதார்த்தபூர்வமான தேவையாக சமூக ஒழுங்கை பழைய நிலைக்கு கொண்டு வருதல் மற்றும் சட்டத்தை செயற்படுத்துதல் ஆகியன உள்ளன. அவை தான் தேவைப்பட்டவையாகும். உங்களது பேர்த்தி மற்றும் மனைவிமாரைக் கேளுங்கள். ஒன்று மட்டும் நிகழும் வேளையில் சனசமூகங்களில் என்ன நிகழுகிறது. குற்றச்செயல்கள் புரியப்படும்போது குற்றவாளிகள் பாதிக்கப்பட்டவர்களாக பாதுகாப்பளிக்கப்படுகின்றார்களா? ஏதேனும் ஆச்சரியம் உள்ளதா எனப் பார்க்கும் போது மக்கள் தமது செயல்கள் தொடர்பாக எவ்வித பொறுப்பையம் ஏற்றுக்கொள்ளாத உணர்வு அவர்களிடத்தில் விரைவாக அதிகரிக்கும், அத்துடன், அதை நியாயமாகக் கலைப்பதற்கு உள்ள உரிமையாக சமூக ஒழுங்கு இரண்டாவது இடத்திற்குத் தள்ளப்படுமா? இது கறுப்பு இன மக்கள் தொடர்பில் இத்தகைய அடிப்படை சமூகத் தேவைப்பாடுகளை எமது முன்னேற்றகரமான சிந்தனை ஏன் புறக்கணித்து வருகிறது? புள்ளிவிபரங்கள் ஒருபோதும் மாறுபாடடையாமல் இருப்பது ஏதேனும் ஆச்சரியத்தை ஏற்படுத்துகிறதா? Cape York குடாநாட்டில் உள்ள எமது சனசமூகங்களின் சமூக ஒழுங்கை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டுவரின் சிறைச்சாலையில் உள்ள மக்களின் தொகை குறைவடையுமா? சமூக ஒழுங்கு இல்லாத நிலையில் எந்த சமூகங்கள் சுபீட்சமடையும். (Pearson 2000)

நிறுவனங்கள் அழிவடைந்து போவது தொடர்பிலான காரணங்கள் பற்றிய இணக்கங்கள் எதுவும் கிடையாது? தரமான இடதுசாரி ஒருவரின் வாதம் என்னவெனில், சமூக ஒழுங்கு வறுமையிலிருந்து அல்லது வேறு விதமாக, வருமான சமத்துவமின்மையிலிருந்து செழிப்படைகிறது என்பதாகும்.

இத்தகைய நியாயப்படுத்தலுடனான பிரதான பிரச்சினையாக இருப்பது யாதெனில், அது வறுமைக்கான காரணங்களைக் கருத்திற்கொள்ளாது இருவையினொத்த காரணம் பற்றிய பிரச்சினையை தவறாகப் புரிந்து கொள்வதேயாகும். அதிகரித்துவரும் செல்வம் மற்றும் நலன்புரி வலையமைப்புகள் (Yankelorich 1994) ஆகியவற்றின் விளைவாக ஏனையோர் சுட்டிக்காட்டும் காரணங்களாகிய தனிநபர்களுக்கு இடையிலான தங்கியிருக்கும் நிலைமை குறைவடைவதுடன் நலன்புரி மாநிலத்தினால் உருவாக்கப்பட்ட ஊக்குவிப்புகள் மற்றும் ஒழுக்கம் பற்றிய இடர்களும் குறைவடைகின்றன. (Becker 1981: Murray 1984) காரணங்கள் எதுவாக இருப்பினும் தாராளமய (லிபரல்) அரசியலமைப்பு வாதத்திற்கான பிரச்சினையாக இருப்பது யாதெனில் அதன் சொந்த தத்துவங்களை மீறாமல் அதன் நிறுவனம் சார் அடிப்படை திருத்தியமைக்க வேண்டியிருப்பதாகும்.

பொருளாதார நிபந்தனைகள் மற்றும் அரசியலமைப்பு அரசாங்கம்

அரசியலமைப்பு அரசாங்கத்தை நாங்கள் உற்று நோக்கிய போதிலும், அதன் வெற்றி தொடர்பில் பொருளாதார நிபந்தனைகள் முக்கிய காரணியாக அமைவது வெளிப்படையாகும். சந்தைப் பொருளாதாரத்தின் எழுகையானது சட்டத்தின் நன்மைகள் ஒரு இனமரபுக்குழு அல்லது குழுவின் உறுப்பினர்களுக்கு மட்டும் விரிவுபடுத்தப்பட்ட சமூகத்திலிருந்து ஒவ்வொருவருக்குமுள்ள உரித்து வரலாற்றுத் தொகுப்பு மற்றும் தனிநபரைக் குறிக்காத விதிகள் ஆகியவற்றிலிருந்தான பாதுகாப்புவரை மாற்றம் செய்துள்ளது. வர்த்தக நன்மைகள் தொடர்பான அங்கீகாரம், பல்வேறு சொத்துக்களை / உடைமைகளை வைத்திருப்பதற்கா / விற்பதற்கான உரிமை மூலம் சுதந்திரம் மற்றும் ஒழுங்கைப் பாதுகாக்கும் உரித்து வரலாற்றுத் தொகுப்பு முறைமையின் எழுச்சிக்கு வழிவகுத்தது (Hayek 1991, 30) அத்தகைய பங்கீடு செய்யப்பட்ட விதிகளின் அவதானத்தின் அடிப்படையிலான சந்தைகள் அந்நியர்கள் மத்தியில் நம்பிக்கையின் புதிய வடிவத்தை உருவாக்கியது. தனிநபர் அந்நியரின் நம்பிக்கையாக இது இல்லாதபோதும் ஆட்சிமுறைமையின் நம்பிக்கையாகும் - தனிநபர்களில் தங்கியிருப்பதிலும் பார்க்க அதிகளவு நிறுவனங்களில் தங்கியிருப்பதாகும். அத்தகைய விதிகளைப் பலப்படுத்தும் உரித்து வரலாற்றுத் தொகுப்பு விதிகளை அடிப்படையாகக் கொண்டதே மீள்கொடுக்கல்வாங்கல்களாகும். சந்தைகள் குறைவடையும்போது காரணம் எதுவாக இருப்பினும், உரித்து வரலாற்றுத் தொகுப்புச் சட்டத்தின் உறுதித் தன்மை மற்றும் பாவனை நலிவடையும். ஏனெனில், அந்நியர்களுக்கிடையிலான பரிவர்த்தனை குறைவடைவதுடன் நம்பிக்கையும் குறைவடையும்.

வறுமையானது சட்டஆட்சியை அழித்துவிடாது. ஆயினும், அத்தகைய ஆட்சியின் பலம் மற்றும் அடைவை மட்டுப்படுத்துகிறது. வறுமையாக்கப்பட்ட சனசமூகங்களிடத்தே எப்போதும் உறுதியான பொதுச்சட்டங்களிருப்பதை வரலாறு காட்டுகிறது. இத்தகைய சனசமூகங்களில், சட்டத்தை அவதானித்தல் மூலம் பெறப்பட்ட நன்மை மற்றும் சட்டத்தை மீறுவதிலிருந்து பெறப்பட்ட தீங்கு ஆகியன பலம்வாய்ந்தவை. இணங்கியொழுகாமையின் செலவினங்களைவிட இணங்கியொழுகுதலின் உண்மையான மற்றும் எதிர்பார்த்த செலவினங்கள் அதிகளவில் இருக்கும்போது சட்ட ஆட்சி செயலிழக்க ஆரம்பிக்கிறது. சமூகப் பாதுகாப்பு சட்டங்கள், உதாரணமாக செயற்படுத்துவது கடினமாக இருப்பது ஏனெனில், தகைமைக்கான தகவுதிறன் பற்றிய உறுதியற்ற தன்மை மற்றும் கோரிக்கைப் பிணக்கின் சான்றளிக்கும் பிரச்சினை ஆகியவற்றினாலாகும்.

(சட்டத்தை தாபிப்பதற்கான மிக முக்கிய கஷ்டங்களில் ஒன்றாக இருப்பது நபர் ஒருவரின் செல்வ மட்டம் மற்றும் அவரின் வருமானம் ஆகியவையாகும்) மாறாக, சமூகம் ஒன்றில் ஒருவரின் பொதுநலம் அல்லது தப்பிப் பிழைத்தல் ஆகியன திடீர் அழிவு ஏற்படும் சூழமைவுகளில் தங்கியிருப்பது ஏனையோரின் நல்லெண்ணம் மற்றும் இவ்விளையாட்டின் விதிகளை அவதானிப்பதன் மூலம் நிலைத்துள்ள சக்தி வாய்ந்த ஊக்குவிப்புகள் என்பவற்றினாலாகும். இத்தகைய பொருளாதார சூழமைவுகளில் சட்ட ஆட்சி தொடர்பான பிரச்சினை ஏற்படுவது எவ்வாறெனில், அரசு சந்தைகளை ஒழுங்கு விதிகள் மற்றும் உரித்தாக்குதல் மூலம் பிரதியீடு செய்து வழங்குநராக மாறும்போது ஆகும்.

இலங்கை அரசியல் வரலாற்றிலிருந்து தீவிரமான உதாரணமொன்றைப் பரிசிலிப்பின், நான் நன்கு அறிந்த நாடாகும். இலங்கை என அறியப்பட்ட நாடு 1948 ஆம் ஆண்டில் சுதந்திரத்தைப் பெற்றது எவ்வாறெனில், சர்வசன வாக்குரிமை, நீதித்துறைச்சுதந்திரம், பகிரங்கசேவை, சகல சனசமூகங்களுக்குமென சட்டத்தின் கீழ் சமமான பாதுகாப்பு ஆகியவற்றிற்கு வெஸ்ட்மினிஸ்டார் வகைப் பாராளுமன்ற சனநாயக முறையில் உத்தரவாதமளிக்கக்கூடிய வகையில் தாபிக்கப்பட்ட மன்னராட்சி அரசியலமைப்பின் கீழ் ஆகும். அதன் முதல் தசாப்த காலத்தில் இலங்கை அரசியலமைப்பு அரசாங்கத்தின் மாதிரியுருவாக நடாத்தப்பட்டது. சட்ட ஆட்சியின் கலாசாரம் கடந்த செல்லுபடித்தன்மையை சிறந்த முறையில் நிரூபிக்கிறது. முதலாவது சோசலிஷ அரசாங்க தேர்தலுடன் அதன் அரசியலமைப்பு 1956 ஆம் ஆண்டில் நலிவடையத் தொடங்கியது. இந்த அரசாங்கம் இன ரீதியாகப் பாரபட்சப்படுத்தும் சட்டங்கள் மற்றும் நிருவாக நடவடிக்கைகள் ஆகியவற்றை அறிமுகப்படுத்திய நோக்கம் யாதெனில், அதன் தேர்தல் வாக்குறுதிகளை சிங்கள கமக்கார வர்க்கத்தினரிடையே நிறைவேற்றி அவர்களைத் தேர்தல் வாக்காளர்களாகப் பேணுவதற்குமாகும்.

1972ஆம் ஆண்டு அரசியலமைப்பானது முன்னணி மாக்ஸிச சட்டத்தரணி ஒருவரால் எழுத்துருவாக்கம் பெற்றதுடன், மக்களின் இறையாண்மை எனும் பெயரில் காணப்பட்ட சமவலுத் தன்மைகள் பல அகற்றப்பட்டன. வலதுசாரிகளின் அதிகாரத்திற்கு 1977ஆம் ஆண்டில் திருப்பம் பெற்றபோது அரசியலமைப்பின் சில சமவலுக்கல் மீளப்பெறப்பட்டபோதிலும், நிலைமை நன்றாக அமைந்ததுடன் சில விடயங்கள் தொடர்பிலான சட்ட ஆட்சி 16 வருட ஆட்சியின் போது மிகமோசமான நிலையை அடைந்தது.

அரசியலமைப்பின் தவறான கையாளுகையினால் அரசியலமைப்பு அரசாங்கம் நலிவடையத் தொடங்கிய போதிலும், அது ஒரு முக்கிய காரணமாக இருக்கவில்லை. ஐக்கிய இராச்சியம், நியூசிலாந்து மற்றும் சனநாயகம் நிலவும் நாடுகளை விட 1972ஆம் ஆண்டு அரசியலமைப்பில் அதிகளவு பாதுகாப்பு வழிமுறைகள் காணப்பட்டன.

எனினும் இலங்கையில் அரசியலமைப்பு அரசாங்கத்தின் நிறுவன நிலைமைகள் திடீரென ஏற்பட்ட பொருளாதாரச் சரிவினால் அழிக்கப்பட்டது.

(தொடரும்)

# அரசியலமைப்பு, அரச, கட்டமைப்பினை மாற்றும் அரசின் முயற்சி அபாயமிக்கது

## மஹிந்த ராஜபக்ஷ



இலங்கையின் அரசியலமைப்பு, அரச கட்டமைப்பு, சட்டத்தொகுதி ஆகியவற்றில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் முன்னெடுத்துவரும் முயற்சியானது, மிகவும் அபாயகரமானது. அதன் ஊடாக, யுத்தத்தினால் பெற்றுக்கொள்ள முடியாததை, பயங்கரவாதிகளுக்குக் கையளிப்பதற்கு இந்த அரசாங்கம் முயற்சிக்கின்றது என, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் அனுப்பியுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,மேற்குறிப்பிட்ட விவகாரங்கள் தொடர்பில், கடந்தாண்டு நவம்பர் மாதம் முதல், ஒவ்வொரு விடயங்களும் ஊடகங்களின் ஊடாக வெளியாகியுள்ளன அல்லது உத்தியோகபூர்வமாக அரசாங்கத்தினால் வெளியிடப்பட்டுள்ளன. இதிலிருந்து அரசாங்கத்தின் உள்நோக்கம் வெளிப்பட்டுள்ளது.

அரசியலமைப்பில், உப-குழுக்களின் அறிக்கைகள் கடந்த நவம்பர் மாதம் உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டன. நல்லிணக்கம் மற்றும் ஒருமைப்பாடு தொடர்பிலான செயலணியின் அறிக்கையானது ஜனவரி மாதம் வெளியானது. அதில், ஜி.எஸ்.பி பிளஸ் சலுகையை பெற்றுக்கொள்வதற்காக இலங்கைக்கு விதிக்கப்பட்ட 58 நிபந்தனைகள், பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்கு பதிலாக, பிரதமரினால் முன்மொழியப்பட்ட புதிய சட்டமூலம் ஆகியனவும் ஊடகங்களினால் பகிரங்கப்படுத்தப்பட்டன.

இவையாவும், 2015ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம், இலங்கையில் நல்லாட்சிக்கு உதவி மற்றும் இணை அனுசரணையுடன் ஒபாமா நிர்வாகம், ஐரோப்பிய சக்திகளினால் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவைக்குள், இலங்கைக்கு எதிராக கொண்டுவரப்பட்டு, நிறைவேற்றப்பட்ட யோசனையை அடிப்படையாகக் கொண்டதாகும்.

தற்போதைய சூழ்நிலையில், ஒபாமாவின் ஆட்சி நிர்வாகம் துடைத்தெறியப்பட்டுள்ளது. அமெரிக்காவின் புதிய அரசாங்கத்துடன் கலந்துரையாடி, அதில் உள்ள பிரிவுகளை மாற்றிக் கொள்வதற்கு இந்த அரசாங்கம் எவ்விதமான முயற்சிகளையும் மேற்கொள்ளவில்லை என்பதனை மக்களுக்கு தெளிவுப்படுத்திக் கொள்கின்றேன். தேசத்துரோகமான நிகழ்ச்சிநிரலினால்தான் இவ்வாறான நிலைமையொன்று ஏற்பட்டுள்ளது. அதனால்தான், 2015 ஆம் ஆண்டு ஐ.நா மனித உரிமை பேரவையில் கொண்டுவரப்பட்ட யோசனைக்கு அமெரிக்கா அல்ல இலங்கை அரசாங்கமே தோள்கொடுக்க வேண்டியுள்ளது.

பிரதமரின் நல்லிணக்கம் தொடர்பிலான செயலணியின் பரிந்துரைகளின் பிரகாரம், இந்த நாட்டில் ஏற்பட்ட ஆயுதப் போராட்டத்துக்கு, பிரதிவாதிகளிடம் மன்னிப்புக் கோரவேண்டும். எனினும், பயங்கரவாதிகள் அமைப்பு அல்லது அவர்களுக்கு உதவி ஒத்தாசை நல்கிய வேறு அரசியல் அமைப்புகளிடம் மன்னிப்பு கோரவேண்டியதில்லை. அதனடிப்படையில், பயங்கரவாத்தை ஒழிப்பதற்கு இலங்கை அரசாங்கம் செய்தமை தவறானது என்ற கருத்து உலகத்துக்கு எடுத்தியம்பப்பட்டுள்ளது.

பிரதமரின் புதிய சட்டத்தின் பிரகாரம், கைது செய்யப்படுகின்ற பயங்கரவாத சந்தேகநபர்களின் பாதுகாப்பை, அப்பிரதேசத்தின் பொலிஸ் பொறுப்பதிகாரி, மனித உரிமை ஆணைக்குழு, மாகாணத்தில் உள்ள நீதவான் ஆகியோர் உறுதிப்படுத்தவேண்டும். தடுத்துவைத்தல் மூன்று மாதங்களிலிருந்து 30 நாட்களாக குறைந்துள்ளது. தடுத்துவைக்க கூடிய ஆகக்கூடிய காலமான 18 மாதங்கள் 6 மாதங்களாக குறைக்கப்பட்டுள்ளன. சந்தேகநபருக்கு எதிராக ஒருவருடத்துக்குள் வழக்கு தாக்கல் செய்யப்படாது. எனினும், வழக்குகாலம் 2 வருடங்களுக்கு மேல் நீடிக்கப்படுமாயின் சந்தேகநபர்களுக்கு பிணை வழங்கப்படவேண்டும். பயங்கரவாதிகளுக்கு ஆகக்கூடிய இடம் வழங்கப்பட்டுள்ளதுடன், இராணுவத்தினருக்கு ஆகக்கூடிய இடையூறுகளும் இந்த புதிய சட்டத்தில் உள்ளக்கப்படும் வகையிலேயே பிரதமரின் செயலணியினால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

அவசரகாலச் சட்டத்தை பிரகரணடப்படுத்தும், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்கு இருந்த அதிகாரங்கள் குறைக்கப்பட்டும் வகையில், செயலணியினால் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. இவை, சமாதானம் சீர்குலையும் போது, பொலிஸ், முப்படைகளின் கைகளை கட்டிவிடுவதாகும். இலங்கை மதம் இல்லாத நாடாகவும் பிரகடனப்படுத்துவதற்கான யோசனை, பிரதமரின் செயலணியின் ஊடாக பரிந்துரைக்கப்பட்டுள்ளது. மாகாண ஆளுநர்களின் சகல அதிகாரங்களையும் இல்லாமற் செய்வதற்கு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், அந்த மாகாணத்தின் முதலமைச்சர்களால், தங்களுடைய விருப்பத்தின் பிரகாரம், ஆளுநர்களை நியமித்துகொள்ள முடியும். அதேபோல, அந்த அமைச்சரவையின் ஆலோசனையின் பிரகாரம் ஆளுநர் செயற்பட முடியும். இதன் ஊடாக ஒற்றையாட்சி இல்லாமற் செய்யப்பட்டு, பெடரல் ஆட்சிமுறைமையொன்று உருவாக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அரசாங்கம், நாட்டின் சமாதானத்துக்கும் ஒற்றுமைக்கும் பங்கம் ஏற்படுத்தும் வகையில், தேசத்துரோகமான வேலைத்திட்டத்தை முன்னெடுக்கின்றது என்பதனை சகலருக்கும் தெரிவித்து கொள்கின்றேன் என்றும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.



அரனாயக்க தல்கஸ்பிடிய முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் மாணவர் பாராளுமன்றத் தேர்வுகள் அண்மையில் பாடசாலை பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது. மாணவர் பாராளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதில் மாணவர்கள் ஆர்வமாக இருப்பதையும், தேர்தல் கடமையில் ஈடுபட்டிருந்த ஆசிரியர்களையும் படத்தில் காணலாம்.

### பொத்தானை பள்ளிவாசல் விவகாரம்;

# முன்னின்று உழைத்த சகலருக்கும் பாராட்டு



(றிசாத் ஏ. காதர்)

சமூகத்தில் தீர்க்கப்படாது பல பிரச்சினைகள் புரையோடிப்போயுள்ள வேளையில் பொத்தானை பள்ளிவாசல் பிரச்சினையை தீர்த்துக்கொள்ளும் வகையில் உற்சாகமான முறையில் கருமமாற்றிய இப்பள்ளிவாசலின் நிருவாகிகள் விசேடமான முறையில் பாராட்டப்பட வேண்டியவர்கள். அது மாத்திரமன்றி இப்பிரச்சினையை முடிவுக்கு கொண்டுவருவதற்கு ஸ்ரீ.ல.மு.காங்கிரஸின் தலைவர் மேற்கொண்ட முயற்சிகளை வெற்றி பெறச்செய்வதில் எமக்கு உற்சாகமூட்டும் வகையில் நடந்துகொண்ட அக்கரைப்பற்று வர்த்தகர் சங்கம், பொத்தானை விவசாய அமைப்பு ஆகியவற்றின் அங்கத்தவர்களும் பாராட்டுக்குரியர்வர்களே என அக்கரைப்பற்று ஸ்ரீ.ல.மு.காங்கிரஸின் அக்கரைப்பற்று அமைப்பாளரும், மாநகர சபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவருமான எஸ்.எல்.எம்.ஹனீபா மதனி கூறினார்.

அண்மையில் அக்கரைப்பற்று ''பாஸ் பூட்'' விருந்தினர் விடுதியில் பொத்தானை பள்ளிவாசல் நிருவாகத்தினர், வர்த்தகர் சங்கம், பொத்தானை விவசாய அமைப்பு ஆகியவற்றினால் பொத்தானை பள்ளிவாசல் விவகாரத்தில் முன்னின்று உழைத்த ஹனீபா மதனிக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் ஒழுங்கு செய்யப்பட்ட விருந்துபசார நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அஷ்ஷெய்க் ஹனீபா மதனி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

பொத்தானை பள்ளிவாசலுக்கு போய்வர முடியாதவாறு தொல்பொருள் ஆராய்ச்சித் திணைக்களத்தினால் எல்லைக்கற்கள் போடப்பட்டது. அங்கு போடப்பட்ட எல்லைக்கற்களை அகற்றும் பொருட்டு அமைச்சர் ரவூப் ஹக்கீமுக்கு தெரியப்படுத்தியிருந்தேன். மக்களுடைய பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் அரச அதிகாரிகளினால் இழுத்தடிப்புச் செய்யப்படுகின்ற இக்கால கட்டத்தில் எவ்வித தாமதங்களுமில்லாமல் இப்பிரச்சினையை தீர்த்துவைக்க முன்னின்று பணியாற்றி அமைச்சர் ஹக்கீம் நன்றிக்குரியவரே. இவ்விடயம் இலகுவாக முடிவுற வேண்டும் என முயற்சித்தவர்களுள் முதலாமவன் என்கின்ற அடிப்படையில் மிக்க சந்தோஷமடைகின்றேன் என தனது உரையில் கூறினார்.

# டெங்குநோயினால் பாடசாலை மாணவர்களே அதிகம் பாதிப்பு

### பொதுச் சுகாதார பரிசோதகர் பளீல்

(வாழைச்சேனை நிருபர்)

ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவில் ஜனவரி தொடக்கம் மார்ச் 13ம் திகதி வரை முப்பத்தேழு பேர் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் இதில் பாடசாலை மாணவர்கள் இருபத்தைந்து பேர் என அடையாளம் காணப்பட்டுள்ளதாக ஓட்டமாவடி மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் எம்.எச்.எம்.பளீல் தெரிவித்தார்.

அதிகரித்து வரும் டெங்கு நுளம்பின் தாக்கத்தினை கட்டுப்படுத்தும் நோக்கில் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், ஓட்டமாவடி பிரதேச சபை, பள்ளிவாயல் நிருவாகம் மற்றும் பொது அமைப்புக்கள் இணைந்து வீடு வீடாகச் சென்று டெங்கு பரவும் இடங்களை இனம்கண்டு துப்பரவு செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஓட்டமாவடி பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவிலுள்ள 6517 வீடுகளுக்கு சென்று டெங்கு தொடர்பாக பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்ட போது அதில் 1115 குடும்பங்களுக்கு டெங்கு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

டெங்கு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்ட வீட்டு உரிமையாளர்களுக்கு ஒரு வாரகால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது அதற்குள் அவர்கள் குறிப்பிட்ட பிரதேசத்தை துப்பரவு செய்யாமல் விடும் பட்சத்தில் அவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் எம்.எச்.எம்.பளீல் தெரிவித்தார்.

ஓட்டமாவடி மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் எம்.எச்.எம்.பளீல், பொதுச் சுகாதார பரிசோதகர் ஏ.எம்.எம்.அனீஸ், கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகார சபையின் தலைவர் கே.பீ.எஸ்.ஹமீட், பிரதேச பள்ளிவாயல்களின் உறுப்பினர்கள், இளைஞர்கள், ஓட்டமாவடி பிரதேச சபை ஊழியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# அஹதிய்யா பரீட்சையில் நுககஹகெதர மாணவர்கள் சாதனை





(யு.எல்.முஸம்மில் - குருநாகல் நிருபர்)

குளியாப்பிட்டிய கல்வி வலயத்தைச் சேர்ந்த நுககஹகெதர நூரிய்யா அஹதிய்யாப் பாடசாலை பரீட்சைக்குத் தோற்றிய 56 மாணவர்களில் 55 மாணவர்கள் சித்தியடைந்து சாதனை படைத்துள்ளார்கள். இவர்களில் 16 பேர் 3ஏ சித்தியும், 9பேர் 2 ஏ சித்தியும் பெற்றுள்ளார்கள் . படத்தில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களும் மாணவிகளும் அஹதிய்யா அதிபர் மௌலவி எம்.எம்.நவாஸ் மற்றும் ஆசிரியர்களுடன் காணப்படுகிறார்கள்.

# நிகழ்வுகள்

## பாராட்டு விழா

(வத்துகாமம் நிருபர்)

மலையக கலை, கலாசார சங்கத்தின் (இரத்தின தீபம்) ஏற்பாட்டில் மறைந்த கலைஞர் காமினி பொன்சேகா ஜனன தினம் மற்றும் வைரமுத்து வாமதேவனின் பாராட்டு விழா என்பன எதிர்வரும் 19ஆம் திகதி கண்டியில் இடம்பெறவுள்ளது.

கண்டி கெப்பட்டிப்பொல மண்டபத்தில் பி.ப.2.30 மணிக்கு இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்கா பிரதம அதிதியாகக் கலந்துகொள்வார். கௌரவ அதிதிகளாக சர்வதேச திரைப்பட விமர்சகர் ஹெட்டிபொல மங்கள தேரர், நகர அபிவிருத்தி அமைச்சின் மேலதிகச் செயலாளர் தேசாபிமானி பீ.சரேஸ், திரைப்பட இயக்குனர் பத்மஸ்ரீ கொடிக்காரா,தேசாபிமானி முத்தையாப்பிள்ளை ஸ்ரீகாந்தன், திரைப்பட நடிகர் ரிச்சட் வீரக்கொடி, விஷ்வ கீர்த்தி எஸ் முத்தையா, ஆகியோர் கலந்துகொள்வர்.

கௌரவ அதிதிகளாக ஆர்.மோகன், கலாபூசணம் ஆர்.ஏ.இராமன், கலாபூசணம் ப.க.சிவம், கலாபூசணம் ஜே.எம்.ஹாபீஸ், சட்டத்தரணி ஏ.எம்வைஸ், ஊடக வியலாளர்களான மொகமட் ஆசிக், வீ. வசந்த குமார், பீ.ராமானுஜம் ஆகியோரும் கலந்து கொள்வர்.

## இரத்ததான முகாம்

(ஏறாவூர் ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

ஏறாவூர் தவ்ஹீத் ஜமாஅத் ஏற்பாட்டில் மாபெரும் இரத்ததான முகாம் ஒன்று எதிர்வரும் சனிக்கிழமை (18) ஏறாவூர் மீராகேணி மாக்கான் மாக்கார் மகா வித்தியாலயத்தில் காலை 8 மணி முதல் பிற்பகல் 4 மணி வரை இடம்பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அன்றைய தினம் இரத்ததானம் செய்ய விரும்பும் ஆண்களும் பெண்களும் இன மத மொழி பேதமின்றி இந்த இடத்திற்கு வருகை தந்து குருதிக் கொடையளிக்கலாம் என்றும் கேட்கப்பட்டுள்ளனர்.

## நடமாடும் சேவை

(பைஷல் இஸ்மாயில்)

அட்டாளைச்சேனை பிரதேச பொது மக்களின் நலன் கருதி பொலிஸ் நடமாடும் வைத்திய சேவை ஒன்றை நடாத்தவுள்ளதாக அக்கரைப்பற்று பொலிஸ் நிலையப் நிர்வாகப் பொறுப்பதிகாரி எஸ்.ரீ.முஹம்மட் றியாஸ் தெரிவித்தார்.

இந்த வைத்தியசேவை எதிர்வரும் (18 ) சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பி.ப 2.00 மணிவரை அட்டாளைச்சேனை அந் நூர் வித்தியாலயத்தில் நடாத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## விழிப்புணர்வு கருத்தரங்கு

(ஏறாவூர் ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

சிறுவர்களின் உளவளர்ச்சிப் பங்கும் தாய்மாரின் பங்களிப்பும் விழிப்புணர்வுக் கருத்தரங்கு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (19) ஏறாவூர் அல் - மர்கசுல் இஸ்லாமி தௌஹீத் ஜும்மா பள்ளி வாயலில் மாலை 4.30 மணி தொடக்கம் 5.30 மணி வரை இடம்பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஏறாவூர் தவ்ஹீத் ஜமாஅத் ஏற்பாட்டில் நடைபெறும் இந்நிகழ்வில் கொழும்பு தேசிய கண் வைத்திய சாலைப் பணிப்பாளர் ஐ.எல்.எம். றியாஸ் விசேட விழிப்புணர்வு உரையாற்றவுள்ளார்.

# மழைவீழ்ச்சியினால் நீர்மட்டம் உயர்வு

மழையுடன் கூடிய காலநிலை காரணமாக நீர்த்தேக்கங்களில் நீர் மட்டம் உயர்ந்து வருவதாக தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையும் மின்சக்தி அமைச்சும் தெரிவித்தன. மின் நிலையங்களை அண்டியுள்ள நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் 34 சதவீதமான மட்டத்தை அண்மித்திருப்பதாகவும், நீர் மின் உற்பத்தி தொடர்ந்தும் பத்து சதவீத மட்டத்திலேயே இருப்பதாகவும், மழையுடன் கூடிய காலநிலைத் தொடர்ந்து நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் மேலும் அதிகரிக்கலாம் என்றும் குறிப்பிட்டது.

குடிநீரைப்பொறுத்தவரையில் நிலவிவந்த வந்த பிரச்சினை தற்போது நீங்கி வருவதாக தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்தது.

# ஜனாதிபதி அடுத்துவரும் தினங்களில் இந்திய விஜயம் மேற்கொள்ளமாட்டார்

## ஜனாதிபதி செயலகம் தெரிவிப்பு



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எதிர்வரும் சில நாட்களில் எந்தவொரு இந்திய விஜயத்திலும் ஈடுபடமாட்டாரென ஜனாதிபதி செயலகம் தெரிவித்தது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் ஆன்மீக தலைவர் தலாய்லாமாவும் இந்திய பீஹார் மாநிலதில் புதிய நாலந்தா மகா விகாரை பல்கலைக்கழக நிகழ்வில் பங்குபற்றவுள்ளதாக கடந்த வெள்ளிக்கிழமை 'சிலோன் டுடே' பத்திரிகையில் வெளிவந்துள்ள செய்தி பொய்யானது எனவும், எவ்விதத்திலும் உறுதிப்படுத்தப்படாமல் வெளியிடப்பட்டிருப்பதனால் அச் செய்தியை நிராகரிப்பதாகவும் ஜனாதிபதி செயலகம் குறிப்பிட்டது. அதற்கமைய ஜனாதிபதி அடுத்துவரும் சில நாட்களில் எந்தவொரு இந்திய விஜயத்திலும் ஈடுபடமாட்டாரெனவும் தெரிவிக்கப்பட்டது.



கஹட்டோவிட்ட முஸ்லிம் பாலிகா வித்தியாலயத்திற்கு கஹட்டோவிட்ட கல்விச்சங்கத்தின் கட்டார் கிளையினால் பாடசாலைக்கு அத்தியாவசியத்தேவையாகவிருந்த பிளாஸ்ரிக் கதிரைகளை இலவசமாகக் கையளிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் பாடசாலை மைதானத்தில் காலைக்கூட்ட நிகழ்வுடன் நடைபெற்றது. இந்நிகழ்வில் கஹட்டோவிட்ட கல்விச்சங்கத்தின் கட்டார் கிளையின் பிரதிநிதிகள், அபிவிருத்திச்சங்க உறுப்பினர்கள் ஆசிரியர்கள், மாணவர்கள் உட்பட சகலரும் கலந்து சிறப்பித்தனர். பல தேவைகளுக்கு மத்தியில் இயங்கிக்கொண்டிருக்கும் பாடசாலைக்கு இவ்வுதவி பெறுமதி வாய்ந்தது எனவும் பாடசாலை அதிபர் எஸ்.ஏ. இஸ்மத் பாத்திமா கூறினார்.


## நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு

# தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை

National Water Supply & Drinage Board

## விலைமனு அறிவித்தல்

பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள வழங்கல்கள் / வேலைகளுக்காக தகைமை மற்றும் தகுதிவாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து அரக்கு முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகளை தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் சார்பில் பெறுகைக் குழுவின் தவிசாளர் இத்தால் அழைக்கின்றார்.

| ஒப்பந்தப் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | தேவைப்படும் கேள்விப் பிணைமுறி | தகைமை தேவைப்பாடுகள் | மதிப்பீட்டு செலவு(ரூபா) வெட் வரி நீங்கலாக | ஆவணங்கள் வழங்குமிடம் மற்றும் தொடர்புகொள்ள வேண்டிய நபர் | மூடப்படும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|
| **சிவில் கேள்விகள்** | | | | | | |
| கண்டி பிராந்திய நீர் வழங்கல் திட்டத்தில் குழாய்களுக்கான பம்பி இல்லங்களை அமைத்தல்.<br>**ஒப்பந்த இல: RSC-C/P&D/CIVIL/DROUGHT/KANDY REGION/2017/72** | 4,000/- + பெ.சே. வரி | ரூபா. 35,000/- | கட்டிட கட்டுமான துறையில் c8 மற்றும் அதற்கு மேற்பட்ட தரத்தில் CIDA நிறுவனத்தில் பதிவு | 3.4 மில்லியன் | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (மத்திய) கெடம்பே, பேராதனை<br>தொலைபேசி: 081-2386068,<br>தொலைநகல்: 081-2388027 | 29/03/2017 14.00 மணி |
| ஹபுகல நீர் சுத்திகரிப்பு நிலையத்திலுள்ள உலர் படுக்கைகளின் சகதியை அகற்றல்.<br>**ஒப்பந்த இல: RSC(S)/P&C/C/HAPUGALA/SLU. DRY. BEDS/O&M/2016-195R** | 2,000/- + பெ.சே. வரி | ரூபா. 27,000/- | நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு துறையில் c9 மற்றும் அதற்கு மேற்பட்ட தரத்தில் CIDA நிறுவனத்தில் பதிவு | 1.8 மில்லியன் | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (தெற்கு), 395, குமாரதுங்க மாவத்தை, பம்புரன, மாத்தறை<br>தொலைபேசி: 041-2229792,<br>தொலைநகல்: 041-2224769 | 05/04/2017 14.00 மணி |
| இரத்மலானை தலைமை அலுவலக கட்டிடங்களிலுள்ள கழிப்பறை தொகுதிகளை சீரமைத்தல்<br>**ஒப்பந்த இல: P&D/C/HEAD OFFICE/MAINTAINANCE/2016/01** | 6,000/- + பெ.சே. வரி | ரூபா. 115,000/- | கட்டிட கட்டுமான துறையில் c7 மற்றும் அதற்கு மேற்பட்ட தரத்தில் CIDA நிறுவனத்தில் பதிவு மற்றும் பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 1987 இன் 3 ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் பதிவு சான்றிதழ் | 7.8 மில்லியன் | கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு,<br>தே.நீ.வ.வ.ச., காலி வீதி, இரத்மலானை.<br>தொ.பே: / தொ.நகல்: 011-2635885 | 06/04/2017 10.00 மணி |
| ஈசிலம்பட்டு நீர் சுத்திகரிப்பு நிலையத்திலுள்ள துரித மணல் வடிகட்டி மற்றும் ஈசிலம்பட்டு உள்ளீர்ப்பு தளத்தில் முன்மொழியப்பட்டுள்ள கழிப்பறை மற்றும் ஓய்வு அறையை சீரமைத்தல்.<br>**ஒப்பந்த இல: RSC( E )/DGM/16BN/RENO/ EACH/ 2017/10** | 2,000/- + பெ.சே. வரி | ரூபா. 30,000/- | நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு துறையில் c9 மற்றும் அதற்கு மேற்பட்ட தரத்தில் CIDA நிறுவனத்தில் பதிவு | 1.98 மில்லியன் | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (கிழக்கு),<br>தே.நீ.வ.வ.ச., இல. 48A/1, கண்டி வீதி, மடிக்கலி, திருகோணமலை.<br>தொலைபேசி: 026-2222519,<br>தொலைநகல்: 026-2225225 | 29/03/2017 14.30 மணி |
| **இயந்திரம் மற்றும் மின்னியல் கேள்விகள்** | | | | | | |
| பாரிய கண்டி நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் மூன்று கட்ட 33Kv / 415V, 2000 Kva மின்மாற்றி, Switch Gears மற்றும் உதிரிப்பாகங்களை வழங்கி, விநியோகித்து, பொருத்தி, ஆரம்பித்தல்.<br>**ஒப்பந்த இல: RSC-C/E&M/RH/GKWTP/2016/15** | 10,000/- + பெ.சே. வரி | ரூபா. 305,250/- | உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் மற்றும் பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 1987 இன் 3 ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | | கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு,<br>தே.நீ.வ.வ.ச., காலி வீதி, இரத்மலானை.<br>தொ.பே: / தொ.நகல்: 011-2635885 | 07/04/2017 10.00 மணி |
| கொவ்லுஹேன ஊக்க பம்பி இல்லத்துக்கு Squirrel Cage Induction வகை மோட்டர் மற்றும் உதிரிப்பாகங்களை வழங்கி, பொருத்துதல்.<br>**ஒப்பந்த இல: RSC(S)/P&C/S/INDUCTION MOTOR/KOWULHENA/ENERGY SAVING/2016-86R** | 2,000/- + பெ.சே. வரி | ரூபா. 13,500/- | உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் | | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (தெற்கு),<br>395, குமாரதுங்க மாவத்தை, பம்புரன, மாத்தறை.<br>தொலைபேசி: 041-2229792,<br>தொலைநகல்: 041-2224769 | 05/04/2017 14.00 மணி |
| **வாகனங்களை வாடகைக்கமர்த்தல்** | | | | | | |
| **08/02/2017** ஆம் திகதிய, கேகாலை பொது முகாமையாளர் அலுவலகத்துக்கு வேன் வாகனமொன்றை வாடகைக்கு அமர்த்தல், **ஒப்பந்த இல: RSC(SAB)/AGM(KEG)/O&M/KEGALLE/SER/2016/125** என்ற விளம்பரத்தின் **இறுதித் திகதி 28/03/2017** வரை நீடிக்கப்பட்டுள்ளதை தயவுகூர்ந்து கவனிக்கவும். | | | | | | |
| அநுராதபுரம் நில நீர் அலுவலகத்துக்கு 02 Crew Cab வாகனங்களை வாடகைக்கு அமர்த்தல்<br>**ஒப்பந்த இல: GW (DR)/NC/DGM/HV-CREW CAB/2017/020 R** | 2000/- + பெ.சே. வரி | ரூபா. 25,560/- | போக்குவரத்து சேவைகள் வழங்குவோர் / வாகன உரிமையாளர்கள் | | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (வடமத்தி),<br>கொடகே மாவத்தை, அநுராதபுரம்<br>தொலைபேசி: 025-2235993<br>தொலைநகல்: 025-2225609 | 29/03/2017 14.00 மணி |
| பிராந்திய ஒத்துழைப்பு (மத்திய) நிலையத்தின் நீர் குறை கட்டுப்பாட்டு அலகுக்கு ஒரு பயணிகள் வேன் (Dual AC - 4WD) வாகனத்தை வாடகைக்கு அமர்த்தல்<br>**ஒப்பந்த இல: RSC-C/WLC/SERVICE/NRW/2017/14** | 2,000/- + பெ.சே. வரி | ரூபா. 20,000/- | ஆவணத்தின் பிரகாரம் | | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (மத்திய) கெடம்பே, பேராதனை<br>தொலைபேசி: 081-2386068,<br>தொலைநகல்: 081-2388027 | 29/03/2017 14.00 மணி |
| குண்டசாலை நீர் வழங்கல் திட்டத்துக்கு முச்சக்கர வண்டியொன்றை வாடகைக்கு அமர்த்தல்<br>**ஒப்பந்த இல: RSC-C/KE/SERVICE/O&M/KUNDASALE/2017/49** | 2,000/- + பெ.சே. வரி | ரூபா. 12,000/- | ஆவணத்தின் பிரகாரம் | | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (மத்திய) கெடம்பே, பேராதனை<br>தொலைபேசி: 081-2386068,<br>தொலைநகல்: 081-2388027 | 29/03/2017 14.00 மணி |
| நில நீர் பகுதிக்கு Crew Cab வாடகைக்கு அமர்த்தல்<br>**ஒப்பந்த இல: RSC(S)/P&C/GROUND WATER/HIRING/CREW CAB/DROUGHT MITIGATION/2017-61** | 500/- + பெ.சே. வரி | ரூபா. 5,000/- | ஆவணத்தின் பிரகாரம் | | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (தெற்கு), 395, குமாரதுங்க மாவத்தை, பம்புரன, மாத்தறை<br>தொலைபேசி: 041-2229792<br>தொலைநகல்: 041-2224769 | 29/03/2017 14.00 மணி |
| கொழும்பு நகர வடக்கு மற்றும் தெற்கு பிராந்தியங்களுக்கு 02 சுமை ட்ரக் வண்டிகளை வாடகைக்கு அமர்த்தல்<br>**ஒப்பந்த இல: WC/E&M/2017/09** | 1,000/- + பெ.சே. வரி | ரூபா. 5,000/- ஒரு வாகனத்துக்கு | ஆவணத்தின் பிரகாரம் | | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (மேல் மத்தி), இல. 175A, களுதொட கட்டிடம், நாவல வீதி, நுகேகொட.<br>தொ.பே/தொ.நகல்: 011- 2856420-3 | 31/03/2017 14.00 மணி |
| **சேவைகள் விலைமனு** | | | | | | |
| முல்லேரியா ராஜசிங்க ஜலாகாரயவில் பிரதான மற்றும் புதிய நீர் சுத்திகரிப்பு நிலையங்களை பராமரிப்பதற்கு சேவைகளை வழங்குதல்<br>**ஒப்பந்த இல: RPC/WP/CIVIL/C/2017/04** | 6,000/- + பெ.சே. வரி | ரூபா. 90,000/- | இதேபோன்ற சேவைகளை வழங்குவதில் அனுபவமுள்ள நிறுவனங்கள் / கம்பனிகள் | | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (மேல் - உற்பத்தி),<br>தே.நீ.வ.வ.ச., உடுமுல்ல வீதி, முல்லேரியாவ, நியூடவுன்<br>தொலைபேசி: 0112418532<br>தொலைநகல்: 0112549199 | 05/04/2017 14.00 மணி |
| கலடுவாவ, கந்தான, கெத்ஹேன நீர் சுத்திகரிப்பு நிலையங்களின் பராமரிப்புக்கு சேவைகளை வழங்குதல்<br>**ஒப்பந்த இல: RPC/WP/CIVIL/C/2017/03** | 6,000/- + பெ.சே. வரி | ரூபா. 72,000/- | இதேபோன்ற சேவைகளை வழங்குவதில் அனுபவமுள்ள நிறுவனங்கள் / கம்பனிகள் | | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (மேல் - உற்பத்தி),<br>தே.நீ.வ.வ.ச., உடுமுல்ல வீதி, முல்லேரியாவ, நியூடவுன்<br>தொலைபேசி: 0112418532<br>தொலைநகல்: 0112549199 | 05/04/2017 14.00 மணி |
| முல்லேரியா ராஜசிங்க ஜலாகாரவுக்கு சொந்தமான நிலைமாற்று குழாய்களை பராமரிப்பதற்கான சேவைகளை வழங்குதல்<br>**ஒப்பந்த இல: RPC/WP/CIVIL/C/2017/02** | 6,000/- + பெ.சே. வரி | ரூபா. 93,000/- | இதேபோன்ற சேவைகளை வழங்குவதில் அனுபவமுள்ள நிறுவனங்கள் / கம்பனிகள் | | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (மேல் - உற்பத்தி),<br>தே.நீ.வ.வ.ச., உடுமுல்ல வீதி, முல்லேரியாவ, நியூடவுன்<br>தொலைபேசி: 0112418532<br>தொலைநகல்: 0112549199 | 05/04/2017 14.00 மணி |
| **மானி வாசித்தல்** | | | | | | |
| கண்டி வடக்கு பகுதியில் மானி வாசித்தல்<br>**ஒப்பந்த இல: RSC-C/KN/SER/O&M/NORTH OFFICE/2017/21** | 2,000/- + பெ.சே. வரி | ரூபா. 16,000/- | ஆவணத்தின் பிரகாரம் | | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (மத்திய) கெடம்பே, பேராதனை<br>தொலைபேசி: 081-2386068,<br>தொலைநகல்: 081-2388027 | 29/03/2017 14.00 மணி |
| **பயிற்றுவிக்கப்படாத வேலையாட்கள்** | | | | | | |
| தெலவல நில நீர் பகுதிக்கு பயிற்றுவிக்கப்படாத வேலையாட் சேவைகளை வழங்கல்<br>**ஒப்பந்த இல: ADDL.GM/P&P/GWP/LABOUR/2017-01** | 2,000/- + பெ.சே. வரி | ரூபா. 103,500/- | ஆவணத்தின் பிரகாரம் | | கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு,<br>தே.நீ.வ.வ.ச., காலி வீதி, இரத்மலானை.<br>தொ.பே: / தொ.நகல்: 011-2635885 | 05/04/2017 10.00 மணி |

தகுதித்தன்மைக்கான சான்றுகளுடன் வியாபாரக் கடிதத் தலைப்பில் ஆவணங்களுக்கான வேண்டுகோள் கடிதமொன்றை சமர்ப்பிப்பதன் பேரில் கேள்வி ஆவணங்கள் வழங்கப்படும். மற்றும் **இறுதித் திகதிக்கு முன்னைய நாள்** வரை சாதாரண வேலை நாட்களில் மு.ப. 9.00 மணிக்கும் பி.ப. 3.00 மணிக்கும் இடையில் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

சாதாரண வேலை நேரங்களில் ஆவணங்கள் வழங்கப்படும் இடங்களில் கேள்வி ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம்.

கேள்விகள் மூடப்பட்டவுடனேயே சமுகமளித்திருக்கும் கேள்விதாரர்களின் அதிகாரபூர்வ பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். **தாமதமாக விலைமனு சமர்ப்பிக்கும் விண்ணப்பங்கள் திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும்.**

**தவிசாளர்,**
**தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை**

**நீர் வழங்கல் தொடர்பான அவசர அழைப்புகளுக்காக 1939 எனும் இலவச இலக்கம் 24 மணி நேரமும் உங்களுக்காக செயற்படும்**

மக்கள் புரட்சியால் பதவி இழந்த

# எகிப்து முன்னாள் ஜனாதிபதி ஹொஸ்னி முபாரக் விடுதலை



மக்கள் புரட்சியால் பதவி இழந்த எகிப்தின் முன்னாள் ஜனாதிபதி ஹொஸ்னி முபாரக் விடுதலை செய்யப்பட்டார்.

எகிப்து முன்னாள் ஜனாதிபதி ஹொஸ்னி முபாரக் (88). சர்வாதிகாரியான இவர் கடந்த 29 ஆண்டுகளாக ஆட்சி நடத்தினார். அவரது குடும்ப ஆட்சிக்கு எதிராக கடந்த 2011ஆம் ஆண்டு மக்கள் புரட்சி நடந்தது.

புரட்சியை ஒடுக்க முபாரக் இராணுவ நடவடிக்கை எடுத்தார். அதில் ஆயிரக்கணக்கான மக்கள் கொன்று குவிக்கப்பட்டனர். இதனால் மக்கள் புரட்சி கடும் தீவிரமடைந்தது. அதை தொடர்ந்து அவர் பதவி விலகினார்.

பின்னர் கைது செய்யப்பட்ட அவர் மீது இராணுவநீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிமன்றம் அவருக்கு ஆயுள் தண்டனை விதித்தது.

அதை எதிர்த்து மேல் நீதிமன்றத்தில் அவர் மேன்முறையீடு செய்தார். அதில் தனது உடல் நிலை மற்றும் முதுமையை கருத்தில் கொண்டு தன்னை விடுதலை செய்ய வேண்டும் என கோரிக்கை விடுத்து இருந்தார்.

அதை பரிசீலித்த நீதிமன்றம் கடந்த 3ஆம் திகதி அவரை விடுதலை செய்ய உத்தரவிட்டது. ஏற்கனவே அவர் கடந்த 6 ஆண்டுகளாக சிறைத் தண்டனை அனுபவித்து இருப்பதாகவும், அந்த தண்டனையே போதுமானது என்றும் கூறப்பட்டுள்ளது.

சீன பொருட்களுக்கு

# வரி விதித்தால் வணிகப்போர் வெடிக்கும்

## சீனா எச்சரிக்கை



சீன பொருட்களுக்கு வரி விதித்தால் வணிகப்போர் வெடிக்கும் என அமெரிக்காவின் நடவடிக்கைகளுக்கு சீனா கண்டனம் தெரிவித்துள்ளது.

வர்த்தகம் தொடர்பாக சீனாவுக்கு எதிராக தொடர்ந்து அறிக்கைகள் விட்டு வரும் அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப், 'பண மதிப்பை திரிக்கும் நாடு' என சீனாவை வர்ணித்ததுடன், சீன பொருட்களுக்கு அமெரிக்காவில் 45 சதவீத வரி விதிக்கப்படும் எனவும் அச்சுறுத்தல் விடுதிருந்தார்.

இந்நிலையில் அமெரிக்காவின் வருடாந்த பொருளாதார கொள்கை திட்டத்தை வகுத்துள்ள டிரம்ப் நிர்வாகம் அதை பாராளுமன்றத்தில் அறிமுகம் செய்துள்ளது. உலக பொருளாதார நிறுவனத்தின் முடிவுகளை புறக்கணிப்பதே இந்த கொள்கையின் சாராம்சம் ஆகும். மேலும் அதிகரிக்கும் இறக்குமதியால் அமெரிக்காவின் உள்நாட்டு வர்த்தகத்துக்கு பாதிப்பு ஏற்பட்டால், அதை சமாளிப்பதற்கான வழிமுறைகளும் ஒரு தலைப்பட்சமாக உருவாக்கப்பட்டு உள்ளன.

அமெரிக்காவின் இந்த நடவடிக்கைகளுக்கு சீனா கண்டனம் தெரிவித்துள்ளது.

இது குறித்து சீன வர்த்தக அமைச்சக செய்தித் தொடர்பாளர் சன் ஜிவேய் கூறுகையில்,

''உலக பொருளாதார நிறுவனத்தின் சட்ட திட்டங்கள் மற்றும் வர்த்தக மோதல் தொடர்பான நெறிமுறைகளை ஓர் உறுப்பு நாடு தனது சொந்த நலனுக்காக புறக்கணித்தால் பன்முக வர்த்தக நுட்பம் பொருளற்றதாகி விடும். இதன் மூலம் 1930ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட வணிகப்போர் மீண்டும் வெடிக்கும்'' என்று தெரிவித்தார்.

# கிளர்ச்சிப் படை வசமானது சிரியாவின் தென் நகர்

சிரியாவின் தென் பகுதியிலுள்ள ஐ.எஸ் தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டில் இருந்த முக்கிய நகரை துருக்கி அரசின் ஆதரவு பெற்ற சிரிய கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றியுள்ளதாக துருக்கி ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

சிரிய ஜனாதிபதி பஷார் அல் அஸாத் அரசுக்கு எதிராக கிளர்ச்சியாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். கிளர்ச்சியாளர்களுக்கு துருக்கி உள்ளிட்ட சில நாடுகள் ஆதரவளித்து வருகின்றன. மேலும், ஐ.எஸ் தீவிரவாத இயக்கத்தினர் சிரியாவின் தெற்கே துருக்கி எல்லையோரமுள்ள சில நகரங்களை ஆக்கிரமித்து தங்களது கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர். இங்கிருந்தவாறு துருக்கிற்குள் ஐ.எஸ் தீவிரவாத



தாக்குதல்களை நடத்தி வருகின்றது. தங்களது நாட்டின் எல்லைப்பகுதியில் முகாமிட்டுள்ள அவர்களை ஒடுக்குவதற்காக துருக்கி இராணுவம் தீவிர தாக்குதல்களை நடத்தி வருகின்றது.

இந்நிலையில், துருக்கி இராணுவ உதவியுடன் சிரிய கிளர்ச்சியாளர்கள் தென் சிரியாவில் ஐ.எஸ். அமைப்பினரின் வசமிருந்த மான்பிஜ் நகரை கைப்பற்றியுள்ளனர். இத்தகவலை துருக்கி ஜனாதிபதி அர்துகான் அரசுத் தொலைக்காட்சியில் மக்களுக்கு தெரிவித்துள்ளார்.

ஐ.எஸ் அமைப்பினருக்கு எதிரான புதிய முன்னேற்ற நடவடிக்கையாக இது இருக்கும் எனவும் அர்துகான் தெரிவித்துள்ளார். மேலும், சிரியாவின் தென் பகுதி முழுமையாக ஐ.எஸ் அமைப்பினரிடம் இருந்து மீட்கப்படும் எனவும் அவர் உறுதியளித்துள்ளார்.

# 'வியன்னா' உலகின் தலைசிறந்த நகரம்



உலகின் தலைசிறந்த நகரமாக ஆஸ்திரியாவின் வியன்னா நகரம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

மெர்சர் என்ற நிறுவனம் உலகின் தலைசிறந்த நகரங்கள் குறித்த ஆய்வை சமீபத்தில் மேற்கொண்டது. மொத்தம் 231 நகரங்களை வைத்து மெர்சர் நிறுவனம் நடத்திய ஆய்வில் ஆஸ்திரியாவின் வியன்னா நகரம் உலகின் தலைசிறந்த நகரமாக தேர்வு செய்யப்பட்டுள்ளது.

இந்தப் பட்டியலில் 2ஆவது இடத்தை சுவிட்சர்லாந்தின் ஜுரிச் நகரமும், 3ஆவது இடத்தை நியூசிலாந்தின் ஆக்லாந்து நகரமும் 4ஆம் மற்றும் 5ஆம் இடங்களை ஜெர்மனியின் முனிச், கனடாவின் வான்கோவர் நகரங்களும் பிடித்துள்ளன.

ஆசியாவின் முக்கிய நகரங்களில் ஒன்றான சிங்கப்பூர் இந்தப் பட்டியலில் 25ஆவது இடத்தையும், அமெரிக்காவின் சான் பிரான்ஸ்சிஸ்கோ நகரம் இதில் 29ஆவது இடத்தையும் பிடித்துள்ளன. இந்தப் பட்டியலில் கடைசி இடத்தைப் பிடித்திருக்கும் பாக்தாத் உலகின் மோசமான நகரம் என்ற பெருமையைப் பெற்றுள்ளது.

தொடர்ந்து 8ஆவது வருடமாக வியன்னா இப்பட்டியலில் முதலிடத்தைப் பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நான்கு வார்த்தைகளோடு முடிந்த இரோமின் அரசியல் வாழ்க்கை




கடந்த 2000ஆம் ஆண்டு மணிப்பூரிலுள்ள மலோம் என்ற நகரில் திருமண வயது பெண்மணி ஒருவர் பஸ் நிலையம் அருகே நின்று கொண்டிருக்கிறார். அவர் ஒரு கவிஞரும் கூட. தட... தடவென இராணுவ வீரர்கள் சிலர் கையில் துப்பாக்கியுடன் அங்கு ஓடி வருகின்றனர். பஸ் நிலையம் அருகே நின்று கொண்டிருந்த இளைஞர்களை நோக்கி சராமரியாகச் சுடுகின்றனர். பத்து இளைஞர்களின் உயிரற்ற உடல் தரையில் பொத்தென்று விழுகிறது. இரத்தம் ஆறாக ஓடுகிறது. அந்த பெண்ணின் கண் முன்னே இந்த சம்பவம் நடக்கிறது.

ஏன்.. எதற்கு என்றே தெரியாமல் சக உயிர்கள் செத்து விழுவதைப் பார்த்து பதை பதைக்கிறார் அந்தப் பெண். கண் முன்னே சக உயிர்கள் பறிக்கப்படுவதைக் கண்டு கதறித் துடிக்கிறார். தனது சொந்த மக்களையே எந்தக் கேள்வி கூட கேட்காமல் சுட்டுக் கொல்லும் அந்த அதிகாரத்துக்கு பெயர்தான் இராணுவத்தின் The Armed Forces (Special Powers) Act, or AFSPA எனப்படுவது. இந்தியாவில் மணிப்பூர் உட்பட சில மாநிலங்களில் நடைமுறையில் இந்த சட்டம் இருக்கிறது. யார் மீதாவது சந்தேகம் எழுந்தால்... ஏன்... என்னவென்று விசாரிக்காமல் சுடலாம். அது 12 வயது சிறுவனாக இருந்தாலும் கூட பின்விளைவுகளை பற்றி இராணுவம் கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை. பத்து இளைஞர்களும் செத்து மடிந்ததற்கு இந்த சட்டம்தான் காரணம். கொதித்து எழுந்த அந்தக் கவிஞர் அந்த சட்டத்தை எதிர்த்து போராட்டக் களத்தில் குதித்தார். அவர்தான் இரோம் ஷர்மிளா ஷானு.

இரோம் ஷர்மிளாவின் பேஸ்புக் பதிவு

மணிப்பூர் மாநிலத்திலுள்ள அந்த சிறப்பு சட்டத்தை நீக்க உண்ணாவிரதம் இருக்கத் தொடங்கினார். ஒருநாள் இரு நாள் இல்லை. 16 ஆண்டுகள் உண்ணாவிரதம். பொலிஸ் காவலில் வைக்கப்பட்டு மூக்கு குழாய் வழியாக திரவ உணவு மட்டுமே இத்தனை ஆண்டுகள் செலுத்தப்பட்டது. ஆனால், இரோமின் நோக்கத்துக்கு கடைசி வரை வெற்றி கிடைக்கவில்லை.

''நான் உயிருடன் இருக்க விரும்புகிறேன்... உயிர் வாழ ஆசைப்படுகிறேன்... திருமணம் செய்து கொள்ளப் போகிறேன்... அன்பு செய்ய விரும்புகிறேன்... எனது உண்ணாவிரதத்தை கைவிடத் தயார். ஆனால், அதற்கு முன், மணிப்பூரில் AFSPA சட்டம் நீக்கப்பட வேண்டுமென டில்லி நீதிமன்றத்தில் கடைசியாக இரோம் கோரிக்கை வைத்தார். விடிவு காலம் பிறக்கவில்லை.

சட்டத்தின் வாயிலாக முடிவு கிடைக்காத நிலையில்தான் தேர்தலில் போட்டியிட்டு மக்கள் வழியாக அந்தச் சட்டத்துக்கு முடிவு கட்ட ஷர்மிளா எண்ணினார். மக்களை நம்பி தேர்தல் களத்தில் குதித்தார்.. துபாள் தொகுதியில் மணிப்பூர் முதல்வர் இபோபி சிங்கை எதிர்த்து போட்டியிட்டார்.

ஆனால், இரோமுக்கு கிடைத்ததோ... வெறும் 90 ஓட்டுகளே. நோட்டாவுக்கு கூட ஷர்மிளாவை விட அதிக ஓட்டுகள் கிடைத்துள்ளன. எந்த மண்ணின் மக்களுக்காக 16 ஆண்டுகளாக உண்ணாமல் உறங்காமல் திருமணம் செய்து கொள்ளாமல் இளமையை தொலைத்துப் போராடினாரோ... அதே மக்கள்தான் ஷர்மிளாவின் கனவை கொடூரமாக கொன்று போட்டுள்ளனர்.

மக்கள் மீது நம்பிக்கை வைத்து போட்டியிட்ட இரோம் இப்போது விரக்தியின் உச்சிக்கே சென்றிருக்கிறார்.

இராணுவத்தை எதிர்த்துப் போராடிய போது வராத கண்ணீர் இரோமின் கண்களில் இப்போது வழிகிறது. அந்த விரக்தி அவரது ரசிகர்கள் சார்பில் ஆரம்பிக்கப்பட்ட பேஸ்புக் பக்கத்திலும் தெரிகிறது. 'அந்த 90 பேருக்கு நன்றி' என்கிறது அந்த வேதனைப் பேஸ்புக் பதிவு, ''இன்னொரு முறை அரசியலுக்குள் காலடி எடுத்து வைக்கவே மாட்டேன்'' என்கிற அந்த முகத்தில் எத்தனை வேதனை.

பதினாறு ஆண்டுகாலம் போராடிய அந்த கவிஞரின் போராளியின் அரசியல் வாழ்க்கையை "thanks for 90 votes" என்ற வார்த்தையுடன் முடித்து வைத்திருக்கிறார்கள் ஜனநாயக வாதிகள்.

# டிரம்ப் – ஜின்பிங் சந்திப்பு உறுதி



அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் மற்றும் சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் ஆகியோர் அடுத்த மாதம் முதன் முறையாக சந்தித்து பேச இருப்பதாக வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதியாக பொறுப்பேற்ற டொனால்ட் டிரம்ப், சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் -ஐ முதன் முறையாக அடுத்த மாதம் 6 மற்றும் 7ஆம் திகதிகளில் சந்தித்து பேச இருப்பதாக ஊடகங்களில் தகவல்கள் வெளியானது.

இத்தகவலை உறுதி செய்துள்ள வெள்ளை மாளிகையின் செய்தித் தொடர்பாளர் சீன் ஸ்பைசர், இரு தலைவர்களும் அடுத்த மாதம் சந்தித்து பேசுவது உறுதி. ஆனால், திகதி இன்னும் இறுதி செய்யப்படவில்லை. தேதிகள் முடிவு செய்யப்பட்ட பின்னர் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

இரு தலைவர்களின் சந்திப்பின் போது, சர்வதேச நாடுகளின் கண்டனத்தை பொருட்படுத்தாமல் ஏவுகணைகளை சோதித்து வரும் வட கொரியா மீது கடுமையான நடவடிக்கை எடுப்பது தொடர்பான முடிவுகள் எடுக்கப்படும் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

# டிரம்ப் – ஏஞ்சலா சந்திப்பு ஒத்திவைப்பு



அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் - ஜெர்மன் அதிபர் ஏஞ்சலா மெர்கல் இடையேயான சந்திப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக வெள்ளை மாளிகை தகவல் தெரிவித்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் - ஜெர்மன் அதிபர் ஏஞ்சலா மெர்கல் இடையேயான சந்திப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

டிரம்ப் - ஏஞ்சலா மெர்கல் இடையே இன்று பேச்சுவார்த்தை நடைபெறவிருந்தது. அமெரிக்காவின் கிழக்கு கடற்கரை பகுதியை பெரும் பனிப் புயல் நெருங்கி வருவதால் இருவருக்கிடையேயான சந்திப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது. இதுகுறித்து ஜெர்மன் அதிபர் ஏஞ்சலா மெர்கலுடன், டிரம்ப் நேரடியாக தொடர்பு கொண்டு பேசியதையடுத்து, இருநாட்டு தலைவர்களுக்கு இடையேயான சந்திப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக டிரம்பின் செய்தித்தொடர்பாளர் சீன் ஸ்பைசர் தகவல் தெரிவித்துள்ளார்.

மேலும் இருவருக்கும் இடையேயான சந்திப்பு நாளைமறுதினம் (17ஆம் திகதி வெள்ளிக்கிழமை) நடைபெற உள்ளதாகவும் ஸ்பைசர் தெரிவித்தார்.

## உலகச் செய்திகள்

கிம் ஜோங் நாம்இன் உடலைப் பெற்றுக்கொள்ள

# வடகொரியாவுக்கு மலேசியா அவகாசம்

வடகொரிய ஜனாதிபதியின் சகோதரர் கிம் ஜோங் நாம்மின் உடலைப் பெறுவதற்கு அவரது உறவினர்களுக்கு அவகாசம் வழங்கவுள்ளதாக மலேசியா தெரிவித்துள்ளது.

வடகொரிய ஜனாதிபதி கிம் ஜோங்-உன்னின் ஒன்றுவிட்ட சகோதரர் கிம் ஜோங்-நாம். இவர் கடந்த மாதம் மலேசிய தலைநகர் கோலாலம்பூர் விமான நிலையத்தில் மர்மமான முறையில் மரணமடைந்தார். விமான நிலையத்தில் அமர்ந்திருந்த அவரது முகத்தில் 2 பெண்கள் தடை செய்யப்பட்ட 'வி எக்ஸ்' என்ற கொடுமையான இரசாயன விஷப்பவுடரை வீசி கொலை செய்ததாக கூறப்படுகிறது.

இக்கொலை தொடர்பாக வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணை நடத்தப்பட்டு 2 பெண்கள் உள்ளிட்ட சிலர் கைது செய்யப்பட்டுள்ளனர். இக்கொலை தொடர்பாக சந்தேகத்தின்பேரில் பல வடகொரியர்களை மலேசிய காவல்துறை தேடி வருகிறது. இதன் காரணமாக பாதுகாப்பு காரணங்களுக்காக வடகொரிய மக்களுக்கான விசா இல்லாத பயணச் சலுகையை மலேசிய அரசு ரத்து செய்தது.

அதேசமயம், வடகொரியாவின் விசாரணையில் கண்டுபிடித்ததை வடகொரியா ஏற்க மறுத்துள்ளது. அதாவது, கிம் ஜோங் -நாம் மலேசியாவில் இறந்தபோது அவர் வைத்திருந்த கடவுச்சீட்டில் (பாஸ்போர்ட்) கிம் சோல் என்ற பெயர் இருந்தது. எனவே, கிம் சோல், கிம் ஜோங் நாம் இருவரும் ஒரே நபர்தான் என்று மலேசிய காவல்துறை உறுதி செய்தது. அவரை கிம் சோல் என்று அழைப்பதை ஏற்க மறுத்த வடகொரியா, கிம் ஜோங் நாம் உடலை திரும்ப ஒப்படைக்கும்படி கூறியுள்ளது.

வடகொரியாவின் எதிர்ப்புக்கு மத்தியில் மலேசியாவில் கிம் ஜோங் நாம் உடல் பிரேத பரிசோதனை செய்யப்பட்டது. இந்த பிரேத பரிசோதனை அறிக்கையையும் வடகொரியா நிராகரித்துள்ளது.

இந்நிலையில், நாம்மின் உடலை என்ன செய்வது என்பது குறித்து முடிவு செய்யும் முன் அவரது உறவினர்கள் பெறுவதற்காக இரண்டு அல்லது மூன்று வாரங்கள் அவகாசம் வழங்கப்போவதாக மலேசியா தெரிவித்துள்ளது. அவரது உடலை கிம் உறவினர்கள் பெற்றுக்கொள்வார்கள் என மலேசிய சுகாதாரத்துறை அமைச்சர் சுப்பிரமணியம் சதாசிவம் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.



ஐ.எஸ் கெடுபிடி காரணமாக கடந்த ஒக்டோபர் மாதம் தொடக்கம் இதுவரை சுமார் 2 இலட்சம் பேர் மொசூல் நகரிலிருந்து இடம்பெயர்ந்துள்ளனர். அவர்களில் அஸன்ஷாம் அகதிகள் முகாமில் தம்மை பதிவு செய்துகொள்வதற்காக வரிசையில் காத்திருக்கும் ஒருபகுதியினரை படத்தில் காணலாம்..

## அர்ஜுன்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

மத்திய வங்கி ஆளுநரிடம் சுமார் 7 மணி நேர விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மத்திய வங்கி பிணை முறிகள் விற்பனையில் இடம்பெற்ற மோசடிகள் தொடர்பில் ஆராய ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவொன்றை ஸ்தாபித்தமை குறிப்பிடத்தக்கது.

உயர்நீதிமன்ற நீதியரசர் சித்திரஸ்ரீ தலைமையிலான ஆணைக்குழுவே விசாரணைகளை நடத்திவருகின்றது.

## பஷில்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

குறித்த சம்பவம் தொடர்பில் பண மோசடி சட்டத்தின் கீழ் சட்டமா அதிபர் மேற்கொண்டுள்ள வழக்குக்கு அமையவே இந்த அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# டெங்கு நிலைமைகளை ஆராய்வதற்கு அவசர கூட்டத்துக்கு முதலமைச்சர் பணிப்பு

கிண்ணியாவில் ஏற்பட்டுள்ள டெங்கு அபாய நிலைமையை கட்டுப்படுத்துவது தொடர்பில் அவசர கூட்டமொன்றை கூட்டுமாறு கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஏ.எல்,எம் நசீருக்கு கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் பணிப்புரை விடுத்துள்ளார்,

இதனடிப்படையில் நாளை கிழக்கு மாகாண சபைக்கட்டத்தில் இந்த கூட்டம் நடைபெறவுள்ளதுடன் இதன் போது சுகாதாரத் துறைசார் முக்கிய அதிகாரிகளும் பங்கேற்கவுள்ளனர்,

இதன் போது மாகாண சபைத் தலைமைச் செயலாளர்,மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ,சுகாதாரப் பணிப்பாளர்,மற்றும் முக்கிய அதிகாரிகள் பலரும் இந்தக் கூட்டத்தில் பங்கேற்கவுள்ளனர்,

அத்துடன் டெங்கு பரிசோதனையின் போது நோயாளிகள் எதிர்நோக்கும் பல்வேறு சிரமங்கள் குறித்தும் இரத்தப் பரிசோதனைகளின் போது செலுத்தப்படும் கட்டணங்களினால் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு உடனடி தீர்வை வழங்கவும் இதன் போது கவனம் செலுத்த வேண்டுமென கிழக்கு முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் கேட்டுக் கொண்டுள்ளார்,

உள்ளூராட்சி மன்ற செயலாளர்களுக்கு இதற்கு முன்னர் முதலமைச்சரின் செயலாளரின் ஊடாக சில பணிப்புரைகள் விடுக்கப்பட்டிருந்த நிலையில் அவற்றின் முன்னேற்றம் குறித்தும் நாளைய கூட்டத்தில் அவதானம் செலுத்தப்படவுள்ளது.

டெங்கு அவரச நிலைமையை கட்டுப்படுத்துவதற்கான செயற்பாட்டில் மத்திய அரசாங்கத்தின் தேவைகள் ஏற்படும் பட்சத்தில் மத்திய சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன மற்றும் பிரதியமைச்சர் பைசல் காசிம் ஆகியோரிடம் கோரிக்கைக ளை விடுத்து அவற்றைப் பெற்றுக் கொள்வது தொடர்பிலும் கவனம் செலுத்துமாறு முதலமைச்சர் கேட்டுள்ளார்.

# முதலமைச்சர் மருத்துவ சிகிச்சைக்கு இந்தியா பயணம்



கிழக்கு மாகாண முதலமைச்சர் நஸீர் அஹமத் அவசர மருத்துவ சிகிச்சைக்காக நேற்று இந்தியா பயணமானார்.

## றீட்டா...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

உரிமைகள் பேரவையில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்நிலையிலேயே இன்று 15 ஆம் திகதி இரண்டாவது அறிக்கை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. கடந்த ஒக்டோபர் மாதம் 10 ஆம் திகதி உத்தியோகபூர்வ விஜயமாக இலங்கைக்கு வருகை தந்திருந்த றீட்டா ஐசாக், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கியஸ்தர்கள், தமிழ் முற்போக்குக் கூட்டணியினர், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முக்கியஸ்தர்கள் ஆகிய தரப்பினர் உள்ளிட்ட பலருடன் விசேட பேச்சுக்களின் ஈடுபட்டிருந்தார்.

இவ்வாறு நடத்தப்பட்ட பேச்சுக்கள் மற்றும் வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்துக்கான றீட்டாவின் நேரடி விஜயம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையிடம் சமர்ப்பித்த அறிக்கை தொடர்பிலான விவாதமே இன்று இடம்பெறவுள்ளது.

அத்தோடு, 2015 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது தொடர்பில் இலங்கைக்கு இரண்டு வருடங்கள் கால அவசாசத்தை வழங்கும் ஐ.நா.வின் யோசனை நகலானது நேற்று முன்தினம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

இந்த யோசனை தொடர்பில் எதிர்வரும் 21ஆம் திகதிவரை திருத்தங்களை முன்வைக்க சந்தர்ப்பமளிக்கப்பட்டுள்ளதுடன் 22ஆம் திகதி மனிதவுரிமைகள் பேரவையின் ஆணையாளர் செய்ட் அல் ஹுசைனின் அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டு விவாதம் நடைபெறவுள்ளது. மேலும், 23ஆம் திகதி இலங்கை குறித்த தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பும் நடத்தப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## கிழக்கின்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

திரு. பாஸ்கரன், பிரதம மந்திரியின் சேவைத் திணைக்கள பிரதிநிதிகள், திட்டமிடல் பணிப்பாளர் நாயகம், நிதி ஆணைக்குழு பிரதிநிதிகள், மாகாணசபைக் கல்வியமைச்சர் மற்றும் அவரது செயலாளர், பிரதம செயலாளர் பிரதிநிதிகள், மாகாணப் பணிப்பாளர், கௌரவ ஆளுநரின் செயலாளர், பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.

இதன் போது கிழக்குமாகாணத்திலுள்ள பாடசாலைகளில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்கான அனுமதி கிடைத்துள்ளது. இதனடிப்படையில் கிழக்குமாகாணத்தில் காணப்படும் 4703 வெற்றிடங்களும் நிரப்பப்படும். ஒரு வார காலத்துக்குள், இருக்கும் வெற்றிடங்களின் தகவல்களை சேகரித்து முகாமைத்துவ சேவை ஆணைக்குழுவுக்கு அனுப்பிவைக்கப்படும். அதன் பின்னர் முகாமைத்துவ ஆணைக்குழுவின் பணிப்பாளர் ஊடாக நிதி ஆணைக்குழுவுக்கு அது அனுப்பி வைக்கப்படும். அதன் பின்னர் பிரதம மந்திரியினுடைய ஆலோசகர் திரு பாஸ்கரலிங்கம் அவர்கள் இதற்கான அனுமதியையும், நிதி ஒதுக்கீடுகளுக்கான அனுமதியையும் வழங்குவதாக அறிவித்திருக்கின்றார்.

பெரும்பாலும் எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். மிக விரைவாக இதற்கான சகல வேலைத்திட்டங்களையும் மேற்கொள்ளுமாறு பணிப்புரையும் இன்று விடுக்கப்பட்டுள்ளது.

இதனுடன் இணைந்ததாக கிழக்கு மாகாண பாடசாலைகளில் நிலவும் 67 ஆய்வுகூட உதவியாளர்கள், 284 காவலாளிகள்இ 261 சிற்றூழியர்கள், 384 சுகாதார ஊழியர்கள் ஆகிய வெற்றிடங்களையும் உடனடியாக நிரப்புவதற்கான அனுமதியும் இதன்போது கிடைக்கப்பெற்றுள்ளது.

மேலும் உள்ளூராட்சி மன்றங்களில் காணப்படும் வெற்றிடங்கள்இ சுகாதார அமைச்சில் காணப்படும் வெற்றிடங்கள் ஆகியவற்றினை முழுவதுமாக நிரப்புவதற்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு முகாமைத்துவ சேவைத் திணைக்களத்துக்கு கௌரவ பிரதம மந்திரியின் ஆலோசகர் திரு பாஸ்கரலிங்கம் பணிப்புரை விடுத்திருக்கின்றார்.

ஏனைய மாகாணங்களிலும் விவசாய திணைக்களத்தில் ஆளணி வெற்றிடங்கள் காணப்பட்டதால் கிழக்குமாகாணத்தின் விவசாய திணைக்கள ஆளணி வெற்றிடங்களை நிரப்புவதில் சிக்கல்கள் காணப்பட்டன.

ஆனால் பிரதம மந்திரியின் ஆலோசகர் கிழக்குமாகாணத்தை விவசாய மாகாணம் என்னும் ரீதியில் இங்கு காணப்படும் விவசாய அதிகாரிகளுக்கான வெற்றிடங்களையும் நிரப்புவதற்கு ஆலோசனைகளை வழங்குமாறும் பணிப்புரை விடுத்துள்ளார்.

## புதிய அரசமைப்பின்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

ரீதியிலான விசேட செயற்றிட்டமொன்று இன்றுமுதல் ஆரம்பமாகவுள்ளது.

சிவில் அமைப்புக்களால் முன்னெடுக்கப்படவுள்ள இச்செயற்பாடு தொடர்பிலான ஆரம்ப நிகழ்வுகள் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இலங்கை மன்றக் கல்லூரியில் நடைவெறவுள்ளன.

இதில் பிரதம அதிதியாக புதிய அரசமைப்புக்கான மக்களின் கருத்தறியும் குழுவின் தலைவராக செயற்பட்ட சட்டத்தரணி லால் விஜேயநாயக்க கலந்துள்ளவுள்டர்.

நாட்டுக்கு புதிய அரசமைப்பொன்று அவசியமில்லை. அரசமைப்பு மறுசீரமைப்பு மாத்திரமே போதுமானது என்று அரசிலுள்ள ஒரு சிலராலேயே கருத்துக்கள் வெளியிட்டுவரும் நிலையில்தான் இச்செயற்பாடு முன்னெடுக்கப்படவுள்ளது.

அந்தவகையில், அனைத்து இனமக்களும் சமஉரிமையுடன் வாழக்கூடிய விதத்தில் அதிகாரப் பகிர்வுடன் கூடிய அரசமைப்பொன்று அவசியம் எனும் கொள்கையே இச்செயற்பாட்டில் பிரதானமாக வலியுறுத்தப்படவுள்ளது.

இதன் அடிப்படையிலேயே மக்கள் கருத்தறியும் குழுவும் தமது முதல் கட்டப் பணிகளை மேற்கொண்டு தற்போது இரண்டாம் கட்டப் பணிகளை நாடளாவிய ரீதியல் மேற்கொள்ளவுள்ளது என்று லால் விஜேயநாயக்க கூறினார்.

இந்த இரண்டாம் கட்ட செயற்றிட்டத்தில்; அரச ஊழியர்களுக்கும் அரச நிறுவனங்களுக்கும் பிரதேச செயலகங்களுக்கும் புதிய அரசமைப்பின் அவசியத்தை வலியுறுத்தவுள்ளோம். நேற்று காலி மற்றும் குருணாகலையில் புதிய அரசமைப்பின் அவசியம் குறித்து அரச ஊழியர்களுக்கு வலியுறுத்தப்பட்டது. இதேவளை, எதிர்வரும் 17ஆம் திகதி கண்டியிலும், 19ஆம் திகதி களுத்தரையிலும் விளக்கமளிக்கும் செயற்பாடு முன்னெடுக்கப்படவுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

இன்றைய தினம் இலங்கை மன்றக் கல்லூரியில் இடம்பெறவுள்ள புதிய அரசமைப்பின் அவசியத்தை வழியுறுத்தும் நிகழ்வில் 49 சிவில் அமைப்புகள் கலந்துகொள்ளவுள்ளதுடன் இந்நிகழ்வினைத் தொடர்ந்து குறித்த 49 சிவில் அமைப்புகளும் புதிய அரசமைப்பின் அவசியம் குறித்து நாடாபூராகவும் மக்களுக்குத் தெளிப்படுத்தும் பணிகளை முன்னெடுக்கவுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## டெங்கு நோய்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

அமைச்சர் றிஷாத் பதியுதீன் அமைச்சரவை கூட்டத்தையடுத்து அமைச்சர் ராஜித சேனாரத்னவுடன் நடத்திய பேச்சுவார்த்தையினையடுத்து டெங்கு ஒழிப்பு தொடர்பாக முக்கிய தீர்மானங்கள் பல எடுக்கப்பட்டதாக சுகாதார அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதன்படி 3 நிபுணத்துவ டாக்டர்களை உடனடியாக கிண்ணியாவுக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதுதவிர கிண்ணியா வைத்தியசாலைக்கு தேவையான வசதிகளை வழங்குவதற்கு தேவையான நிதியை மத்திய அரசிலிருந்து ஒதுக்குவதற்கும் டாக்டர் ராஜித இணக்கம் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் றிஷாத் நேற்று காலை நாடு திரும்பியிருந்தார். அமைச்சர் ராஜித சேனாரத்னவை சந்தித்து கிண்ணியா நிலவரம் தொடர்பான எழுத்து மூலக்கடிதமொன்றையும் கையளித்தார். அரசாங்கம் அவசர நடவடிக்கை எடுக்கவேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

கல்முனை பிராந்திய சுகாதார பணியகத்திலிருந்து அவசரமாக டெங்கு ஒழிப்புக்குத் தேவையான ஆளணியைப் பெற்றுக்கொள்வதற்காக மத்திய அரசாங்கத்தின் அனுமதியை பெற்றுக்கொள்வது தொடர்பிலும் அமைச்சர் றிஷாத் கவனம் செலுத்தினார்.

இதேவேளை திருகோணமலை மாவட்ட அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் அப்துல்லாஹ் மஹ்ரூப் கிழக்கு மாகாண ஆளுநரிடமும் திருமலை மாவட்ட அரசாங்க அதிபரிடமும் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க இரண்டு கோடி ரூபா நிதி அவசரத்தேவைக்கு ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் மஹ்ருப் எம்.பி தெரிவித்தார்.

நேற்று முன்தினம் கிண்ணியா பிரதேசத்துக்கு விஜயம் செய்த டெங்கு ஒழிப்பு பிரதிப் பணிப்பாளர் திசேரா நிலைமைகளை நேரில் ஆராய்ந்த பின்னர் ஆளுநருடன் இணைந்து அவர் தயாரித்த அறிக்கை மத்திய அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டதாக சுகாதார அமைச்சின் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

கிண்ணியாவில் நாளுக்கு நாள் நிலைமைகள் மோசமடைந்து வரும் அதேவேளை வெளிமாவட்டங்களில் இருந்தும் உள்ளூரிலிருந்தும் தொண்டர்கள் அங்கு வந்து டெங்கு ஒழிப்புப் பணியில் மும்முரமாக ஈடுபடுவதாக தெரிவிக்கப்படுகின்றது. வைத்தியர்கள் மருத்துவ ஆய்வுகூட உதவியாளர்கள் தொழிநுட்ப உதவியாளர்கள் எனப் பல்வேறுதரப்பட்ட மருத்துவவியலாளர்கள் இரவு பகலாக எந்தவிதமான எதிர்பார்ப்புக்களுமின்றி இந்தப்பணியில் ஈடுபட்டு வருகின்றனர். கிண்ணியா மக்கள் தமது ஒத்துழைப்புக்களை இந்தப் பணியாளர்களுக்கு நல்கி வருவதாக மஹ்ருப் எம்.பி தெரிவித்தார்.

பல்வேறு அரச சார்பற்ற நிறுவனங்கள் மெத்தைகள், நுளம்பு வலைகள் மற்றும் மருத்து வசதிகளுக்கு உதவி வருவதாக தெரிவித்த மஹ்ருப் எம்.பி, கிண்ணியா மக்கள் படும் துன்பங்களுக்கு மனமுவந்து உதவியளிக்குமாறு வேண்டுகோள் ஒன்றையும் விடுத்தார்.

இதே வேளை திருமலைக் கச்சேரியில் பொலிசாரும் முப்படையினரும்; இணைந்து நேற்று நடாத்திய அவசர மாநாட்டில் நாளை தொடக்கம் கிண்ணியா டெங்கு ஒழிப்புப் பணிகளில் படையினரும் ஈடுபடுவதென முடிவெடுக்கப்பட்டதாக அரச அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

திருகோணமலை கிண்ணியாவில் தீவிரமடைந்துள்ள டெங்கு நோயைக் கட்டுப்படுத்த துரித நடவடிக்கை எடுக்குமாறு சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் அநுர பிரயரதர்ஷன யாப்பா ஆகியோருக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பணிப்புரை வழங்கினார்.

ஜனாதிபதி செயலகத்தில் செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் அரசின் விசேட கலந்துரையாடல் கூட்டமொன்று நடைபெற்றது.

இதில் கலந்து கொண்ட புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ், டெங்கு நோயினால் கிண்ணியாவில் ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் குறித்து ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு சென்றார்.

டெங்கு நோயின் தாக்கத்தால் கிண்ணியாவில் இதுவரை 14 மரணங்கள் சம்பவித்துள்ளதாகவும், 800க்கும் மேற்பட்டவர்கள் வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருவதாகவும் சுட்டிக்காட்டியதுடன், அங்குள்ள வைத்தியசாலைகளில் நிலவும் ஆளணி மற்றும் பௌதீக வளப் பற்றாக்குறைகள் தொடர்பிலும் ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டு சென்றார்.

இந்த விடயம் தொடர்பில் அவசரமாக நடவடிக்கை எடுக்குமாறும், வைத்தியசாலைகளில் நிலவும் ஆளணி மற்றும் பௌதீக பற்றாக்குறைகள் சம்பந்தமாக ஆராய்ந்து கொழும்பிலிருந்து விசேட வைத்தியர்கள், தாதிமார்கள் மற்றும் மருந்து வகைகளை அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்குமாறும் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவுக்கு ஜனாதிபதி பணிப்புரை வழங்கினார்.

இதேவேளை, கிண்ணியாவில் ஏற்பட்டுள்ள நிலைமையை அனர்த்தமாக பிரகடனப்படுத்துமாறு இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் முன்வைத்த கோரிக்கை சம்பந்தமாக, ஆராய்ந்து அடுத்த கட்ட நடவடிக்கையினை எடுக்குமாறு அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் அநுர பிரயதர்ஷன யாப்பாவுக்கும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

அத்துடன், கிண்ணியாவில் ஏற்பட்டுள்ள அவசர நிலை சம்பந்தமாக அரசு அதிக கவனம் செலுத்தியுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாஹ்விடம் இதன்போது உறுதியளித்தார்.

கிண்ணியாவில் பரவும் காய்ச்சல் டெங்கு தானா என மக்கள் சந்தேகம்? ஆய்வு செய்ய நடவடிக்கை எடுக்குமாறு இம்ரான் எம்.பி ஜனாதிபதியிடம் கோரிக்கை

கிண்ணியாவில் பரவும் காய்ச்சல் டெங்கு தானா என மக்கள் சந்தேகம் தெரிவிப்பதால் இது குறித்து ஆய்வு செய்ய நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் கோரிக்கை விடுத்தார்.

நேற்று காலை ஜனாதிபதியை அவரது உத்தியோகபூர்வ அலுவலகத்தில் சந்தித்த இம்ரான் எம்.பி கிண்ணியாவில் பரவும் காய்ச்சல் குறித்தும் அதனால் ஏற்பட்ட மரணங்கள் குறித்தும் ஜனாதிபதிக்கு விளக்கிக் கூறினார்.

கிண்ணியாவில் கடந்த இரண்டரை மாதங்களாக இந்த அனர்த்த சூழ்நிலை நிலவுகின்றது. இதனால் இதுவரை 1200க்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர். 14 பேர் மரணம் அடைந்துள்ளனர். எனினும் இதுவரை இந்நோய் கட்டுப்பாட்டுக்குள் வரவில்லை. மாறாக நாளுக்கு நாள் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதோடு மரணம் அடைவோரின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றது.

எனவே, கிண்ணியாவில் பரவும் இந்தக் காய்ச்சல் டெங்கு தானா என்பது குறித்து உறுதிப்படுத்த வேண்டியுள்ளது. அதற்காக கிண்ணியாவை அனர்த்த வலயமாகப் பிரகடனப்படுத்தி விசேட மருத்துவக்குழுக்களைக் கிண்ணியாவுக்கு அனுப்பி ஆய்வு செய்வதற்கான ஏற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். இந்த ஆய்வின் பெறுபேறுகளை மையமாக வைத்து நோய்க்கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை முன்னேடுக்க வேண்டும் என இம்ரான் எம்.பி கேட்டுக் கொண்டார்.

அதேபோல குழந்தை நோய் விசேட நிபுணர் மயக்க மருந்து கொடுக்கும் நிபுணர் வைத்தியர்கள் தாதியர் ஏனைய தேவையான ஆளணியினர் போன்றோரை கிண்ணியா வைத்தியசாலைக்கு நிரந்தரமாக நியமித்துத் தருமாறும் வைத்தியசாலையின் ஏனைய பௌதீகத் தேவைகள் அனைத்தையும் நிவர்த்தி செய்து தருமாறும் வேண்டுகோள் விடுத்தார்.

இந்த விடயங்கள் குறித்து தான் ஊடகங்கள் மூலம் அறிந்து அவதானம் செலுத்தி வந்ததாக தெரிவித்த ஜனாதிபதி இந்த விடயங்கள் குறித்து தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் உடன் முன்னெடுக்குமாறு சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஆகியோருக்கு தொலைபேசி மூலம் பணிப்புரை விடுத்தார்.

## டெங்கை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

நடவடிக்கையெடுத்துள்ளதாகவும், வைத்திய அதிகாரிகள் விடுமுறைகளைத் தவிர்த்து கடமையில் ஈடுபட பணித்துள்ளதாகவும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் டாக்டர் சமந்த ஆனந்த தெரிவித்தார்.

கிண்ணியாவில் வேகமாக பரவிவரும் நோய்த் தொற்றுக்கு அசர வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகள் தொடர்பாக கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்திற்கு அரச வைத்திய அதிகாரிகள் பூரண ஒத்துழைப்பை வழங்கி வருவதாகவும் மக்களை இவ்விடயத்தில் விழிப்பூட்ட சுகாதார அமைச்சுடன் இணைந்து பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது,

அரச வைத்திய அதிகாரிகள் சங்க உறுப்பினர்களுக்கு விடுமுறைகளில் இருந்து தவிர்ந்துகொள்ளுமாறு பணித்துள்ளோம். 24மணிநேர சேவையை உறுதிசெய்ய நடவடிக்கையெடுத்துள்ளோம். நாம் ஒரு தொழிற்சங்கம் என்றவகையில் சுகாதார அமைச்சுடன் இணைந்து தேவையான அனைத்து ஒத்துழைப்புகளையும் வழங்கி வருகின்றோம்.

மக்களை தெளிவுபடுத்துவதற்கான பூரண வள உதவிகளை மேற்கொண்டு வருகின்றோம். மக்கள் இவ்விடயத்தில் ஒத்துழைத்தால் மாத்திரமே டெங்குத் தொற்றை கட்டுக்குள் கொண்டுவரலாம்.- என்றார்.

## இலங்கை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

இலங்கைக் கொடியுடன் எரிபொருள் ஏற்றிவந்த, கப்பல் ஒன்று சோமாலிய கடற்கொள்ளையர்கள் வசம் சிக்கியுள்ளதாக, நம்பத்தகுந்த தகவல்கள் வெளியாகியுள்ளதாக, ரொய்டர் செய்தி நிறுவனம் தெரிவித்தது.

இந்தநிலையில், அந்தப் கப்பலில் இருந்த எட்டுப் பேரும் இலங்கையர்களாக இருக்கலாம் என, நம்புவதாக கடற்படை தெரிவித்தது.

துபாய் அரசுக்கு சொந்தமான எரிஸ் 13 என்ற இந்த கப்பலில் எட்டுப் பேர் அடங்கிய குழு பயணித்ததாகவும், இந்தப் கப்பல் சோமாலிய கடற்பகுதியை அண்மித்த வேளை, காணாமல் போயுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

இது தொடர்பில் மேலதிக தகவல்களை பெற்றுதருமாறு இலங்கை தூதரகங்களுக்கு அறிவித்துள்ளதாக வெளிவிவகார அமைச்சின் செய்தி தொடர்பாடல் மஹிசினி கொலன்னே தெரிவித்தார்.

எதுஎவ்வாறு இருப்பினும், இந்தக் கப்பல் கடத்தப்பட்ட தகவல் உண்மையாயின் 2012ஆம் வருடத்தின் பின்னர், சோமாலிய கடற்கொள்ளையர்களின் கைகளில் சிக்கிய முதல் கப்பல் இதுவாகும் எனவும் ரொய்டர் செய்தி நிறுவனம் தெரிவித்திருந்தது.

மேலும், குறித்த கப்பலை தேடும் முயற்சியில் ஐரோக்கிய கடற்படை ஒன்றியமும் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இது பற்றிய சரியான தகவல்களை அறிந்து கொள்ள பிரித்தானிய கேர்ணல் ஒருவர் கடற்கொள்ளையர்களை தொடர்பு கொள்ள முயற்சித்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

## கிண்ணியாவை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

தொடர்ந்து நுற்றுக்கணக்கானோர் பாதிக்கப்பட்டு வரும் நிலையில் இது டெங்கு நுளம்படி அல்லது வேறு ஏதும் வைரஸா எனக்கேட்ட போதே அவர் இதனைத்தெரிவித்தார். இங்கு ஒரு புது வகையான வைரஸே பரவுவதாகச் சந்தேகிக்கின்றோம். வீரியம் கூடிய வைரஸாக இருப்பதனால் பாதிப்பு அதிகமாக உள்ளது. இது தொடர்பாக இரத்தம் சேகரிக்கப்பட்டு அனுப்பப்பட்டுள்ளது. ஆய்வின் முடிவு கிடைத்த பின்பே உண்மை நிலையை அறியலாம் என்றும் அவர் தெரிவித்தார். இதே நேரம் நேற்றும் டெங்கு நோய்காக சிகிச்சை பெறுவதற்கு 1000 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக டாக்டர் தெரிவித்தார். கொழும்பிலிருந்து நேற்று மேலும் இரு டாக்டர்கள் அனுப்பி வைக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

நவமணி

www.facebook.com/NavamaniOfficial

# Sports

விளையாட்டுச் செய்தி



### பங்களாதேஷ் டெஸ்ட் வரலாறு

- முதல் டெஸ்ட் சதம் - அமினுல் இஸ்லாம் - 145 ஓட்டங்கள்
- அதிக ஓட்டங்கள் - தமீம் இக்பால் - 3546 ஓட்டங்கள்
- அதிக விக்கெட்டுக்கள் - சகீப் அல் ஹசன் - 170 விக்கெட்டுக்கள்
- டெஸ்ட் சதம் அடித்த இளம் வீரர் - மொஹமட் அஷ்ரபுல்(17 வயது)
- அதிக இன்னிங்ஸ் விக்கெட்டுக்கள் - இனாமுல் ஹக் - 10
- சிறந்த பந்துவீச்சு - தஜிஉல் இஸ்லாம் - 39 ஓட்டங்களுக்கு 8 விக்கெட்
- முதல் ஹெட்ரிக் - அலொக் நபாலி - 2003இல் பாகிஸ்தானுக்கு எதிராக
- அதிகூடிய ஓட்டம் - சகீப் அல் ஹசன் - 217 ஓட்டங்கள்
- முதல் இரட்டைச்சதம் - முஷ்பிகுர் ரஹீம் - 2013இல் இலங்கைக்கு எதிராக
- அதிகூடிய இணைப்பாட்டம் - சகீப் அல் ஹசன் மற்றும் முஷ்பிகுர் ரஹீம் ஜோடி -2017இல் நியூசிலாந்து எதிராக
- சிறந்த பந்துவீச்சு - மெஹந்தி ஹசன் மீராஸ் - 159 ஓட்டங்களுக்கு 12 விக்கெட்டுக்கள்

**இலங்கை - பங்களாதேஷ் டெஸ்ட் கிரிக்கெட் தொடர்:**

# டெஸ்ட் அரங்கில் 100ஆவது போட்டி வரலாறு படைக்குமா பங்களாதேஷ்

பீ.எப்.எம் றிஷாட்

இலங்கை - பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் நடைபெற்று வருகிறது. காலி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்ற முதல் டெஸ்டில் இலங்கை அணி வெற்றி பெற்றது. இரு அணிகளுக்கு இடையிலான 2ஆவது டெஸ்ட் இன்று கொழும்பு பி.சரவணமுத்து மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது. இது பங்களாதேஷ் அணிக்கு 100ஆவது டெஸ்ட் போட்டியாக அமையவுள்ளதுடன், டெஸ்ட் அந்தஸ்து பெற்ற 10 நாடுகளில் 100ஆவது டெஸ்ட் போட்டியை விளையாடும் கடைசி அணியாகவும் பங்களாதேஷ் வரலாறு படைக்கவுள்ளது.

2000ஆம் ஆண்டு டெஸ்ட் அரங்கில் அறிமுகத்தைப் பெற்றுக்கொண்ட பங்களாதேஷ் அணி சுமார் 17 வருடங்களாக டெஸ்ட் போட்டிகளில் தடுமாறிவருகின்றது. இதுவரை 99 டெஸ்ட் போட்டிகளில் கலந்துகொண்டு 8 போட்டிகளில் மாத்திரமே வெற்றியைப் பதிவு செய்துள்ளது. இதில் சிம்பாப்வே அணிக்கெதிராக 5 போட்டிகளிலும், மேற்கிந்திய தீவுகள் அணிக்கெதிராக 2 போட்டிகளிலும், இங்கிலாந்து அணிக்கெதிராக ஒரு போட்டியிலும் அவ்வணி வெற்றியைப் பதிவுசெய்துள்ளது. இதில் அவ்வணி பங்குபற்றிய 76 போட்டிகள் தோல்வியும், 15 போட்டிகள் வெற்றி-தோல்வியின்றியும் நிறைவுபெற்றன. எனினும், சொந்த மண்ணில் இந்தியாவிற்கு எதிராக தமது முதலாவது டெஸ்ட் போட்டியில் விளையாடிய பங்களாதேஷ் அணியின் தலைவராக ஹபீபுல் பஷர் செயற்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், பங்களாதேஷ் அணி டெஸ்ட் அரங்கில் இலங்கையுடன் மாத்திரமே அதிகளவு போட்டிகளில் விளையாடியுள்ளன. இதில் 17 போட்டிகளில் இலங்கையுடன் மோதிய பங்களாதேஷ் அணி, 15 போட்டிகளில் தோல்வியைத் தழுவியதுடன், 2 போட்டிகள் சமநிலையில் நிறைவடைந்தமை குறிப்பிடத்தக்கது. எனினும், இலங்கை அணியின் முன்னாள் வீரரான சந்திக்க ஹத்துருசிங்கவின் பயிற்சியின் கடந்த 2 வருடங்களாக 3 வகை கிரிக்கெட்டிலும் திறமைகளை வெளிப்படுத்தி வருகின்ற அவ்வணி, இங்கிலாந்து அணிக்கெதிராக கடந்த வருடம் நடைபெற்ற டெஸ்ட் போட்டியை சொந்த மண்ணில் வெற்றி கொண்டு சாதனை படைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. மேலும் பங்களாதேஷ் அணியின் அனுபவமிக்க வீரர்களான முஷ்பிகுர் ரஹீம், சகிப் அல் ஹசன் மற்றும் தமீம் இக்பால் ஆகிய வீரர்கள் அவ்வணியின் கடந்தகால வெற்றிகளுக்கு முக்கிய காரணம் என்று கூறலாம். இதில் முஷ்பிகுர் 2005இலும், சகிப் 2007இலும், தமீம் 2008இலும் டெஸ்ட் அறிமுகம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

100ஆவது டெஸ்டில் பங்கேற்க பங்களாதேஷ் வீரர்கள் ஆவலாக உள்ள அதேநேரம், இலங்கை அணிக்கெதிராக இப்போட்டியை வெற்றி கொள்ளும் எதிர்பார்ப்புடன் இன்று ஆரம்பமாகவுள்ள போட்டியில் களமிறங்கவுள்ளது. எனினும், பங்களாதேஷ் கிரிக்கெட்டின் வளர்ச்சிக்காக என்றுமே கைகொடுத்த இலங்கை கிரிக்கெட் நிறுவனம், அவ்வணியின் 100ஆவது டெஸ்ட் போட்டியை சிறப்பிக்கும் வகையில் பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தவுள்ளது. இதன் ஒரு அங்கமாக இன்றையதினம் காலை பி.சரவணமுத்து மைதானத்தில் பங்களாதேஷ் வீரர்களுக்கு நினைவுப் பதக்கங்களை வழங்கவும், விசேட இரவு விருந்து உபசாரமொன்றை ஏற்பாடு செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, முதல் போட்டியில் பெற்றுக்கொண்ட வெற்றியின் நம்பிக்கையுடன் இன்றைய போட்டியிலும் இலங்கை அணி முழு பலத்துடன் விளையாடவுள்ளதாக இலங்கை அணியின் தலைவர் ரங்கன ஹேரத் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்தார். இதில் குறிப்பாக இலங்கை கிரிக்கட் அணியின் சுழற்பந்துவீச்சாளர் ரங்கன ஹேரத் தனது கிரிக்கெட் வாழ்வில் சிறப்பான மைல்கல் ஒன்றை எட்டுவதற்கு எதிர்பார்த்துள்ளார். முதல் தர போட்டிகளில் ஆயிரம் விக்கெட்டுக்களை கைப்பற்றவுள்ளமையே இந்த எதிர்பார்ப்பாகும். ரங்கன ஹேரத் இதுவரை 252 முதல் தர போட்டிகளில் விளையாடி 997 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார். இதன்படி அவர் ஆயிரம் விக்கெட்டுக்களை கைப்பற்றுவதற்கு இன்னும் 3 விக்கெட்டுக்கள் மாத்திரமே எஞ்சியுள்ளது. பங்களாதேஸ் அணியுடனான முதலாவது டெஸ்ட் போட்டியில் ரங்கன ஹேரத், இடது கை சுழற்பந்துவீச்சாளர்களில் அதிக விக்கட்டுக்களை வீழ்த்திய வீரர் என்ற சாதனையை படைத்தமை குறிப்பிடத்தக்கது. இலங்கை அணியைப் பொறுத்தமட்டில் முதல் டெஸ்ட் போட்டியில் விளையாடிய அணியே களமிறங்கும் எனவும், வேகப்பந்துவீச்சாளர் லஹிரு குமாரவுக்குப் பதிலாக தனஞ்சய டி சில்வா அணியில் இடம்பெறலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆசிய தடகளப் போட்டிகள் ஒடிசாவில் நடத்த தீர்மானம்?

பீ.எப்.எம் றிஷாட்

ஆசிய தடகளப் போட்டிகள் ஒடிசா மாநிலம் புவனேஸ்வரில் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஜார்க்கண்ட் தலைநகர் ராஞ்சியில், 22ஆவது ஆசிய தடகள சம்பியன்ஷிப் போட்டிகள், எதிர்வரும் ஜூன் முதலாம் திகதி முதல் 4ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. ஆனால் போட்டியை நடத்துவதற்கு தேவையான போதியளவு நிதியினை .ஜார்க்கண்ட் மாநில அரசு ஒதுக்க முன்வராத காரணத்தால், போட்டிகளை நடத்துவதிலிருந்து ஜார்க்கண்ட் அரசு பின்வாங்கியது.

இந்நிலையில், ஆசிய தடகளப் போட்டிகளை புவனேஸ்வரில் நடத்த ஒடிசா அரசு முன்வந்துள்ளது. சமீபத்தில் ஒடிசா மாநிலம் புவனேஸ்வரில் உள்ள கலிங்கா மைதானத்தை, இந்திய தடகள கூட்டமைப்பு (ஏ.எப்.ஐ.,) நிர்வாகிகள் பார்வையிட்டனர்.

இதுகுறித்து ஏ.எப்.ஐ., செயலர் சி.கே. வால்சன் கூறுகையில், நிதி தொடர்பான பிரச்சினையால், ஆசிய தடகளப் போட்டியை நடத்த வாய்ப்பில்லை என ஜார்க்கண்ட் அரசு தெரிவித்தது. இப்போட்டியை நடத்த ஒடிசா அரசு ஆர்வம் காட்டியதால், அங்குள்ள மைதானத்தை எங்களது நிர்வாகிகள் பார்வையிட்டனர். போட்டியை நடத்துவது தொடர்பான இறுதி முடிவை ஒடிசா அரசு இன்று அறிவிக்கும் என எதிர்பார்க்கிறோம் என்றார்.

இதற்கு முன், இந்தியாவில் இரண்டு முறை (1989இல் டில்லி, 2013இல் புனே) ஆசிய தடகளப் போட்டிகள் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. 45 ஆசிய நாடுகளைச் சேர்ந்த சுமார் 800 வீர, வீராங்கனைகள் பங்கேற்கும் 22ஆவது ஆசிய தடகள சம்பியன்ஷிப் போட்டிகளுக்காக இலங்கை அணியின் வீரர்கள், தற்போது தமது பயிற்சிகளை முன்னெடுத்து வருகின்றதுடன், இதற்கான தகுதிகாண் போட்டிகள் அடுத்த மாதம் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# சபீரின் ஹெட்ரிக் கோலினால் பூட்டானை வென்றது இலங்கை

பீ.எப்.எம் றிஷாட்

தெற்காசிய மற்றும் ஜப்பான் நாடுகளின் 16 வயதின் வயதிற்குட்பட்டோருக்கான கால்பந்து தொடரின் மூன்றாவது போட்டியாக இடம்பெற்ற இலங்கை மற்றும் பூட்டான் அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் சபீர் ரஹ்மானின் ஹெட்ரிக் கோலினால் 5-2 என்ற கோல்கள் கணக்கில் இலங்கை இளையோர் அணி இலகுவாக வெற்றி பெற்றது. குதிரைப்பந்தயத்திடல் மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இப்போட்டியின் முதல் பாதியில் இலங்கை அணி 2க்கு 1 என முன்னிலை பெற்றது. இப் போட்டியில் பூட்டான் அணி 39 மற்றும் 85ஆவது நிமிடங்களில் கோல்களைப் பெற்றுக்கொண்டது. எனினும், போட்டி முழுவதும் அதிரடி ஆட்டத்தைக் காண்பித்த இலங்கை வீரர் மொஹமட் சபீர், போட்டியின் 40,44, 59 மற்றும் 66ஆவது நிமிடங்களில் ஹெட்ரிக் கோலுடன் மொத்தமாக நான்கு கோல்களைப் பதிவு செய்து இலங்கை அணியின் வெற்றிக்கு காரணமாக இருந்தார். எனினும், இலங்கைக்காக சிறந்த ஆட்டத்தைக் காண்பித்த மொஹமட் முர்ஷித் 90ஆவது நிமிடத்தில் இலங்கை அணிக்கான 5ஆவது கோலைப் பெற்றார். இதன் காரணமாக போட்டி நிறைவில் இலங்கை இளையோர் அணி தொடரின் முதல் வெற்றியை சுவைத்தது.



கிண்ணியா ரீ.பி ஜாயா மகளிர் வித்தியாலயத்தில் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி பாடசாலை மைதானத்தில் அதிபர் எம்.எம்.எம். முஸம்மில் தலைமையில் நடைபெற்றது. இதில் பிரத அதிதியாக கலந்து கொண்ட கிண்ணியா வலக் கல்விப் பணிப்பாளர் ஏ.எம். அகமட் லெப்பை, போட்டி நிகழ்ச்சியில் வெற்றி பெற்ற மாணவி ஒருவருக்கு பரிசில்கள் வழங்கி வைப்பதையும் போட்டி நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட மாணவிகளையும் படங்களில் காணலாம். (கிண்ணியா சஹ்ரின் எம் இஸ்மத்)


# முதலிடத்தில் அஸ்வின்

சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளின் சகலதுறை வீரர்களுக்கான புதிய தரவரிசை பட்டியலில் இந்திய அணியின் ரவிச்சந்திரன் அஸ்வின் மீண்டும் முதலிடத்தை பெற்றுள்ளார். சர்வதேச கிரிக்கெட் பேரவை நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள தரப்பட்டியலின் படி, இரண்டாம் இடத்தை பங்களாதேஷ் வீரர் சகிப் அல் ஹசன் பெற்றுள்ளார். மூன்றாம் இடத்தில் இந்தியாவின் ரவீந்ர ஜடேஜா தரப்படுத்தப்பட்டுள்ளார். இதற்கிடையில், பந்துவீச்சாளர்கள் தரப்பட்டியலில் இந்தியாவின் அஸ்வினும், ஜடேஜாவும் முதலிடத்தை பகிர்ந்து கொண்டுள்ளனர். மூன்றாம் இடத்தில் அவுஸ்திரேலிய வேகப்பந்துவீச்சாளர் ஹெசில்வூட் உள்ளார். எனினும், இலங்கை வீரர் ரங்கன ஹேரத் 4ஆவது இடத்தினைப் பெற்றுக்கொண்டுள்ளார். துடுப்பாட்ட வீரர்கள் வரிசையில் அவுஸ்ரேலிய அணியின் ஸ்டீவன் சுமித் முதலிடத்தைப் பெற்றுள்ளார். 2ஆவது இடத்தில் நியூசிலாந்தின் கேன் வில்லியன்சனும், 3ஆவது இடத்தில் இங்கிலாந்தின் ஜோ ரூட்டும் உள்ளனர். இந்திய வீரர் விராட் கோஹ்லி நான்காவது இடத்தில் உள்ளார்.



# பாக். சுப்பர் லீக் சூதாட்டம்; இர்பானுக்கு போட்டித் தடை

டுபாயில் கடந்த மாதம் 7ஆம் திகதி ஆரம்பமான 2ஆவது பாகிஸ்தான் சுப்பர் லீக் டி20 தொடரில் இஸ்லாமாபாத் யுனைடெட் அணிக்காக விளையாடிய மொஹமட் இர்பான் மற்றும் பாகிஸ்தான் அணியின் மற்றுமொரு முன்னாள் வீரரான சாஷைப் ஹஸன் ஆகியோருக்கு பாகிஸ்தான் சுப்பர் லீக் சூதாட்ட சர்ச்சை தொடர்பில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற விசாரணைகள் தொடர்பில் வாக்குமூலம் ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்காக அந்நாட்டு ஊழல் தடுப்பு பிரிவினால் கடந்த வாரம் அழைப்பாணை விடுக்கப்பட்டிருந்தது.



இதன்படி, இர்பானிடம் திங்களன்றும், சாஷைப் ஹஸனிடம் செவ்வாயன்றும் வாக்குமூலம் பெற்றுக் கொள்ளப்பட்டது. இந்நிலையில், குறித்த சூதாட்டத்துடன் தொடர்புடையதாகவும், சூதாட்டத் தரகருடன் தொலைபேசியில் சம்பவதினத்தன்று உரையாடியதாகவும் குற்றம்சாட்டப்பட்டுள்ள இஸ்லாமாபாத் யுனைடெட் அணியில் இடம்பெற்றிருந்த வேகப்பந்துவீச்சாளர் மொஹமட் இர்பான், நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் ஊழல் எதிர்ப்பு பிரிவில் ஆஜராகி வாக்குமூலம் அளித்துள்ளார். சுமார் ஒன்றரை மணித்தியாலங்களாக இடம்பெற்ற இவ்விசாரணையின் போது கைத்தொலைபேசி மற்றும் சூதாட்டத்துடன் தொடர்புடைய தகவல்களை ஊழல் எதிர்ப்பு பிரிவிடம் வழங்குமாறு இதன் போது இர்பானிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், தனது தாயாரின் திடீர் மரணத்தினால் மன உளைச்சலுக்கு ஆளாகியிருந்த இர்பான், குறித்த விசாரணையின்போது சூதாட்டம் தொடர்பில் எந்தவொரு வெளிப்படையான கருத்தையும் வெளியிடவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது. இதன்படி மொஹமட் இர்பானுக்கு இந்த சூதாட்டத்துடன் தொடர்புடையதாகத் தெரிவிக்கப்பட்டு பாகிஸ்தான் கிரிக்கெட் சபையால் போட்டித் தடை விதிக்கப்பட்டுள்ளது.

# 2022 பொதுநலவாய நாடுகளின் போட்டிகளிலிருந்து டர்பன் விலகல்

பீ.எப்.எம் றிஷாட்

DURBAN2022
XXII COMMONWEALTH GAMES

2022ஆம் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் போட்டிகளை நடத்துவதிலிருந்து தாம் விலகிக் கொள்வதாக தென்னாபிரிக்க நேற்று முன்தினம் அறிவித்தது. ஆபிரிக்க கண்டத்தில் முதற் தடவையாக நடைபெறவிருந்த பொதுநலவாய நாடுகளின் விளையாட்டுப் போட்டிகளை 2022ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவின் டர்பன் நகரில் நடத்துவதற்கு அந்நாட்டு அரசு விண்ணப்பிருந்தது. எனினும், பொருளாதார நெருக்கடி, டர்பன் நகரில் உரிய வசதிகள் இல்லாமை மற்றும் போதியளவு அனுசரணையாளர்கள் கிடைக்காத போன்ற காரணத்தால் அப்போட்டிகளை நடத்துவதிலிருந்து விலகிக் கொள்வதாக தென்னாபிரிக்காவின் விளையாட்டுத்துறை அமைச்சு, பொதுநலவாய நாடுகள் விளைாட்டு போட்டிகளின் அமைப்புக்கு அறிவித்துள்ளது.

2022 பொதுநலவாய நாடுகளின் போட்டிகளை நடத்துவதற்கு கனடாவின் எட்மொன்டன் மற்றும் தென்னாபிரிக்காவின் டர்பன் ஆகிய நகரங்கள் விண்ணப்பிருந்தது. எனினும், கனடா தாம் போட்டிகளை நடத்துவதிலிருந்து விலகிக்கொள்வதாக அறிவித்தது.

இந்நிலையில், 2022 பொதுநலவாய நாடுகளின் போட்டிகளை நடத்துவதற்கான உரிய வேலைத்திட்டங்களை சமர்பிக்க தென்னாபிரிக்காவுக்கு பொதுநலவாய நாடுகளினால் வழங்கப்பட்ட காலக்கெடு நிறைவடைந்துள் நிலையில், தென்னாபிரிக்கா தாமாகவே முன்வந்து விலகிக் கொள்வதாக அறிவித்துள்ளது.

எனவே, குறித்த போட்டிகளை நடத்துவதற்கு பிரித்தானியாவின் லிவர்பூல் மற்றும் பேர்மிங்ஹம் ஆகிய நகரங்கள் விண்ணப்பிக்கவுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன. உலகின் 2ஆவது ஒலிம்பிக் போட்டிகள் என வர்ணிக்கப்படுகின்றது. அத்துடன் ஒவ்வொரு 4 வருடங்களுக்கு ஒருமுறை நடைபெறுகின்ற இவ் விளையாட்டு விழாவின் அடுத்த அத்தியாயம் அடுத்த வருடம் அவுஸ்திரேலியாவின் கோல்ட்கோஸ்ட் நகரில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.





நிந்தவூர் அல்-அஸ்ஹர் கல்லூரியின் இல்ல விளையாட்டு போட்டியின் இறுதி நிகழ்வு கடந்த திங்கள் மாலை கல்லூரியின் அதிபர் எஸ்.எம்.எம்.ஜாபீர் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக திகாமடுல்ல பாராளுமன்ற உறுப்பினரும் சுகாதார, ஊட்டச்சத்து மற்றும் சுதேச மருத்துவத் துறை பிரதி அமைச்சர் பைசால் காசீம் கலந்து கொண்டார். இம்முறை போட்டிகளில் அறவி இல்லம் (நிலம்) 205 புள்ளிகளை பெற்று நடப்பாண்டுக்கான சாம்பியனாகியது. முறையே தாரிக் இல்லம் (மஞ்சள்) 184 புள்ளிகளையும், ஸூஹர் இல்லம்(சிவப்பு) 182 புள்ளிகளையும், கல்தூன் இல்லம் (பச்சை) 150 புள்ளிகளையும் பெற்றது. வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பிரதம அதிதியினால் வெற்றிக் கிண்ணங்களையும், சாண்றிதழ்களையும் வழங்கிவைதை படத்தில் காணலாம். (யூ.கே. காலித்தீன்)

Printed and Published by Freelanka Media Ltd. #156, Hospital Road, Kalubowila, Dehiwala. on 15TH MARCH 2017